
கோகுலம்

GOKULAM

அக்டோபர் '89 ரூ. 3/-





DIPR/1513/MS/89-HTA



கோகுலம்

1989 அக்டோபர் மாத இதழ்

மலர் — 7 * இதழ் — 9

அன்புத் தம்பி, தங்கைகளே!

மனம் கனிந்த வாழ்த்துக்கள்.

வருடத்திலேயே இந்த அக்டோபருக்கு ஒரு தனிச் சிறப்பு உண்டு.

...இந்த வையத்து நாட்டில் எல்லாம் தாழ்வுற்று வறுமை மிஞ்சி, விடுதலை தவறிக் கெட்டுப் பாழ்பட்டு நின்றதாமோர் பாரத தேசம்தன்னை வாழ்விக்க வந்த காந்தி மகாத்மா' இந்த மண்ணில் பிறந்த நாள் அக்டோபர் 2.

வாழ்ந்து காட்டி வாழச் செய்ய வழிகாட்டியவர் அல்லவா மகாத்மா!

தனி மனிதராய் அவரைப் பிரித்து அவரது வாழ்வில் நடந்த நிகழ்ச்சிகளைக் கவனிக்கும்போதுதான் அவர் எப்படி மகாத்மா ஆனார் என்பது புரியும். அவரது குண நலன்களைச் சீர்தூக்கிப் பார்த்து நாமும் பின்பற்றினால்...

நாம் மகாத்மாவாக இயலாது. ஆனால் மகாத்மாக்களின் வாழ்த்தைப் பெறும் நல்ல பிரஜையாக முடியும். உதாரணமாக —

காந்திஜியைப் பார்க்க அன்றைய அரசு தூதரான ஒரு வெள்ளைக்காரர் வந்திருந்தார். சுதந்திரப் போராட்டம் பற்றிக் கன்னாபின்னா வென்று விமரிசித்து ஒரு கடிதம் தந்தார். காந்திஜி அதைப் பார்த்து விட்டு அமைதியாகக் கசக்கிக் குப்பைத் தொட்டியில் போட்டுவிட்டார். வெள்ளைக்காரருக்கு ஆத்திரம். 'அதிலே உங்களுக்கு உபயோகமாய் எதுவுமே இல்லையா?' என்று கேட்டார்.

காந்திஜி, 'இருந்ததே! அதை முதலிலேயே எடுத்து வைத்துக் கொண்டேனே!' என்று அந்தக் கடிதத்திலிருந்து தாம் எடுத்து வைத்திருந்த குண்டூசியைக் காட்டிச் சிரித்தாராம்.

இந்த நிகழ்ச்சி சாதாரணமானதாய் உங்களுக்குத் தோன்றலாம். இதிலிருந்து பிறக்கும் படிப்பினைகள் யாவை? கூர்ந்து கவனியுங்கள் புரியும்.

1. ஒரு லட்சியத்துக்காகப் பாடுபடும்போது எத்தனை பெரிய இடத்திலிருந்து எதிர்ப்புக் கிளம்பினாலும் அஞ்ச வேண்டாம்; அலட்சியப்படுத்திவிடுங்கள்.

2. எந்தத் தீமையிலிருந்தும் குண்டூசியத்தனை நன்மை இருந்தாலும் அதை ஏற்றுக் கொள்ளுங்கள்.

3. எதிலும் உள்ளூரத் தீவிரம் இருக்கலாமே தவிர, வெளிப் பார்வைக்கு நகைச்சுவை உணர்வு மேலோங்கி நிற்க வேண்டும்.

காந்திஜியிடம் இருந்த தெய்வ பக்தி, தேச பக்தி, நேர்மை, ஒழுக்கம், ஒருமைப்பாடு, பண்பாடு இவற்றுக்கெல்லாம் ஆதார சுருதியாய் இருந்த அந்த மகத்தான சக்தி எது?

சத்தியம்! அந்த ஒன்றை மட்டும் கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டு விட்டால் மற்ற உயர்வுகள் எல்லாம் தன்னால் தொற்றிக் கொண்டு பின்னாலேயே வந்துவிடும். ஆம், அதனால்தான் காந்திஜியின் சுயசரிதைக்குப் பெயரே 'சத்திய சோதனை' என்று ஆயிற்று.

சத்திய சோதனைகள் உங்கள் வாழ்விலும் ஏற்பட வேண்டும்; அதில் நீங்கள் வெற்றிபெற காந்திஜியின் வாழ்க்கை உங்களுக்கு வழி காட்டுமாக!

அன்பு அண்ணன்,

கௌரவ்

(கௌரவ ஆசிரியர்).

உயிர்களிடத்து அன்பு வேணும். — தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்.
— பாரதியார்.

சிவப்புத் தொப்பி

நமது பாரத நாட்டில் மொத்தம் இருபத்தைந்து மாநிலங்கள் உள்ளன என்பது உங்களுக்குத் தெரியும் அல்லவா?

அவற்றில் ஒன்று உத்திரப் பிரதேசம். அதுதான் மற்ற எல்லா மாநிலங்களையும் விட மிகவும் பெரியது. அதன் தலை நகரம் லக்னோ.

ஒரு சமயம், அந்நகரத்தின் முக்கிய விளையாட்டு மைதானத்தில், ஒரு கிரிக்கெட் மேட்ச் நடந்தது. ஆட்டத்தைப் பார்க்க, மைதானத்தில் நல்ல கூட்டம். அன்று ஞாயிற்றுக்கிழமை வேறு. அனைவருக்கும் விடுமுறை நாள். எனவே, நகரின் பல்வேறு நிறுவனங்களின் அதிகாரிகளும் ஊழியர்களும் அங்கு வந்து கூடிவிட்டனர். அத்துடன், மாநில அமைச்சர்களிலும் சிலபேர் வந்து அமர்ந்திருந்தார்கள்.

ஆட்டம் படு சுறுசுறுப்பாக நடந்து கொண்டிருந்தது. அப்போது, மைதானத்தில் திடீரென்று ஓர் அசம்பாவிதம் நடந்து விட்டது.

ஒரு ஆட்டக்காரர் 'அவுட்' ஆனார். நடுவரும் அதை அறிவித்து விட்டார். உடனே அந்த ஆட்டக்காரர் என்ன செய்ய வேண்டும்?

நீங்கள் எல்லாம் தான் கிரிக்கெட் ஆட்டத்தில் புலிகள் ஆயிற்றே....!

'நடுவர் சொல்லி விட்டால், அதை ஏற்றுக் கொண்டு, உடனே அவர் மைதானத்தை விட்டு வெளியேறி விட வேண்டும் இல்லையா?

ஆனால், அந்த ஆட்டக்காரர் அவ்வாறு செய்ய வில்லை. பிறகு என்ன செய்தார்.

''நான் 'அவுட்' ஆகவில்லை. இதை நான் ஏற்க மாட்டேன். இது அநியாயம். அக்கிரமம்,'' என்று உரக்கக் கூவினார். அது மட்டுமா? நடுவரைப் பார்த்துக் 'கன்னா.... பின்னா....' என்று திட்டவும் தொடங்கி விட்டார்.

அதற்குள், 'ஃபீல்டிங்'கில் பரவலாக நின்றிருந்த எதிர் அணியின் ஆட்டக்காரர்கள் ஓடோடி வந்து, அந்தப் பிடிவாதக்கார வீரரைச் சூழ்ந்து கொண்டனர். அவர்கள், ''நீ அவுட் தான்... நடுவர் சொல்லி விட்டார் அல்லவா? போ வெளியே,'' என்று கூச்சலிட்டனர்.

அவர் மசிவதாக இல்லை. அவர் கத்த, இவர்கள் கத்த ஏக ரகளை. கூச்சல்... குழப்பம், ஒரே பதற்றம்.



ஜானகி மணாளன்

அதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த ரசிகர் கூட்டம் அமைதியாக இருந்து விடுமா? தம் பங்கிற்கு அவர்கள் 'ஆய்.... ஊ.....ய்!' என்று கூச்சலிடத் தொடங்கி விட்டனர். இரு அணிகளையும் சேர்ந்த துடிப்பான சில ரசிகர்கள், தட்டித் தடுப்புகளைத் தாண்டி, மைதானத்திற்குள்ளேயே நுழைந்து விட்டனர்.

அதற்குப் பிறகும் கூட, எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருக்க முடியுமா? கிரிக்கெட் மேட்ச்சுக்கு ஏற்பாடு செய்தவர்கள், போலீசாரின் உதவியை நாடி விட்டனர். விரைந்து வந்த போலீசார், நிலைமையைச் சரி செய்யும் முயற்சியில் ஈடுபட்டனர். அதற்குள் நூற்றுக் கணக்கான ரசிகர்கள் மைதானத்துக்குள் நுழைந்து விட்டனர். எனவே, போலீசார், அவர்கள் மீது இலேசான தடியடிப் பிரயோகத்தில் ஈடுபட வேண்டியதாயிற்று. போலீஸ், தடியெடுத்து அடிக்கிறது என்றதும், உள்ளே நுழைந்திருந்த ரசிகர் கூட்டம், தமது இடங்களுக்கு விரைந்தோடி விட்டனர். அத்துடன் கூட்டமும் கட்டுக்குள் வந்து விட்டது.

எனினும், ஆட்டக்காரர்களிடையே அமைதி ஏற்பட வில்லை. அவர்கள் ஒருவரை ஒருவர் தள்ளிக் கொண்டிருந்தனர். எனவே, சில போலீஸ்காரர்கள், அவர்களிடம் சென்று, அவர்களை அமைதிப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டனர். அதைக் கண்ட சில ஆட்டக்காரர்களுக்குக் கோபம் வந்து விட்டது. 'போலீசார் மைதானத்துக்குள் வந்தது போதாது என்று, எங்களையும் நெருங்கி வந்து அவர்கள் எப்படிக் கண்டிக்கலாயிற்று?' என்று, தாறுமாறாகக் கூச்சல் எழுப்பிக் குதிக்கத் தொடங்கி விட்டனர் அவர்கள்.

சுற்றி நின்ற சிலர் அவர்களைச் சமாதானப் படுத்த முயன்றனர். எல்லாம் செவிடன் காதில் ஊதப்பட்ட சங்கொலியாக வீண்!

ஓர் ஆட்டக்காரர், "போலீசின் இந்த அத்துமீறிய செயல்களுக்கு, உடனே நாம் அவர்களின் உயர் அதிகாரிகளிடம் புகார் செய்ய வேண்டும்," என்று சூடேற்றினார்.

"ஆம், அதுதான் சரி," என்று சிலர் ஆமோதிக்க அதற்குள் சிலர், "உயர் அதிகாரிகள் என்ன? இதோ... இங்கே பெவிலியனில், அவர்களுடைய போலீஸ் துறை அமைச்சரே வந்திருக்கிறாரே, அவரிடமே போய்ச் சொல்லிவிடுவோமே...." என்று யோசனை கூறினார்.

"அது தான் சரி. உடனே புறப்படுங்கள்," என்றவாறு அனைவரும் கூட்டமாகப் பெவிலியனை நோக்கி விரைந்தனர். ஒருவர், முன்னால் ஓடிச் சென்று சந்திப்புக்கு ஏற்பாடு செய்தார்.



அந்தப் போலீஸ் அமைச்சர் மிகவும் நல்லவர். குட்டையான உருவம். மூர்த்திதான் சிறியதே தவிர, அவருடைய கீர்த்தி பெரியது. மிகவும் திறமைசாலி. அமைதியானவர், அத்துடன் தீரமும் துணிவும் மிக்கவர். இனிமையாகப் பழகுவார். சமயோ

சித புத்தி மிக்கவர். அரவணைத்துச் சென்றே அரிய பல காரியங்களைச் சாதித்துவிடும் திறமை மிக்கவர்.

அவர் விளையாட்டு வீரர்களை அன்புடன் வரவேற்றார். வீரர்கள் தமது மனக்குறையை எடுத்துரைத்தனர். அவற்றை மிகவும் பரிவுடன் கேட்டுக் கொண்டார்.

கடைசியில், ''சரி, இந்த விஷயத்தில் நான் என்ன செய்ய வேண்டும் என்று எதிர் பார்க்கிறீர்கள்?'' என்று கேட்டார்.

உடனே, துடிப்பான ஒரு வீரர், வேறு என்ன ஐயா? நாளை முதல், நாங்கள் விளையாடும் மைதானத்தில், சிவப்புத் தொப்பிகள் எதுவும் எங்கள் கண்ணில் படக் கூடாது அவ்வளவுதான்,'' என்றார்.

உடனே அமைச்சரிடம் ஓர் இனிய புன்னகை! பிறகு சொன்னார். ''அவ்வளவு தானே? கவலையை விடுங்கள். அதற்கு நான் உத்திரவாதம். நாளை முதல் ஒரு 'சிவப்புத் தொப்பி' கூட, உங்கள் கண்ணில் தென்படாது போதுமா?'' என்றார்.

விளையாட்டு வீரர்களிடம் மகிழ்ச்சி! ஆட்டத்தில் புரிந்த சாதனையைவிட, அதை ஒரு பெரும் சாதனையாக எண்ணி, மலர்ந்த முகத்துடன் விடைபெற்றனர்.

'சிவப்புத் தொப்பி' என்பது யாரைக் குறிக்கும் தெரியுமா? போலீஸ்காரர்களைத் தான். ஏன் தெரியுமா? அப்போதெல்லாம், போலீஸ்காரர்கள் சற்று உயரமான சிவப்பு நிறத் தொப்பியைத் தலையில் அணிந்திருப்பார்கள். நம் தமிழ் நாட்டில் கூட அப்படித்தான் இருந்தது. இப்போது அதை மாற்றிவிட்டார்கள்.



சின்னஞ்சிறிய போதனைக் கதைகள்

மொத்தம் 27 சின்னஞ்சிறு கதைகள். ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையில் நீதி போதனை செய்கிறது. புத்திசாலித்தனமான, சாமர்த்தியத்தைப் போதிக்கும் கதைகளும் உண்டு. உதாரணத்துக்கு ஒன்று:

தான் கண்ட கனவுக்குப் பலன் கேட்கிறான் மன்னவன். சோதிட அறிஞரோ, 'நீங்கள் இறப்பதற்கு முன்பே உங்கள் பிள்ளைகளும் உறவினர்களும் இறந்து விடுவர்,' என்று பலன் கூற, அதனால் கோபமடைந்த அரசன், அறிஞரைச் சிறையிலடைக்கும்படி ஆணையிடுகிறான்.

அடுத்து வந்தவரிடம் பலன் கேட்கிறான் மன்னன். உண்மையில் முன்னவர் சொன்னது மெய்தான் என்று சோதிடம் கூறினாலும் இரண்டாமவர் அதே விஷயத்தை இப்படிச் சொல்கிறார்: ''உங்கள் பிள்ளைகள், உறவினர்களைவிட நீங்கள் வெகு நாட்கள் வாழ்வீர்கள்.''

இதனால் மகிழ்ந்த மன்னன் அவருக்குப் பரிசு வழங்கிப் பாராட்டுகிறான்!

(மணிமேகலை — பக். 130 — ரூ. 14).

சிறியவர்களுக்கான போதனைக் கதைகள் — பாகம்-2

இந்தச் சிந்தனைக் கதைகளின் கதாபாத்திரங்கள் எல்லாம் பிராணிகள், பறவைகள், அஃறிணைப் பொருள்கள்தான். அவை பேசிக் கொள்கின்றன; விவாதிக்கின்றன; எண்ணத் தூண்டுகின்றன; படிப்பினை போதிக்கின்றன. சிந்திக்கத்தூண்டும் கவிதை அம்சம் கொண்டவை.

பாருங்களேன்: ஒரு வானம்பாடி மொட்டாக இருந்த பூக்களைப் பார்த்து, 'என் பாட்டைக் கேட்டுத்தான் இப்பூக்கள் மிகவும் அழகாக மலர்கின்றன,' என்று எண்ணி, முன் எப்போதையும் விட மிக நன்றாகப் பாடியதாம்.

விளையாட்டு வீரர்கள் மகிழ்ச்சியாகச் சென்ற பிறகு, அந்தப் போலீஸ் அமைச்சர், தனது துறையின் அதிகாரிகள் சிலரைத் தனியாகக் கூப்பிட்டுச் சில உத்திரவுகளைப் பிறப்பித்து விட்டுச் சென்றார்.

மறுநாள் வழக்கம் போல் கிரிக்கெட் ஆட்டம் தொடங்கும் நேரம். விளையாட்டு வீரர்கள் மிக்க மகிழ்ச்சியுடன் மைதானத்துக்குள் நுழைந்தனர். ஆனால், அடுத்தகணம் அவர்களின் மகிழ்ச்சி போன இடம் தெரியவில்லை. ஏன் தெரியுமா?

முதல் நாள் போலீஸ் அமைச்சரிடம் கேட்டுக் கொண்டவாறு, மைதானக் காவலுக்குப் போலீசார் வந்திருக்க மாட்டார்கள் என்று நினைத்துக் கொண்டிருந்தனர். அப்படி நடைபெறவில்லை. மைதானம் முழுதும் போலீசார்! சில வீரர்கள் திடுக்கிட்டனர். சிலர் ஆத்திரப் பட்டனர். போலீஸ் அமைச்சர், தான் கொடுத்த வாக்கை இவ்வாறு காற்றில் பறக்க விட்டுவிட்டாரே என்று சிலர் கொதிப்படைந்தனர். அவர்களிடம், உடனே அந்த அமைச்சரைக் கண்டு, 'ஏன் இப்படிச் செய்தீர்கள்? என்று கேட்டுவிட வேண்டும் என்ற துடிப்பு! எல்லாரும் கிளம்பிச் சென்றனர்.

போலீஸ் அமைச்சர் வீரர்களை அன்புடன் வரவேற்றார். தனக்கு முன் இருந்த ஆசனங்களில் அமரச் செய்தார். வீரர்கள், மெல்லத் தாங்கள் வந்த விவரம் பற்றிப் பேசத் தொடங்கினர்.

''ஐயா, எங்களை இப்படித்தாங்கள் 'ஏமாற்றலாமா...?'' என்று கேட்டனர்.

உடனே அமைச்சர், ''ஏமாற்றினேனா? நானா? இல்லையே!'' என்

அந்த மொட்டுக்களோ, 'நாம் மலரும் தருவாயில் இருப்பதைக் கண்டு மகிழ்ந்துதான் இந்த வானம்பாடி இவ்வளவு இனிமையாகப் பாடுகின்றது போலும்,' என்று நினைத்து, அந்தப் பெருமையில் திளைத்து, முன்பு எப்போதையும் விட மிக அழகாக மலர்ந்தனவாம்!

இப்படி உலகத்து இயல்பை நாசூக்காய் வெளிப்படுத்திச் சிந்திக்க வைக்கும் இந்த இரண்டாவது தொகுப்பில் உள்ள கதைகளின் எண்ணிக்கை : 27.

(பக். 74 — ரூ. 7.50 — இரண்டு புத்தகங்களும்: மணிமேகலைப் பிரசுர ஆசிரியர் குழு — மணிமேகலைப் பிரசுரம், த. பெ. எண். 1447, 4, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், சென்னை — 600 017.)

அறிவியல் அறிஞர்கள் — மு. சாயபு மரைக்காயர்

அகில உலகப் புகழ்பெற்ற அறிவியல் அறிஞர்கள் ஐம்பது பேரைத் தேர்ந்தெடுத்து, அவர்களைப் பற்றியவிவரங்களைஎளிமையான பாடல்களாய்த் தந்திருக்கிறார் ஆசிரியர்.புதுமையான முயற்சி.

நெருடலான விஞ்ஞான விவரங்களுடன் உரைநடையிலேயே படித்து ஒரு மாதிரி அலுப்பில் இருந்தவர்களுக்கு இந்தப் பாடல் அறிமுகம் சற்று இதமாகக் கூட இருக்கிறது. ஒவ்வொரு பாடலுக்கும் முன்னறிவிப்புப் போல அவர்களது 'பயோடேட்டா' கொடுத்திருப்பது படிக்கத் தூண்டுகிறது. இந்திய விஞ்ஞானிகள் நெருக்கமான பரவசம் தருகிறார்கள்.

நமது முத்தண்ணனுக்குக் காணிக்கையாக்கியிருக்கும்இந்தநூல்தமிழ்நாடுகுழந்தை எழுத்தாளர் சங்கமும் ஏவி. எம். அறக்கட்டளையும் இணைந்து நடத்திய குழந்தை இலக்கியப் போட்டியில் தங்கப் பதக்கம் பெற்றிருப்பது தனிச் சிறப்பு.

(கங்கை — பக். 120 — ரூ. 10.)

சிறுவர் நீதிக் கதை அமுதம் — ஜானகி மணாளன்

உங்களுக்குப் பழக்கப்பட்ட ஆசிரியரின் நடைபற்றி அதிகம் சொல்ல வேண்டியதில்லை. (பெரியவர்களுக்காக எழுதிக் கொண்டிருந்த இவரை 'பாலர்களுக்கும் எழுதலாமே!' எனக் கூறி ஊக்கப்படுத்தி, அதன் மூலம் இவரது இலக்கியப் பாதையின் போக்கை மாற்றியவர் அழ. வள்ளியப்பா என்று நன்றியுடன் நினைவு கூர்கிறார்.)

நீதி போதனைக் கதைகளில் நமது புராணங்களை மிஞ்ச முடியுமா? அதை உணர்ந்துதான் பெரும்பாலான கதைகளை அதிலிருந்து உரித்தெடுத்துத் தந்திருக்கிறார். பத்து முத்தான கதைகள். நல்ல நீதிநெறிகளை மனத்தில் ஆணி அடித்துத் தொங்க விடுகின்றன. இனிய எளிய நடை. லதாவின் ஓவியங்கள் சுவை சேர்க்கின்றன.

(பக். 88 — ரூ. 7 — இரண்டு புத்தகங்களும்: கங்கை புத்தக நிலையம், 13, தீனதயாளு தெரு, தியாகராய நகர், சென்னை — 600 017)



* லால் பகதூர் சாஸ்திரி

றார் ஆச்சரியத்துடன்!

"என்ன ஐயா இப்படிச் சொல்கிறீர்கள்? நேற்று நீங்கள்தானே ஐயா, எங்களுக்கு உறுதி அளித்தீர்கள்?" என்றனர் வீரர்கள்.

குறுக்கிட்ட அமைச்சர், "என்னவென்று உறுதி சொன்னேன்?" என்றார்.

"இனிமேல் விளையாட்டு மைதானத்தில் ஒரு சிவப்புத் தொப்பி கூட எங்கள் கண்ணில் தென்படாது என்றீர்களே..!" என நினைவு படுத்தினர் வீரர்கள்.

"ஆமாம் சொன்னேன். அதற்கு ஏற்ப உத்திரவைப் பிறப்பித்து விட்டேனே!" என்றார் அமைச்சர்.

உடனே வீரர்கள், "அப்படி இருந்தும், இன்று மைதானம் முழுதும் ஒரே சிவப்புத் தொப்பியாக நிரம்பி வழிகிறார்களே ஐயா?" என அங்கலாய்த்தனர்.

அவசரமாகக் குறுக்கிட்டார் அமைச்சர். "இருக்காதே! அவர்கள் இன்று சிவப்புத் தொப்பி அணிந்து வந்திருக்கமாட்டார்களே!" என்றார்.

வீரர்கள் திடுக்கிட்டனர். "ஐயா... தாங்கள் என்ன சொல்கிறீர்கள்?"

"ஆம் வீரர்களே. 'இனிமேல் விளையாட்டுமைதானத்தில் சிவப்புத்தொப்பிகள் எதுவும் எங்கள் கண்ணில் படக்கூடாது' என்று கேட்டுக்கொண்டீர்கள். அவ்வாறு அதன்படியே உங்களிடம் நான் உறுதி கூறி விட்டு, உடனே போலீஸ்துறை அதிகாரிகளை அழைத்து, 'இனிமேல் விளையாட்டு மைதானத்துக்குச் சிவப்புத் தொப்பி அணிந்து கொண்டு செல்ல வேண்டாம்; பதிலுக்குக் காக்கித் தொப்பி அணிந்து கொண்டு போங்கள்,' என்று உத்திரவிட்டு விட்டேனே... இன்று அவர்கள் காக்கித் தொப்பியுடன் வந்திருப்பார்களே... அதை நீங்கள் கவனிக்கவில்லையா?" என்று எதிர்க் கேள்வி எழுப்பினார் அந்தப் போலீஸ் அமைச்சர்.

வீரர்களுக்கு என்ன பதில் கூறுவது என்று புரியவில்லை. அனைவரும் திகைத்து நின்றனர்.

அவர்கள் 'சிவப்புத் தொப்பி' கண்ணில் படக் கூடாது என்று கேட்டது. 'இனி போலீஸ்காரர்களே மைதானத்துக்கு வரக் கூடாது' என்ற பொருளில்.

ஆனால், பல்லாயிரக் கணக்கான மக்கள் கூடும் பொது இடத்தில் போலீசார் வராமல் இருந்துவிட முடியுமா?

எனவே, அந்தப் போலீஸ் அமைச்சர் மிகுந்த சாமர்த்தியத்துடன் செயல்பட்டு 'சிவப்புத் தொப்பி வேண்டாம் என்கிறார்கள்;- இனி காக்கித் தொப்பி அணிந்து கொண்டு போங்கள்,' என்று உத்திரவு பிறப்பித்து விட்டு, நிலைமையை வெகு சாதுரியமாகச் சமாளித்து விட்டார்.

அத்துடன் நில்லாமல் அந்த விளையாட்டு வீரர்களுக்கும் உரிய முறையில் அறிவுரைகளைக் கூறி, அவர்களையும் திருப்திப் படுத்தி, இன்முகத்துடன் அவர்களை அனுப்பியும் வைத்து விட்டார்.

அந்தச் சாதுரியம் மிக்க போலீஸ் அமைச்சர் யார் என்பதை அறிய ஆவலாக உள்ளது அல்லவா? சொல்கிறேன்.

பிற்பாடு, நேருஜியின் திடீர் மறைவுக்குப் பிறகு, நெருக்கடியான அந்தக் காலகட்டத்தில், நமது பாரதத்தில் பிரதமராகப் பொறுப்பேற்று, நமது நாட்டை வழி நடத்திச் சென்ற, மறைந்த நமது முன்னாள் பிரதமர் லால்பகதூர் சாஸ்திரி அவர்களே தான், அந்தச் சாதுரியம் மிக்க உத்திரப் பிரதேச மாநிலப் போலீஸ் துறை அமைச்சர்!

என்று மீண்டும் பிறப்பாய்?



'தூய்மையின் சின்னம்' என்றே
துலங்கிடும் கதர் உடுத்தித்
தாயவள் விலங்(கு) அகற்றத்
தரணியில் அவத ரித்தாய்!
வாய்மையைக் காத்து, நாட்டின்
வறுமையைப் போக்கி; எங்கும்
நேயமே ஓங்க இந்த
நாட்டினில் நீ பிறந்தாய்!

'உண்மையின் உருவம்' என்றே
உலகினோர் புகழ்வார்; உள்ளத்
திண்மையும் திறனும் கொண்டு
தேசத்தைக் காத்து விட்டாய்!
அன்னியன் பிடியில் நின்ற
அன்னையும் விலகி, நாட்டை
ஆண்டிடும் கோலம் கண்டாய்!
அகம் எலாம் மகிழ்ந்திருந்தாய்!

அறமுடை வாழ்வு கண்டு
அடக்கத்துக்(கு) அடங்கி நின்றாய்!
உரமுடை நெஞ்சம் கொண்டு
உழைப்பெனும் பாதை தந்தாய்!
திறமுடன் திண்மை காட்டித்
தேசத்தைக் காத்த ஐயா!
கரமதைக் கூப்பி உம்மைக்
கனிவுடன் வாழ்த்து கின்றோம்!

கார்முகில் வண்ணக் கண்ணன்
கருணையின் புத்தன், யேசு,
நேரிய இஸ்லாம் கண்ட
'நபி' எனும் நாய கம்போல்
சீர்புகழ்த் தேகம் தாங்கிச்
செல்வனாய்ப் பிறந்(து) இறந்தாய்!
பாரினில் என்று மீளப்
பிறந்திடப் போகின் றாயோ!

ஜய்ராம்ஜி



பணந்துண்டு மடியிலே ஆறணா

நவகோடி நாராயணன் செட்டியார்ன்னு ஒருத்தர். ஒன்பது கோடி வட்டி மேல் வட்டி வாங்கிப் பெட்டி மேல பெட்டி அடுக்குவார். குட்டி குழந்தை ஏதுமில்லை. நூற்றுக்கு ஆறு ரூபான்னு வட்டி. ஒவ்வொரு மாதம் பத்து, பத்துக் கொடுக்கணும். கடைசியிலே கொடுக்கிற பத்து ரூபாய்க்கும் ஆறு ரூபா வட்டி கொடுக்கணும். நூற்றுக்கு ஆறு ரூபா வட்டி. பத்து மாசத்துலே கடனைத் தீர்க்கணும். முதலிலேயே வட்டி முழுவதும் எடுத்துக்குவார். பத்து மாசத்துக்கு ஆறு ரூபா வட்டின்னா பைத்தாறு அறுபது. கைல நாப்பது. அதிலே மகமைப் பணம் முக்கால் ரூபா. எழுத்தர் கூலி ஒண்ணே கால் ரூபா. இப்படி....

ரெட்டைல எட்டுத் தோசை தின்பார் அந்தச் செட்டியார். வடைன்னா ஒரு இருபத்தி நாலு. பாலுன்னா ஒரு சொம்பு பால். குட்டி யானை மாதிரி இருப்பார். எட்டு முழ வேட்டி ஒரு சுத்துக்கு வரும். கருகருகருன்னு உளுந்துக்கு நல்லெண்ணை தடவின மாதிரி. அங்கங்கே போய் வட்டி குடுத்துப் பணத்தை வசூல் பண்ணுவார்.

ஒரு கோடையிடிப் பயில்வானைப் பக்கத்திலே வெச்சிருந்தார். அவன் வாயாலே பேச மாட்டான்; கையாலே பேசுவான்.





ஒரு ஊருக்குப் போனார். முன்னே கொடுத்த பணங்கள் மூன்று லட்சம் வசூல் பண்ணினார். அப்பல்லாம் கரன்சி நோட்டு கிடையாது. தங்க நாணயம். மூணு லட்சம் தங்க நாணயத்தை வலைப் பையிலே போட்டு இடுப்பிலே கட்டிக் கொண்டார். தன் ஊருக்குப் புறப்பட்டார்.

கூட வருகிற பயிலவானுக்கு 'டிங்கி' ஜுரம் வந்து படுத்துட்டான். என்ன பண்ணுவார்? அந்த ஊர்லே இருந்தால் தனக்கு ஆபத்து வருமென்று அச்சம். ஊருக்குப் புறப்பட்டார். ஒரு வண்டியில் பேசி உட்கார்ந்தார். அச்சு முறிஞ்சுப் போச்சு. அவ்வளவு கனம். சித்தானைக் குட்டி மாதிரி நடக்க ஆரம்பிச்சாரு.

பனிரண்டு மைல் போகணும் அவருடைய ஊருக்கு. இவருக்கு நடக்க இயலவில்லை. ரொம்பச் சிரமப்பட்டு, வேர்த்து, இரண்டு மைல் போனார். இன்னும் பத்து மைல் போகணும். கொஞ்சம் மாலை நேரம். யாராவது துணை இருந்தால் நல்லதுன்னு அப்படி சுற்று முற்றும் பார்த்தார். கறுப்பா ஒரு ஆள் நின்றான்.

''நீ யாரப்பா?'' என்றார்.

''வீரப்பா'' என்றான்.

''எங்க ஊருக்குப் போகணும். துணைக்கு வர்றியா?'' என்றார்.

''செட்டியாரே, நான் எங்கே வேணும்னாலும் வர்றேன். நான் கல்யாணம் ஆகாதவன். பேச்சிலர். (பேச்சிலர்னா, 'பேச்சு இலர்' என்ற வார்த்தை பேச்சிலர்னு ஆச்சு). எங்கே வேணும்னாலும் வர்றேன் செட்டியாரே வாங்க.''

''சரி. நல்ல துணை கிடைச்சுது.''

அவன் முழு மூடன். அவனை அழைச்சிட்டு செட்டியார் நடக்கிறார். மணி எட்டு ஆயிற்று. இன்னும் அவர் ஊருக்கு எட்டு மைல் போகணும்.

அங்கே ஒரு ஆல மரத்தின் கீழே ஒரு கிழவி இட்லி சுட்டு விற்றுக் கொண்டிருந்தாள்.

''செட்டியாரே, பசிக்குது.''

எட்டு மைல் போகணுமே. எட்டணாவைக் கையிலே கொடுத்தார் ''போய்ப் பசியாறு.''

அப்ப அணாவுக்கு நாலு இட்லி ரெண்டணாவுக்கு எட்டு இட்லி இவ்ளோ பெரிசு. காரச் சட்னி எட்டு இட்லியைச் சாப்பிட்டு, சொம்புத் தண்ணியைக் குடிச்சான் கம்முன்னு. மிச்சம் ஆறணா.

''செட்டியாரே, இந்தாங்க ஆறணா.''

''அது ஆறணா? அது உன் அணா. வெச்சுக்கோ,''ன்னாரு. ஆறணாவை மடியிலே வைத்துக் கொண்டான்.

ஆறு அணா வெச்சவுடனே அவனுக்குத் தலை சுழன்றது. 'ஆ! என் மடில ஆறு அணா! ''செட்டியாரே, வாருங்கள்'' ரொம்ப ஓசை.

அப்படி நடந்து போற போது இன்னும் ரெண்டு மைல் போனாங்க. இருட்டி விட்டது. நள்ளிரவு.

''செட்டியாரே, எனக்குப் பயம்மா இருக்கு. இந்த வழியாய்க் கள்ளர்கள் வர்றாங்க. முகமூடித் திருடர்கள்

திருமுருக கிருபானந்த வாரியார்

வருகிறார்கள். நேத்து ஏழு பேரைக் கொன்னுட்டாங்க. முந்தா நாள் பன்னிரெண்டு பேர் தலையைச் சீவிட்டாங்க. ஐயா, உன்னைக் கொன்னுட்டா உன் மனைவி அழுவா. என்னைக் கொன்னுட்டா யார் அழுவார்கள்? என்னைக் கொண்டு போய் வீட்டிலே விடு. நீ ஆறு அணா வாங்கிக்க. இல்லேன்னா உன் கழுத்தைப் பிடிச்சுக் கொன்னுடு வேன்,''னான்.

செட்டியார் நடுங்கி விட்டார். இவனை ஏண்டா இட்டாந்தோம்? அம்மிக் கல்லை இடுப்பிலே கட்டி நீந்தப் பழகின மாதிரி.

''ஏய், சத்தம்''.

''பயமாயிருக்குது செட்டியாரே. அச்சமாயிருக்குது. உன் ஆறு அணா வாங்கிக்க.''

''ஏய் வாயை மூடு.''

கள்ளர்கள் வர்றாங்கன்னா அச்சம். மடியிலே கனம் இருக்குது! ஒரு ஆவாரஞ் செடி. குத்துச் செடி. அந்தச் செடியின் கீழே போய் இரண்டு பேரும் உட்கார்ந்தாங்க. செட்டியாருக்குத் தூக்கம் வருமா? மடியிலே மூணு லட்சம். ஓரணா கர்மம் செய்ய மாட்டார்.

இவன் எட்டு இட்லி தின்ன வீரப்பன். நல்லாத் தூங்கிட்டான். கீழ் மேல் இல்லாதவன். உருண்டு உருண்டு உருண்டு உருண்டு அந்த ஒத்தையடிப் பாதைக்குப் போயிட்டான். பன்னிரெண்டு மணி. முப்பத்திரண்டு கள்ளர்கள் வர்றாங்க. முகமூடி. கத்தியும் கட்டாரியுமாய்.

அவன் அயர்ந்து தூங்கறான். அந்த... வருகிற கள்ளர்கள் ஏதோ ஒரு மரத்துண்டு என்று தாண்டிக்கினே போறாங்க. கடைசிலே வந்தவன் ஒரு இளைஞன். வழியிலே மரத்துண்டு இருக்குதேன்னு காலிலே உதைச்சு உருட்டினான்.

கள்ளர் தலைவன் சொன்னாரு. ''சோமு. அது பனந்துண்டு. காலிலே உதைக்காதே. சிரா ஏறும்.'' பனை மரத்துச் சிரா.

இவன் சும்மாதானே இருக்கணும்! ரப்பர் பந்து மாதிரி எழுந்தான். ''ஓய், என்னைப் பனந்துண்டுன்னு சொல்றியே. பனந்துண்டு மடிலே ஆறு அணா இருக்குமா?''

இவன் ஆறு அணா பத்தி யார் கேட்டா? மூடன். ''என்னைப் போய்ப் பனந்துண்டு சொல்றியே. பனந்துண்டு மடில ஆறணா இருக்குமா? என்னை அடி. கையை காலை ஒடி. இங்கேயே போட்டுப் புதை. பனந்துண்டுன்னு மட்டும் சொல்லாதே. பனந்துண்டு மடிலே ஆறு அணா இருக்குமா?'' மாறி மாறிச் சொன்னான். ஆறு அணா, ஆறு அணா.. கள்ளர் தலைவன் ஒரு அடி கொடுத்து மடியிலே இருந்த பணத்தை எடுத்து, அது ஒரு அணா பணமா, இரண்டு அணா பணமான்னு அப்படித் தடவிப் பார்த்தார்.

இந்த வீரப்பன், ''செல்லுமா, செல்லாதான்னு பார்க்கறியா? செடி மறைவுல இருக்கிற 'செட்டியார் கொடுத்தாரு. அவரைக் கேளு.''

அவர் பாட்டுக்குச் சிவனேன்னு உட்கார்ந்துக்கினு இருக்காரு. இவன் சொல்றான். செடி மறைவுச் செட்டியார் சொல்லுவார்ன்னு.

அவர் குடுமியைப் பிடிச்சு இழுத்து, என்ன செய்திருப்பான்? தலையைச் சீவிட்டான் அறஞ் செய்யாத மூணு லட்சம் பணம் கள்ளன் கையிலே போயிட்டது. தீயார் செல்வம் தீமைக்குத்தான் போகும்.

ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான்
கேண்மை கடைமுறை
தான்சாந் துயரம் தரும்.

இந்த மூடனோடு பழகினதால் செட்டியார் உயிர் போய் விட்டது!

ஆகவே குழந்தைகள் எப்போதும் அறிஞர்களோடும், ஞானிகளோடும் பழகணும்.

— கிருபானந்த வாரியார் அருளிய ''சிறுவர்களுக்கு அறிவுரை'' என்ற கேஸட்டிலிருந்து.

(இவை தவிர வாரியாரின் சொற்பொழிவுகள் நாற்பது வரை வெளியிட்டிருக்கிறது. ஆனந்தா கேஸட்ஸ் நிறுவனம். முகவரி: 107, சிங்கண்ண செட்டித் தெரு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை — 600 002.

எடுத்து எழுதியவர்: 'சின்ன முருகன்'

Geethanjali

சீதாஞ்சலி

வழங்கும்

குழந்தைகளுக்கான ஆடியோ கேஸட்

குழந்தைகள் பாடல்கள்

பி. சுசீலா டி. எம். சவுந்தரராஜன்

Price Rs. 44 per set (all inclusive)





cassette 1 SIDE A

1. பச்சைக்கிளியே
2. மனிதர் வெறுக்கும்
3. தோட்டத்தில்
4. காலே நேரம்
5. உண்ண உணவு

SIDE B

1. மியாவ் மியாவ்
2. பட்டணத்தில்
3. தலையே உலகில்
4. அண்ணு அண்ணு
5. கல்லும் மலையும்.

CASSETTE 2 SIDE A

1. ஓடி விளையாடு
2. வெள்ளை நிறத்தொரு
3. தண்ணீர் கிடையாமல்
4. பாட்டியின் வீட்டு
5. பணத்தில் மிக்க

SIDE B

1. பண்டிகைக்கு
2. குருவி ஒன்று
3. அறிஞர் ஒருவர்
4. ஐந்து பூனை
5. காட்டை விட்டு

இசை

டி. எம். சவுந்தரராஜன்

வி. குமார்

பாடலாசிரியர்

அழ. வள்ளியப்பா

மஹாகவி பாரதியார்

கவிமணி.

தேசிக விநாயகம் பிள்ளை

தயாரித்து வெளியிடுபவர்கள்

SUPER AUDIO

17, RAHEJA COMPLEX, GROUND FLOOR, Opp. Anna Statue
834, MOUNT ROAD, MADRAS-600 002 Phone: 561188

STOCKIST Tamilnadu: GURU AGENCIES, 843, Mount Road, Madras-2. Ph: 567282
Karnataka: SARGAM 76, S.P. Road, Bangalore-2. Ph: 223868

TAB



* சுகதா

யில் நாலரை முதல் ஆறு மணி வரை.''

''அம்பத்தூரில் வசிக்கிறாய்; தினமும் எப்படி இவ்வளவு தூரம் வந்து பயிற்சி மேற்கொள்ள முடிகிறது?''

''அங்கிருந்து வில்லிவாக்கத்திலுள்ள சிங்காரம் பிள்ளை பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்கு நான் படிக்க வருகிறேன். காலையில் சற்றுச் சீக்கிரமாகவே புறப்பட்டு விடுவேன். பயிற்சி முடித்துப் படிக்கப் போவேன்; அதே போல மாலையில் படிப்பு முடித்துப் பயிற்சிக்கு வருவேன்.''

தடகள சாம்பியன்

சென்னையிலுள்ள ஐ.ஸி.எப். விளையாட்டுத் திடலில் பல பள்ளி மாணவ, மாணவியர் பயிற்சி பெற்றுக் கொண்டிருந்தார்கள். அவர்களில் ஒரு மாணவியான எஸ். சுகதாவை, உடன் பயிற்சி பெற்ற ஏ. ஆர். ஹேமா சில கேள்விகளைக் கேட்டு விளக்கம் பெற்றாள். அதைப் போலவே மற்றொரு சாம்பியனாகப் பயிற்சி பெற்ற மாணவன் மோகனை அவன் நண்பன் யோகானந்த் பேட்டி கண்டான். இருவரின் உரையாடல் தொகுப்புக்கள் இங்கே...

''இந்தா சுகதா, துண்டால் முகத்தைத் துடைத்துக் கொள். ஒரே வியர்வையாக இருக்கிறது பார்.''

''தாங்ஸ் ஹேமா.''

''தினமுமே இப்படிப் பிராக்டிஸ் பண்ணுகிறாயா சுகதா?''

''ஆமாம். தினமும் காலையில் ஆறு முதல் ஏழு மணி வரை; மாலை

''அடேயப்பா, டயர்டா இருக்குமே!''

''எனக்கு அப்படித் தோன்றவில்லை. என்க்கென்னவோ, விளையாடி விட்டுப் பள்ளிக்குப் போனால் தான் புதுச் சக்தி ஏற்படுவதாகவே



* ஹேமா

உணருகிறேன்.''

''ஓகோ! அப்போ நீ படிப்பிலே யும் கெட்டின்னு சொல்லு.''

''படிப்பிலே பிரமாதம்னு சொல்ல முடியாது. ஏன்னா பயிற்சி முடிஞ்சு பள்ளிக்குப் போனா, விளையாட்டுப் போட்டிகள், பயிற்சி பற்றியே மனசு சுத்திட்டிருக்கும்...''

''அப்படியா, வீட்டில் ஒன்றும் அப்ஜக்ஷன் இல்லையா? ஏன் படிக்க லேன்னு கேட்க மாட்டாங்களா?''

''அப்பா அவருடைய கல்லூரி நாட்களில் தடகள சாம்பியனாக இருந்தவர். ஆகவே நானும் சிறந்த



* சந்திரமோகன்

ஆவது எப்படி?

வீராங்கனையாக வர வேண்டும் என்ற ஆர்வம் அவருக்கு நிறைய இருக்கிறது. அம்மாவும் அப்பா மாதிரிதான். 'என்ன ஆனாலும் சரி, தினமும் ஓட்டப் பயிற்சி எடுத்துக்கத் தவறாதே,'ன்னு அறிவுரை சொல்லு



* யோகராஜ்

வாங்க.''

''பரவாயில்லையே! அப்படின்னா, உனக்குத் தேவையான உணவு வகை களை அவங்க உனக்காக ஸ்பெஷ லாத் தயாரிச்சுத் தருவாங்கன்னு சொல்லு.''

''ஆமாம். முந்தின நாள் ஊற வைச்ச கொண்டைக் கடலை, பால், பச்சை முட்டை, ராகிமால்ட், குளு கோஸ் என்று வரிசையாகக் கொண்டு வந்து வைத்து விடுவார்கள்.''

''எந்தெந்த விளையாட்டுகளில் நீ சாம்பியன்?''

''நூறு மீட்டர், இருநூறு மீட்டர் ஓட்டப் பந்தயங்கள், ஷாட் புட், லாங் ஜம்ப்.''

''அப்படியா? பள்ளி மாணவர் களுக்கான அகில இந்தியப் போட்டி களில் நீ கலந்து கொண்டிருக் கிறாயா?''

''ஆமாம். இரண்டு முறை. கடந்த பிப்ரவரி மாதம் சமீபத்தில் கலந்து கொண்டது. விளையாட்டுப் போட்டி களில் நான் வெற்றி பெறவில்லை என்றாலும், பங்கு பெற்றதையே பெருமையாகக் கருதுகிறேன். இப் போது மேலும் கடுமையாக உழைத்து

அடுத்த இந்தியப் போட்டிகளில் பங்கேற்று, வெற்றி பெற்று என் திறமையை நிரூபிக்க வேண்டும் என்று விரும்புகிறேன்.''

''இங்கே எப்படியெல்லாம் பயிற்சி பெறுகிறாய்?''

''ஓட்டம், குதித்தல், ஜாகிங், தடை ஓட்டம் என்று தினமும் இரு வேளைகளிலும் நான் பயிற்சி பெறுகிறேன்.''

''ஏதாவது போட்டிகளில் கலந்து கொள்வதற்கு முன்புதான் இப்படிப் பயிற்சி மேற்கொள்கிறாயா, அல்லது தினமுமேயா?''

''தினமும்தான். என் லட்சியம் இந்திய அரங்கில் சிறந்த வீராங்கனையாகத் திகழ வேண்டும் என்பது தான்.''

''பலே. இங்கே நீ பயிற்சி மேற்கொள்ளும் போது, உன்னுடைய ஓட்டம், நீ எடுத்துக் கொள்ளும் நேரம், முதலியவற்றை யார் கண்காணிப்பார்கள், முறைப்படுத்துவார்கள்?''

''எங்களுடைய கோச் திரு. பாலச்சந்திரன் அவர்கள்தான். அவருடைய தளராத, விடாப்பிடியான பயிற்சி முறைகள் எங்களுக்கு ஊக்கமும், உற்சாகமும் தருகின்றன.''

''எத்தனை வயது வரை விளையாட்டுப் போட்டிகளில் பங்கு பெறலாம் என்று நினைக்கிறாய்?''

''போட்டிகளில் பங்கு பெற வயது வரம்பே கிடையாது என்பேன். அதிகபட்சமாக இருபத்தெட்டு வயதுக்கு மேல் பெரும்பாலான வீராங்கனைகள் போட்டிகளில் கலந்து கொள்வதில்லை என்றாலும், அந்தந்த வயது கட்டத்திற்குத் தக்கவாறு போட்டிகள் வைத்துக் கொண்டு தான் இருக்கிறார்கள். 'ஸடரன் ரேஸ்' என்று ஐம்பது வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும் ஓட்டப் பந்தயப் போட்டிகள் வைத்திருக்கிறார்களே!''

''அட, பரவாயில்லையே. உன்னுடைய ஆர்வத்துக்கும், முயற்சிக்கும் என் பாராட்டுக்கள் சுகதா. நீ இந்திய அரங்கில், ஏன் உலக அரங்கில் சிறப்புப் பெற என் வாழ்த்துக்கள்.''

''தாங்க்யூ.''

அதே ஸ்டேடியத்தில் பயிற்சி மேற்கொண்டிருந்த சந்திரமோகனை, அவனுடைய நண்பன் யோகானந்த் சந்தித்த போது, நடைபெற்ற உரையாடல் —

''ஹலோ மோகன், என்ன இந்த ஓட்டம் ஓடறே?'' யோகானந்த், சற்றே மூச்சு வாங்க, ஓடி வந்து நின்ற தன் நண்பன் சந்திரமோகனைப் பார்த்துக் கேட்டான்.

''பயிற்சிதான். இந்த வருஷம் அகில இந்திய ரீதியில் பள்ளி மாணவர்களுக்காக நடக்கப் போகும்



• சுகதா — ஹேமா



* யோகராஜ் — சந்திரமோகன்

விளையாட்டுப் போட்டிகளில் நான் பங்கேற்கப் போகிறேனே!'' என்று பதிலளித்தான் சந்திரமோகன்.

''அட, அகில இந்திய அளவிலா? நீ எந்தெந்த விளையாட்டுகளில் தேர்ச்சி பெற்றிருக்கிறாய்?''

''ஓட்டப் பந்தயங்களில். குறிப்பாக நானூறு மீட்டர், எண்ணூறு மீட்டர் ஓட்டப் பந்தயங்களில் நான் முதலாவதாக வந்திருக்கிறேன்...''

''அதாவது, பள்ளிக்கூடப் பந்தயங்களில்?''

''ஆமாம். நான் படிக்கும், பெரம்பூரில் உள்ள செயின்ட் மேரீஸ் மெட்ரிகுலேஷன் ஹையர் செகண்ட்ரி பள்ளியில் நான் இந்த இரு ஓட்டப் பந்தயங்களில் சாம்பியனாக இருக்கிறேன்.''

''இது தவிர வேறு எந்தத் தடகள விளையாட்டுக்களில் நீ வெற்றி பெற்றிருக்கிறாயா?''

''நீளத்தாண்டுதலில். லாங் ஜம்ப்பில்.''

''அப்படியா? இந்த வெற்றிக்கு நீ எப்படியெல்லாம் பயிற்சி எடுத்துக் கொள்கிறாய்?''

''இந்த ஐ.ஸி.எப். ஸ்டேடியத்தில் தினமும் மாலை வேளைகளில் சுமார் இரண்டு மணி நேரம் ஓட்டப் பயிற்சி மேற்கொள்கிறேன்.''

''மாலையிலா? காலையில் பயிற்சி செய்ய மாட்டாயா?''

''எனக்கு நேரம் கிடைப்பதில்லை. என் வீட்டிலிருந்து இந்தப் பயிற்சிக் களம் வெகு தொலைவில் இருப்பதால் என்னால் காலையில் வர முடிவதில்லை.''

''மாலையில் என்றால், பள்ளிக்கூடம் முடிந்த பிறகு ரொம்பவும் டயர்டாக இருக்காது?''

''இல்லை. எனக்கு இது பழக்கமாகி விட்டது. அதே சமயம் சனி, ஞாயிறு கிழமைகளில் அல்லது விடுமுறை தினங்களில் காலை வேளைகளில் வந்து பயிற்சி மேற்கொள்கிறேன்.''

''அப்படியா? ஓடுவதற்கும், ஓடிச் சிறப்பாகத் தேர்ச்சி பெறுவதற்கும் உடலில் சக்தி வேண்டும். இதற்காக நீ விசேடமாக ஏதாவது உணவுப் பழக்கங்களை வைத்துக் கொண்டிருக்கிறாயா?''

''பொதுவாக எல்லா தடகளப் பயிற்சியாளர்களும் அனுசரிக்கும் உணவுப் பழக்கம்தான். அதாவது தினமும் காலையில், முந்தின நாள் நீரில் ஊறவைத்த கொண்டைக் கடலைப் பருப்பைக் கொஞ்சம் சாப்பிடுவேன். பாதி வேகவைத்த ஒரு முட்டை மற்றும் சில அசைவ உணவு வகைகள்.''

''அப்படியா? அசைவ உணவு வகைகளை உண்பதால்தான் 'ஸ்டா

மினா' கிடைக்கிறது என்கிறாயா?''

"எனக்குத் தெரியாது. சைவ உணவு வகைகளிலும் இது கிடைக்கக் கூடும். ஆனால் சிறந்த விளையாட்டு வீரரான என் அப்பா, மற்றும் மாமா ஆகியோரின் அறிவுரைப்படிதான் நான் அசைவ உணவுகளை எடுத்துக் கொள்கிறேன்.''

"ஓஹோ! நீ இப்படி விளையாட்டில் ஆர்வமாக இருப்பதால் அது உன் படிப்பைப் பாதிக்கிறதா?''

"அப்படி ஒன்றும் இல்லை. ஆனால் 'ஓகோ' என்று சொல்லும் படியாக முதல் ராங்க், இரண்டாவது ராங்க் என்று வாங்க முடிவதில்லை.''

"அதற்கு விளையாட்டுப் பயிற்சிதான் காரணமா?''

"பயிற்சி என்று குறிப்பாக இல்லை. உடம்புக்குள் ஊறிவிட்ட விளையாட்டு உணர்வுதான் காரணம். சிறந்த விளையாட்டு வீரனாக வர வேண்டும் என்ற ஆர்வம் இருப்பதால் எந்த நேரமும் அதற்காகத் திட்டமிடுதலிலும் பயிற்சியைத் தீவிரமாக்குவதிலுமே முனைப்பாக இருப்பதால் படிப்பில் ஓரளவு நாட்டம் குறைய வாய்ப்பு உண்டு.''

"கடுமையான பயிற்சியின் காரணமாக மிகவும் சோர்ந்து போய் விடுவதால் அன்றையப் பாடங்களைப் படிக்க முடியாமல் போய் விடுகிறதா?''

"சோர்வு இல்லை. அன்றைய பாடத்தைச் சுலபமாகப் பயிற்சிக்குப் பிறகும் படிக்க முடியும். ஆனால் படிப்பில் கவனம் இருக்காது என்று சொல்கிறேன். அன்றைய பயிற்சியில் ஏற்பட்டிருக்கக்கூடிய குளறுபடி, மறுநாள் அதை நிவர்த்திக்கும் முறை ஆகியவற்றில் கவனம் போய் விடுகிறது.''

"வீட்டில் திட்டு விழுமா? பாடத்தைப் படிக்காமல் இந்தப் பிள்ளை இந்த ஓட்டம் ஓடுகிறதே என்று கோபிப்பார்களா?''

"அப்பாவைப் பொறுத்தவரை அவரே ஒரு தடகள விளையாட்டு வீரராக இருப்பதால் இந்த ஓட்டம், அதற்கான பயிற்சி ஆகியவற்றின் மகிமை அவருக்குத் தெரியும். விளையாட்டில் அதிகமாக என்னை ஊக்கப்படுத்துகிறார். அம்மாவுக்குத்தான் கொஞ்சம் வருத்தம். அவர்களுக்கும் அதன் மதிப்புத் தெரிந்தாலும், 'பாடத்திலும் கொஞ்சம் கவனம் இருக்கட்டுமே' என்பார்.''

"சரி, இந்த ஐ.டி.ஐ. ஸ்டேடியத்தை ஏன் பயிற்சிக்களமாகத் தேர்ந்தெடுத்தாய்?''

"இந்த வட்டாரத்தில் காலில் 'ஸ்பைக்ஸ்' அணிந்து கொண்டு ஓடத்தக்க இடம் இது. ஓட்டப் பயிற்சியாளருக்கு என்றே விசேஷமாக 'ட்ராக்' போட்டுப் பராமரிக்கிறார்கள். அதோடு எங்கள் கோச் பாலசந்திரன் அவர்களுடைய நேரடி மேற்பார்வையும் இருக்கும்.''

"இங்கே எப்படியெல்லாம் பயிற்சி மேற்கொள்கிறாய்?''

"சுமார் இருபத்தைந்து நிமிட நேரம் தொடர்ந்து ஓடுகிறேன். தவளை குதித்தல், முட்டிக்கால் போட்டு ஓடுதல், இங்குள்ள காலரி படிகளில் குதித்து இறங்குதல், ஏறுதல், தத்திச் செல்லுதல், கைகள், தலையைச் சுழற்றுதல் போன்ற எல்லா சிறு சிறு பயிற்சிகளையும் தினமும் மேற்கொள்கிறேன்.''


"வெரிகுட் சந்திரமோகன், வரப் போகும் போட்டிகளில் நீ வெற்றி பெற எனது அட்வான்ஸ் வாழ்த்துக்கள்.'' என்று கூறி விடை பெற்றான் மோகானந்த்.

படங்கள், பேட்டி: பிரபுசங்கர்.


"என்னங்க, உங்க பையன் டீ.வி.யைப் போட்டாத்தான் படிப்பேன்னு அடம்பிடிக்கிறான்!''

"வயிற்றெரிச்சலைக் கிளப்பாதீங்க! அவன் டீ.வி.யைக் காயலான் கடையிலே தான் போடச் சொல்றான்.''

— தே. கி. சீனிவாசன், சென்னை — 18.



பிருந்தாவனக் கதையரங்கம்



அனைவரும் ஒருவரே

ஒரு பௌர்ணமி இரவு. நிலா தன் குளுமையான கதிர்களைப் பூமியில் சிந்திக் கொண்டே பூமியை வலம் வந்தது. அப்போது அதற்குத் தற்பெருமை தலை தூக்கியது.

அது விண்மீன்களை நோக்கி, "ஏ! விண்மீன்களே, நான்தான் உங்களை விடப் பெரியவன், சிறந்தவன்," என்றது.

"என்ன! நீ எங்களை விட பெரியவனா? சிறந்தவனா! நீயோ ஒருவன். நாங்களோ பல கோடி. தெரியுமா உனக்கு?"

"என் பெருமை தெரியாமல் பேசும் விண்மீன்களே, என் பெருமையைக் கேளுங்கள். பூமியில் உள்ள மனிதர்கள் அனைவரும் என் ஒளியை விரும்புகின்றனர். அழுது அடம் செய்யும் குழந்தைகளுக்கு என்னைக் காட்டி உணவு ஊட்டுகின்றனர். மனிதர்கள் என் மீது கால் வைக்கப் பல கோடி செலவு செய்கின்றனர். என் பிரகாசமான ஒளி முன் நீங்கள் இடம் தெரியாமல் மறைந்து விடுகிறீர்கள்," என்று கூறித் தானே பெரியவன் என்றது.

உடனே ஒரு விண்மீன், "ஏ! தற்பெருமை கொண்ட சந்திரனே, நீ கூறுவது உண்மை தான். ஆனால் பௌர்ணமி அன்று நீ நன்கு ஒளி வீசினாலும் பிறகு தேய்ந்து அமாவாசை அன்று முழுவதும் நீ ஒளியிழந்து விடுகிறாய். அப்போது நாங்கள் எவ்வாறு உள்ளோம்! மேலும் உன்னைச் சந்திரகிரகணம் பிடிக்கும் போது நீ என்ன பாடுபடுகிறாய்! அதனால் நான்தான் பெரியவன்," என்று கூறியது.

இவ்வாறு இவை வாதிடும்போதே பொழுது புலர்ந்தது. ஆதவன் தோன்றினான். ஆதவன் இரண்டையும் நோக்கி, "மூடர்களே, உங்களை விட நானே பெரியவன், சிறந்தவன். நான் இல்லையெனில் உலகில் உயிர்கள் வாழ இயலாது. என் ஒளிக்கதிர்கள் ஆறு, ஏரி, குளம் ஆகியவற்றின் நீரை ஆவியாக்கி மேகமாக்குவதால்தான் மழை பெய்து பூமியில் பயிர் வளர்கிறது. என்னை மையமாகக் கொண்டே அனைத்துக் கோள்களும் இயங்குகின்றன. நான் தோன்றியவுடன் எத்தனை சந்திரன் ஆனாலும், விண்மீன்கள் ஆனாலும் எனக்கு எதிராக ஒளி வீச இயலாமல் ஓடி

ஒளிந்து விடுகிறீர்கள். எனவே நான்தான் பெரியவன்,'' என்றது.


அப்போது மேகம், ''சூரியனே, நான் உன்னால் உருவாக்கப்பட்டவனே. ஆனால் என் சகோதரர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்தால் பெருமை மிக்க உன்னையே மறைத்து விடுவோம். எனவே நான்தான் பெரியவன்,'' என்றது.

அந் நேரத்தில் காற்று, ''ஏ மேகமே, உன்னை நான் குளிரச் செய்யா விட்டால், தனித் தனியாக இருக்கும் உங்களை ஒன்றாக இணைக்கா விட்டால் நீங்கள் மழையாகப் பெய்வது எங்கே? பூமியில் வளம் கொழிப்பது எங்கே? மேலும் நாங்கள் வேகமாக வீசினால் நீங்கள் கலைந்து சிதறி விடுவீர்கள். எனவே நான்தான் பெரியவன்,'' என்றது.

அனைத்தையும் அமைதியுடன் பார்த்துக் கொண்டிருந்த இறைவன், ''ஏ மூடர்களே, உலகில் உள்ள அனைவரும் ஒவ்வொரு துறையில் உயர்ந்தவர்களே! யாரும் ஒருவரை விட உயர்ந்தவரோ, தாழ்ந்தவரோ இல்லை. நீங்கள் ஒவ்வொருவரும் உங்கள் பணியை நன்கு செய்தால்தான் உலகம் நன்கு இயங்கும்,'' என்று கூறினார்.

அனைத்தும் வெட்கி தலைகுனிந்தவாறு தங்கள் பணியைத் தொடர்ந்தன.

— செல்ல. செந்தில்குமார்.



இந்தா பாட்டி, இல்லை பாட்டி!

அம்மாபட்டிணம் என்ற ஊரில் இரண்டு வயதான கிழவிகள் வாழ்ந்து வந்தனர். இருவரில் ஒரு கிழவி தன்னிடம் வந்தவர்களுக்குத் தன்னிடம் உள்ள பொருள்களைக் கொடுத்து மகிழ்ந்தாள். ஆதலால் அந்தக் கிழவியை மக்கள் 'இந்தா பாட்டி' என்று அன்புடன் அழைத்தனர். மற்றொரு கிழவியோ தன்னை நாடி வருபவர்களிடம் தன்னிடம் இருப்பதைக் கூட இல்லை, இல்லை என்று கூறுவாள். ஆதலால் அந்தக் கிழவியை மக்கள் 'இல்லை பாட்டி' என்று அழைத்தனர்.

ஒருமுறை இந்தா பாட்டியின் வீட்டின் முன் ஒரு கிளி உட்கார்ந்திருந்தது. அதை ஒரு சிறுவன் கற்களால் எறிந்து விட்டான். காயம் பட்ட அந்தக் கிளி அந்த இடத்தை விட்டு நகர முடியாமல் இருந்தது. இதைக் கண்ணுற்ற இந்தா பாட்டி அந்தக் கிளியை எடுத்துக் காயத்திற்கு மருந்து போட்டு விட்டாள். கிளியின் காயமும் ஆறியது.

அந்தக் கிளி பறந்து சென்று ஒரு பூசணி விதையை எடுத்து வந்து இந்தா பாட்டியின் வீட்டில் போட்டது. அதை எடுத்து இந்தா பாட்டி முளைக்கப் போட்டாள். அது நாளுக்கு நாள் வளர்ந்தது. அதில பல காய்கள் காய்த்தன. அதில் ஒரு காய் மட்டும் மிகப் பெரியதாக இருந்தது.

ஒரு நாள் இந்தா பாட்டி அந்தக் காயைப் பறித்து வெட்டினாள். அதன் உள்ளே ஏராளமான தங்கக் காசுகள் இருந்தன. அதை ஊர் மக்களுக்குக் கொடுத்து அவள் மகிழ்ந்தாள். அதனால் ஊர் முழுவதும் அவளைப் பாராட்டியது. இல்லை பாட்டிக்கு இதனால் மகா எரிச்சல்.

மற்றொரு முறை இல்லை பாட்டியின் வீட்டின் முன் ஒரு கிளி உட்கார்ந்திருந்தது. அதை வேண்டுமென்றே இல்லை பாட்டி கற்களால் எறிந்தாள். அந்தக் கிளியும் காயத்துடன் நகர முடியாமல் கிடந்தது. இல்லை பாட்டியும் அந்தக் கிளியை எடுத்து காயத்திற்கு மருந்து போட்டு விட்டாள். கிளியின் காயமும் ஆறியது.

அந்தக் கிளியும் பறந்து சென்று ஒரு பூசணி விதையை இல்லை பாட்டி வீட்டில் போட்டது. அந்த விதையை எடுத்து இல்லை பாட்டி முளைக்கப் போட்டாள். அந்தக் கொடியும் நாளுக்கு நாள் வளர்ந்து வந்தது. அதில் பல காய்கள் காய்த்தன. இந்தா பாட்டியின் வீட்டில் காய்த்த பெரிய காய் போல் இல்லை பாட்டியின் வீட்டிலும் காய்த்தது.

ஆனால் இல்லை பாட்டி அந்தக் காயை யார் கண்ணிலும் படாமல் மறைத்து வைத்திருந்தாள். பின் அந்தக் காயைப் பறித்து வெட்டினாள். அதன் உள்ளே ஏராளமான பாம்புகளும், தேள்களும் நெளிந்து வெளி வர அவை இல்லை பாட்டியின் மேல் விழுந்து கடித்தது. அவள் இறந்தாள்.

— எம். ஏ. ஜோசப் லூயி அருள்.

எப்படி ஜெயிக்க வேண்டும்



பல வருடங்களுக்கு முன்பு இந்தியாவில் கௌதமர் என்ற முனிவர் வாழ்ந்தார். அவர் தன்னிடமுள்ள எல்லாப் பொருள்களையும் தானம் செய்து உன்னத நிலையை அடைவதற்கு முயன்றார். அவருக்கு நசிகேதன் என்று ஒரு மகன் இருந்தான். சிறிய வயதிலேயே அவன் சாஸ்திரங்கள் கற்று நல்ல புத்திமானாக விளங்கினான்.

நசிகேதனுடைய தந்தை தனக்குச் சொந்தமானவை எல்லாவற்றையும் தானம் கொடுத்து, சொர்க்கத்தை அடையும் யக்ஞம் செய்தார். மகன் நசிகேதன் தனக்குள், "நானும் அவரைச் சேர்ந்தவன்தானே. சொர்க்கலோகப் பதவிகளை அடைய என்னையும் கொடுத்தால்தானே சாத்தியமாகும்?" என்று எண்ணித் தன் தந்தையின் அருகே சென்று, "அன்புள்ள தந்தையே, என்னை யாருக்குக் கொடுக்கப் போகிறீர்கள்?" என்றான்.

அவனுடைய தந்தை மிகவும் சிரத்தையுடன் மதச் சடங்குகள் செய்து கொண்டிருந்ததால் பதில் பேசவில்லை. நசிகேதனும் விடாமல் கேட்டுக் கொண்டேயிருந்ததால் கோபமடைந்து அவர், "உன்னை யமனுக்குத்தான் கொடுக்கப் போகிறேன்," என்று கூறி விட்டார்.

கௌதமர் தான் அப்படிக் கூறியதற்காக வருத்தமடைந்தார். ஆனாலும் பேசியவை பேசியவைதான். மாற்ற முடியாது. அவருக்கு மனம் மிகவும் வேதனையுற்றது. நசிகேதன் தன் தந்தையின் பாதங்களை வணங்கி, "நீங்கள் கவலைப்பட வேண்டாம். நானே யமனிடம் போகிறேன். நீங்கள் சொன்னதைக் கேட்பது என் கடமை," என்று கூறி, யமனின் வீட்டை அடைந்தான்.

நசிகேதன் யமனின் வீட்டிற்குச் சென்ற போது யமன் அங்கு இல்லை. அங்கேயே மூன்று நாட்கள் அவன் தங்கினான். உணவு, நீர் எதுவும் இல்லாமல் அங்கு இருந்தான். யமன் வந்த போது தன்னுடைய விருந்தாளியாக வந்த நசிகேதன் அன்ன, ஆகாரமின்றி மூன்று தினங்கள் அங்கு தங்கியதைப் பற்றிக் கேள்விப்பட்டு வருத்தம் அடைந்தான்.

நசிகேதன் தன்னிடம் வந்த காரணத்தைக் கேட்டு அவனிடம் மிகவும் மதிப்புக் கொண்டான். "என் மதிப்பிற்குரியவனே என் வீட்டில் நீ மூன்று நாட்களாக ஆகாரமோ, நீரோ அருந்தாமல் இருந்ததற்காக மூன்று வரம் தருகிறேன்," என்றான்.

நசிகேதனும், "மதிப்பிற்குரியவரே, நான் என்னுடைய ஆசைகளை ஒவ்வொன்றாக சொல்கிறேன். என்னுடைய தந்தை கௌதமர் நான் திரும்பிய பிறகு என்னிடம் அன்பாக இருக்க வேண்டும். இதுதான் என் முதல் ஆசை," என்றான்.

யமனும் அந்த வரத்தை அளித்தான்.

பிறகு நசிகேதன், "என்னுடைய நல்ல காரியங்கள் பூமியில் என்றென்றும் நிலைத்து இருக்க வேண்டும். இதுதான் என் இரண்டாவது ஆசை," என்றான்.

யமனும் "நீ நல்ல உண்மையான வழியில் சென்றால் நீ செய்யும் நல்ல காரியங்கள் பூமியில் நிலைத்திருக்கும்," என வரமளித்தான்.

நசிகேதன் பிறகு, "நான் சாவை வெற்றி கொள்வது எப்படி என்று நீங்கள் கூற வேண்டும். மேலும் மனிதன் இறப்பு என்பதே இல்லாமல் வாழ்வதெப்படி?" என்று வினவினான்.

யமன் அதற்கு, "என்னால் இந்த வரத்தைத் தர முடியாது. வேறு ஏதாவது கேள். பொருள், பதவி அல்லது நீண்ட ஆயுள் இவற்றில் ஏதாவது கேள். ஆனால் சாவை எப்படி வெற்றி கொள்வது என்பதைப் பற்றி மட்டும் கேட்காதே," என்றான்.

ஆனால் நசிகேதனோ பிடிவாதமாக, "எனக்குப் பொருளோ நீண்ட ஆயுளோ எதுவும் வேண்டாம். ஆனால் சாவை எப்படி ஜெயிக்க வேண்டும் என்று கூறினால் மட்டும் போதும்," என்றான்.

யமனும் நசிகேதனுடைய உறுதியில் மகிழ்ச்சி கொண்டு வாழ்வு, சாவு பற்றிய உண்மைகளைத் தெளிவாக அவனுக்கு எடுத்துக் கூறினான். முடிவில் நசிகேதன் மிகவும் மகிழ்ச்சி கொண்டான். யமனுக்கு நன்றி கூறித் தன் தந்தை கௌதமரிடம் திரும்பிச் சென்றான். சில காலங்களுக்குப் பிறகு உலகம் புகழும் ஒரு பெரிய முனிவராக உருவானான்.

— இந்திரா கோபாலன்.

சொன்னால் கேட்கணும்



பிரசன்னாவிற்கு வயது பதினான்கு இருக்கும். ஒன்பதாம் வகுப்பில் அடியெடுத்து வைத்திருந்தான். தன் பெற்றோருக்கு அவன் செல்லப் பிள்ளை.

ஒரு மாதத்திற்கு முன்புதான், பிரசன்னாவின் அப்பா ஒரு மோட்டார் சைக்கிளைப் புதியதாக வாங்கினார்.

முன்பே ஒருமுறை, தன் நண்பன் தியாகு தன் தந்தையின் மோட்டார் சைக்கிளைப் போலவே எடுத்து வந்து மைதானத்தில் ரவுண்டடித்துப் பெரிதாக அலட்டிக் கொண்டிருக்கிறான்.

'டே தியாகு... பார்றா என் அப்பாவும் தான் வண்டி வாங்கியிருக்கிறார். நான் பார்றா ஊர் பூரா சுத்திட்டு வர்றேன்' — என்று மனத்தில் முணுமுணுத்துக் கொண்டான். இரண்டொரு நாளில், தன் தந்தையிடமும் எண்ணத்தை வெளியிட்டான்.

"இத பார்.. பிரசன்னா... சொன்னா கேட்கணும். உனக்குத்தான் நான் புதுசா சைக்கிள் வாங்கித் தந்திருக்கிறேன் இல்லே? அதுல போய்ட்டு வா." என்று அன்போடு சொன்னார் பிரசன்னாவின் அப்பா.

பிரசன்னாவால் ஆசையை அடக்க முடியவில்லை. எப்படியாவது அப்பாவிடம் மன்றாடி வண்டியை ஓட்டி விட வேண்டும் என்று எண்ணி அப்பாவிடம் கெஞ்சலானான்.

பிரசன்னாவிற்காக அவனுடைய அம்மா, அப்பாவிடம் சிபாரிசு செய்தாள். எனினும், அவனின் அப்பா அதை ஏற்க மறுத்து விட்டார்.

ஒவ்வொரு நாளும் அப்பா ஆபீஸ் செல்லும் போது, வெளியே வந்து கேட்டைத் திறந்து "டாட்டா" சொல்லுவான் பிரசன்னா. இந்த மோட்டார் சைக்கிள் வீட்டிற்கு வந்த பின்னர், இல்லவேயில்லை. மோட்டார் சைக்கிளைத் தொட அவனுடைய அப்பா அனுமதிக்காத பின்னர் இது நிகழவில்லை.

பிரசன்னாவின் அப்பாவும், அம்மாவும். பிள்ளையின் நடவடிக்கைகளைக் கண்டு மனத்திற்குள் புழுங்கினர். இறுதியில் தன் மோட்டார் சைக்கிளை விற்று விடலாம் என தீர்மானித்து விட்டார் பிரசன்னாவின் அப்பா.

பள்ளி முடிந்ததும் சோர்வாகவே இருப்பதைப் போல காட்டிக் கொள்ளும் பிரசன்னா, அன்று வேக வேகமாக உள்ளே வந்து, "அம்மா, அப்பா எங்கே?" என்று நின்றான். மூச்சு வாங்கியது அவனுக்கு.


"என்னப்பா? என்ன ஆச்சு பிரசன்னா?" — கேட்டது அப்பாதான்.

"அப்பா, என்னை மன்னிச்சுடுங்கப்பா. நீங்க வண்டியைக் கொடுக்கலேங்கறதுக்காக உங்களைத் தப்பா நினைச்சுட்டேன்பா. இன்னைக்குக் காலையிலே தியாகு ஸ்கூலுக்கு லேட்டா வந்தான். அவனை டீச்சர் ஏன் லேட்னு கேட்டதுக்கு அவன் பின்னாடியே வந்த அவன் அப்பா சொன்னாரு, 'டீச்சர்... சொன்னா கேட்காம மோட்டார் வண்டியை எடுத்துட்டு ஸ்கூலுக்கு வந்தான் தியாகு. வர்ற வழியிலே சின்ன ஆக்ஸிடெண்ட். இன்ஸ்பெக்டர் இவனைப் பிடிச்சு லைசென்ஸ் இருக்கா, கோர்ட்டுக்கு வா அது இதெல்லாம் கேட்டு வண்டியை வாங்கி வைச்சுக்கிட்டாரு. அதனால இவன் பயந்துட்டு வீட்லே வந்து அழுதான்.."

"புரியுதுப்பா பிரசன்னா. இந்த இந்தக் காப்பியை சாப்பிடு." அம்மா சொன்னாள்.

"அப்பா, நீங்க காப்பி சாப்பிடலே?" என்று பிரசன்னா கேட்ட போது பிரசன்னா உட்பட அம்மாவும், அப்பாவும் மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கி இருந்தார்கள்.

— வெ. சங்கரநாராயணன்.



* தீப்பறவை தன் காலால் உதைத்தே ஒரு மனிதனைக் கொன்று விடும்.
* முயல் வேகமாக ஓடும் போது 13 அடி தூரம் தாண்டிக் குதிக்கும்.

— புரசை இளம்



இன்று புதிதாய்ப் பிறந்தோம்

திடீரென்று ஏதோ ஒரு விபத்தில் மாட்டிக் கொண்டு துன்புறுவதைப் போலத் துடித்துப் போனான், மனோகர்.

அடுத்த வாரத்திலிருந்து அரையாண்டுத் தேர்வு துவங்குகிறதாம். "திங்கட்கிழமை — தமிழ் முதல் தாள். செவ்வாய்க்கிழமை — தமிழ் இரண்டாம் தாள்....!" என்றெல்லாம் அடுக்கிக் கொண்டே போன ஆசிரியரின் வார்த்தைகளைக் குறிப்பெடுத்துக் கொண்டிருந்தனர் மாணவர்கள்.

இதையெல்லாம் காதில் வாங்கிக் கொள்ளாத மனோகரின் கை, பேனாவைப்பிடித்திருக்க, கண்கள் எதையோ வெறித்தன.

குழம்பிப் போன அவனது மனதைப் போலவே, நோட்டில் கோணல் மாணலாய்க் கிறுக்க ஆரம்பித்தது பேனா.

அடுத்த சில நிமிடங்களில் மணியடிக்க, ஆசிரியர் வெளியேறிய போது சக மாணவர்கள், "தாங்க் யூ சார்," என்று சொல்லுவதைப்போலத் தானும் சொல்லாமல் சிலையாக எழுந்து நின்று பின்பு உட்கார்ந்தான்.

அடுத்தடுத்த மணிகளில் ஆசிரியர்கள் வரப் போக... இயந்திரமாகவே செயல்பட்டான் மனோகர். வந்தவர்கள் பாடம் நடத்துவதை விட்டு விட்டுப் படிக்கச் சொல்லி விட்டார்கள்.

மாணவர்கள் முணுமுணுத்தபடியும் உரக்கக் கத்திய படியும் படித்துக் கொண்டிருந்தனர். இன்னும் சிலர் பக்கத்து மாணவர்களிடம் ஒப்புவித்துப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

அவர்களையெல்லாம் பார்க்கப் பார்க்க மனோகருக்குப் பொறாமையாக இருந்தது. தன்னால் முடியாதவர்களும் முடிந்தும் செயல்படாத சோம்பேறிகளும் தானே. பொறாமைப் படுகிறார்கள்! மனோகரும் அப்படித்தானோ?!

சிறுங்கை சேதுபதி

மனோகர் அப்படி ஒன்றும் முட்டாளல்ல. நன்றாகப் படிப்பவன்தான். ஓரிரண்டு முறை மாதத் தேர்வுகளில் முதலாவது வந்தவன் தான். எப்படியோ. 'நாளை... நாளை' என்று தள்ளிப் போடும் கெட்ட பழக்கம் அவனோடு ஒட்டிக் கொண்டு விட்டது.

விளைவு? இப்போது படித்துக் கொண்டிருக்கும் ஏழாம் வகுப்புவரை அடிமட்ட மதிப்பெண்களை எடுத்துப் பாஸ் பண்ண வேண்டிய நிலையில் போய் விட்டன.

கடந்த இரண்டு மூன்று மாதங்களாக நடத்திய பாடங்களை ஏழு நாட்களுக்குள் படித்து முடித்து எப்படி எழுதுவது?

இனி... இப்படியே புலம்பி என்ன ஆகப் போகிறது..? ஒவ்வொரு முறையும், 'படி... படி,' என்று தூண்டிய உள்ளுணர்வைச் சமாளித்த அவனால் இப்பொழுது விசுவரூபம் எடுத்து நிற்கும். அதே உள்ளுணர்வைச் சமாளிக்க முடியவில்லை. சங்கடப்பட்டுக் கொண்டிருந்தான்.

''காலையில் என் பையன் துடியாய்த் துடிச்சான். 'ஒ'ன்னு அழுதான். ஆனாலும் நான் விடுவதாயில்லை. ஒரே வெட்டா வெட்டிட்டேன்.''

''அய்யய்யோ... அப்புறம்?

''அப்புறமென்ன...? நகத்தை வெட்டி முடிச்சப்புறம் அழாம அமைதியாயிட்டான்.''

— வந்தை சா. இரா. மணி.



பசியை உணவு சமாளிப்பது போலப் படிப்பைக் கிரிக்கெட்டும், டி.வியும், சினிமாவும் சமாளித்து விட்டது.

இப்போது பூதமாய்க் கிளம்பி வரும் தேர்வைப் படித்ததை வைத்துக் கொண்டல்லவா சமாளிக்க வேண்டும். ஆ ன ா ல் படிக்கவில்லையே...!

இந்தக் கவலை அவனது உள்ளத்தை அரித்துக் கொண்டே இருந்தது.

இயந்திரமாக இருந்தே அன்றைய பொழுதை ஓட்டிக் கொண்டு இருந்த அவனுக்கு, பள்ளி இறுதி மணி ஒலித்தது புத்துணர்ச்சியைத் தந்தது.

பல ஆண்டுகளாய்ச் சிறையிலிருந்து விடுதலை பெற்ற கைதியைப் போல மனமகிழ்ச்சியோடு சிட்டாகப் பறந்து போனான் மனோகர். ஒரு வாரம் விடுமுறை . அதுவும் படிப்பதற்காக இனித் தேர்விற்குத்தான். பள்ளிக்கு வரவேண்டும்...

முன்பெல்லாம் பள்ளி விட்டு வரும் வேகத்தில், புத்தகப்பையைத் தூக்கி எறிந்துவிட்டுக் கிரிக்கெட் மட்டையைத் தூக்கிக் கொண்டு விளையாட ஓடும் மனோகர், இன்று அமைதியாகவே கனமான மவுனம் உடலைப் போர்த்த, உள்ளம் புழுக்கமாகி அரித்துக் கொண்டிருக்க —

வீட்டின் தெருக்கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்த மனோகர் வீட்டை நோட்டமிட்டான். சமையலறையில் அம்மா ஏதோ வேலை செய்வது தெரிந்தது...

பேசாமல் தான் ஆசையோடு வளர்த்த மல்லிகைப் பூச் செடிகளிடத்தில் போனான்.

பொழுது போகாத காலங்களிலும் போரடிக்கும் சமயங்களிலும் நீரூற்றி வளர்த்த செடிகள் இப்போது பூத்துக் குலுங்கின.

கல்வியும் அப்படித்தானே...! குடும்பக்கவலை, வேறுவிதமான துன்பங்கள் இல்லாத இளமைப் பொழுதில் கற்றுக் கொள்ளும் கல்விதானே பின்பு பல்லாண்டு காலம் பலனளித்துக்கொண்டே வருகிறது. அதனால் தானே ஔவைப் பாட்டி, 'இளமையில் கல்,' என்றாள்...



எந்த அமைதிக்காக. அந்தச் செடியிடம் சென்றானோ அதுவே அவனை வேதனைக் குள்ளாக்கியது! வெறுப்போடு செடியினடியில் பார்த்தான்.

ஏராளமான பூக்களும் இலைகளும்சருகுகளாகிக்கிடந்தன. இதைக் கண்டதும்.... அவனது சிந்தனையில் ஏதோ அகப்பட்டது.

அந்தச் செடியில் இருந்த அரும்புகளும் மொட்டுக்களும், சருகுகளும் மனித வாழ்க்கைக்கும் காலத்திற்கும் சம்பந்த முள்ளதாகத் தோன்றியது.

ஒவ்வொரு மனிதனுடைய வாழ்க்கையும் இப்படித்தானே ஆரம்பமாகி முடிகிறது! ஒவ்வொரு நாளும் இப்படித்தானே நகர்கிறது! காலையில் அரும்பாகி, பகலெல்லாம் மொட்டாகி, மாலையில் மலர்ந்து, இரவில் சருகாகி மறுநாளில் உதிர்ந்து விடுகிறதே...!

சிந்தனை தொடர, உதிர்ந்த சருகுகளைப் பார்த்தான். வெண்மை நிறம் மாறி, அழகாக இருந்தது! ஆனால் இன்று..? 'இது மீண்டும் பூவாகிச் செடியில் இருக்க முடியாதா?' எவ்வளவு பைத்தியக்காரத் தன்மான கேள்வி! நிச்சயமாக முடியாது!

அப்படியானால், இதுவரை வீணாக ஓட்டிய பொழுதுகளும் அப்படித்தானா? காலம் பொன் போன்றது என்பார்களே! பொன்னைப் போல இழந்த பின்பு திரும்பப் பெற முடியவில்லையே... அப்படியானால்... காலம் உயிர் போன்றது. ஆமாம்... போனால் திரும்பாதது போல... இழந்த காலத்தையும் திரும்பப் பெற முடியாது.

மீண்டும் வெறுப்புத் தலைதூக்க அண்ணாந்து பார்த்தான். சூரியன் மேற்கே இறங்கிக் கொண்டிருந்தது. ஒவ்வொரு நாளும், மழை விழுந் தாலும், எவ்வளவு மேகங்கள் சூழ்ந் தாலும் உதித்து ஒளிதந்து சூரியன் சிறிதும் ஓய்ந்ததே இல்லையே.

கடமை எவ்வளவு முக்கிய மானது! பகவத் கீதையில் கண்ணபிரானும் அதைத் தானே சொல்லுகிறான்!

கடமை தவறியதை உணர்த்தி... உணர்த்தி உள்ளம்படாத பாடுபடுத் திக் கொண்டிருந்தது!

திடீரென்று, 'மனத்தில் உறுதி வேண்டும்...!' என்ற பாரதியார் பாடல் காற்றில் மிதந்து வந்தது...!

அம்மாதான் ரேடியோவை ஆன் பண்ணியிருக்க வேண்டும்! இந்தப் பாடலைக் கேட்ட மனோகருக்கு என்றோ படித்த பாரதியாரின் வேறொரு பாடல் நினைவுக்கு வந்தது.!

மெதுவாக முணுமுணுத்தான்!

''சென்றதினி மீளாது மூடரே! நீர்
எப்போதும் சென்றதையே சிந்தை
செய்து
கொன்றழிக்கும் கவலைஎனுங்
குழியில் வீழ்ந்து
குமையாதீர்! சென்றதனைக்
குறித்தல் வேண்டாம்!''

அவ்வளவுதான்... மனோகருக்கு ஞானம் பிறந்து விட்டது. போன பொழுதுகள் போனதுதான்; இனித் திரும்பாது. உதிர்ந்த சருகுகள் உதிர்ந் தவைதான்; அவை இனி மலராகாது.

ஆனால் அந்த மல்லிகைச் செடி யில் இன்று மொட்டுக்கள் இருக் கின்றன. அரும்புகள் இருக்கின்றன. சில மலர்களும் இருக்கின்றன. அவை சருகாகி உதிருமுன் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். காலத்தையும் அப்படித்தான்.


இறந்த பொழுதுகள் போனாலும் இருக்கின்ற பொழுதுகளைப் பயன் படுத்தி வெற்றி பெறலாம். சிந்தனை வலுப்பெற பாரதியாரின் அடுத்த வரியும் நினைவுக்கு வந்தது...!

'இன்று புதிதாய்ப் பிறந்தோம்!'

— ஆம்! இந்த மல்லிகைச் செடி எந்த நம்பிக்கையோடு தினந் தோறும் பூத்துக் குலுங்குகிறதோ, அதே நம் பிக்கையோடு... இன்று புதிதாய்ப் பிறந்த புதுமனத்தோடு படிக்க வேண் டும் என்ற உறுதி மனோகரின் உள்ளத் தில் எழ, கவலைகள் சருகுகளைப் போலவே உதிர்ந்தன!

அந்த அரையாண்டுத் தேர்விலும், ஆண்டு இறுதித் தேர்விலும் முதலி டத்தைப் பெற்ற மனோகரின் வெற்றிக்குக் காரணம் வேறு எது வாக இருக்கப் போகிறது?

உலகப் பெரும் பீரங்கி




உலகப் புகழ்பெற்ற இந்தப் (படத்தி லுள்ள) பீரங்கியின் பெயர் ஜெய் வானா. சக்கரத்தின் மேலுள்ள பீரங்கிகளில் உலகி லேயே மிகப் பெரியது இது. ஜெய்ப்பூரில் ஜெய்கர் கோட்டையில் உள்ள இந்தப் பீரங்கி 1720 — ஆம் ஆண்டு சவாய் ஜெய் சிங் — II காலத்தில் ஜெய்கர் ஃபவுண்டரி யில் செய்யப்பட்டது. கிட்டத்தட்ட நூறு வருடங்கள் கழிந்து, மஹாராஜா ராம் சிங் — II — இன் காலத்தில்தான், பீரங்கி பொருத்தும் வேலை முடிவடைந்தது. இந்தப் பீரங்கியின் பாரலின் (Barrel) நீளம் 20 அடி. எடை 50 கிலோ. குறுக்களவு 11 அங்குலம். 100 கிலோ வெடி மருந்தை நிரப்பி இயக்கி னால் 22 மைல் வரை இயங்கும். பீரங்கிச் சக்கரத்தின் உயரம் 9 அடி. அச்சாணியின் நீளம் 11 அங்குலம். அழிக்கும் கருவியானா லும் அழகான வேலைப்பாடுகளுடன் அமைந்துள்ள இந்தப் பீரங்கி நாலா பக்க மும் சுழற்றி இயக்கும் வண்ணம் செய்யப் பட்டுள்ளது. ஆனால் ஒரே ஒருமுறை டெஸ்ட் செய்தபின் இதுவரை ஒருமுறை கூட இந்தப் பீரங்கி இயக்கப்படவில்லை. (அப் பாடா, நல்லவேளை!)

படம்: எ. ஆர். திபலட்சுமி.

தகவல்: எ. ஆர். ராஜ்குமார்.

வட்டம் எத்தனை, முக்கோணம் எத்தனை?



அதிலே 50, இதிலே 50!





* ஒரு மாமரம். அதில் ஒரு மாம்பழம். அதைப் பார்த்தோர் 2 பேர். பறித்தோர் 5 பேர். பங்கு போட்டோர் 10 பேர். தின்றவர்கள் 32 பேர். அவர்கள் யாவர்?

விடை: பார்த்தவை இருவர் கண்கள்:
பறித்தவை ஐவர் விரல்கள்.
பங்கு போட்டவை 10 பேர் — இரு கை விரல்கள்.
தின்றவை 32 பேர் பற்கள்.

** 5—ஐ 5—ஆல் பெருக்கி, அதை 5—ஆல் வகுத்து, அதனுடன் 5 — ஐக் கூட்டி அதிலிருந்து 5 — ஐக் கழித்தால் விடை என்ன?

விடை: 5.

*** வீட்டிலுள்ள பொருட்களுக்குள்ள மனித உறுப்புகள் எவை?

சல்லடை	— கண்.
கெட்டில்	— மூக்கு.
பாட்டில்	— வாய்.
நாற்காலி	— கால்.
சீப்பு	— பல்.
எண்ணெய்ச் சட்டி	— காது.

தி. பிரபு ரெட்டியபட்டி.

நார்வே நாட்டின் மாமன்னர் 5—வது ஆலவ் ஞாயிறன்று தமது 86—வது பிறந்த (2.7.89) தினத்தைக் கொண்டாடினார். உலகிலேயே ஆட்சியிலிருக்கும் மாமன்னர்களில் மிக வயதானவர் இவர்தான்.

பாய்மரம் செலுத்துதலில் 1928 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டியில் தங்கப் பதக்கம் பெற்றவர் இவர். சுமார் 70 ஆண்டு காலமாக இந்த விளையாட்டில் அவர் ஈடுபட்டு வருகிறார்.

இந்த 86 வயதிலும் அவர் சுறுசுறுப்பு



டன் நாள் முழுக்கப் பணிபுரிகிறார். அமெரிக்கா, பிரிட்டன் என்று பல நாடுகளுக்கும் போய் வருகிறார்.

நார்வேயில் கடந்த மே 17—ம் தேதி அரசியல் சாசன தினம் கொண்டாடப்பட்டது. அன்றைய தினம் மாளிகை மாடத்தில் 3 மணி நேரம் நின்று கொண்டு பொது மக்களின் அணிவகுப்பு மரியாதையை அவர் ஏற்றுக் கொண்டார்.

அவர் எந்த விஷயத்திலும் சர்ச்சைகள் கிளப்புவதே இல்லை.


ஆலவ் மாமன்னர் சரியான விஷயத்தைச் சரியான நேரத்தில் சொல்லத் தவறுவதே இல்லை என்று கடந்த ஆண்டு அங்குள்ள பத்திரிகைகள் எழுதின.

— மா. தா. கோவிந்தராசன்,
சென்னை — 106.



* இந்தியாவைப் பற்றின முதல் தேசப் படம் 1752ல் டா-ஆன்வில் என்ற பிரெஞ்சுக்காரரால் வெளியிடப் பட்டது.
* சார்லஸ் குட் இயர் என்பவர் 11 ஆண்டு காலம் கஷ்டப்பட்டு, ரப்பர் மரப் பாலைக் கொண்டு, டயர் செய்யக் கண்டுபிடித்தார். அவர் நினைவாகத் தான் குட் இயர் டயர் கம்பெனி உரு வாயிற்று.
* பாபர்தான் முதன் முதலில் ரோஜாச் செடியை இந்தியாவிற்குக் கொண்டு வந்தார்.
* கருங்கடலின் ஓரத்தில் மலைத் தோட்ட ஆராய்ச்சி நிலையம் ஒன்றில் 40 வகைப் பழங்கள் ஒரே மரத்தில் கிடைக் கிறது. இந்த மரத்தின் பெயர் 'நட்புறவு மரம்'.
* விக்டோரியா மகாராணியார் 631 வருடம் 216 நாட்கள் ஆட்சி செலுத்தி னார். இது மிக நீண்ட காலம் ஆகும்.
* செஸ் விளையாட்டு முதன் முதலில் தோன்றின இடம் இந்தியா.
* உலகிலேயே அதிவேகமாகப் பேசக் கூடிய மொழி பிரெஞ்சு மொழி. ஒரு நிமிடத்திற்கு 350 வார்த்தைகள் பேச லாம்.

— பத்மா வெங்கட்ராமன்.
சென்னை — 4.



* அயர்ந்து விடாதீர்கள்! வெற்றிப் படி களுக்கு இன்னும் சிறிது தூரம்தான் உள்ளது.

— ரூதர்ஃபோர்ட்.

* மற்றவர் மகிழ்ச்சியில் நமது மகிழ்ச் சியும் உள்ளதென்பது ஒரு மகத்தான உண்மை.

— சாரதா தேவியார்

* தைரியமே நம்முடைய மிக நெருங்கிய நண்பன்.

— ஷேக்ஸ்பியர்.

* தவறுகளை ஒப்புக் கொள்ளும் தைரிய மும், அதைத் திருத்திக் கொள்ளும் பலமும்தான் உண்மையான வெற்றிக்கு வழி.

— லெனின்.

* அன்பில்லாத உடலைச் சுடுகாடு என்றே கொள்க.

— குரு நானக்.

* நாம் விரும்புவதையெல்லாம் பெற முடியாததால், நாம் பெற முடிந்ததில் திருப்தி கொள்வோம்.

— பெனடிக்ட்

* சிரிக்க முடியாத முகம் நல்லதாயிருக்க முடியாது

— மார்ஷியல்.

— கிருஷ்ணப்ரியா, அம்மாபேட்டை.



இந்தியாவின் தேசிய சின்னம் மூன்றாகத் தெரியும் நான்கு சிங்கத் தலைகள் என்று தெரியும். மற்ற நாடுகளின் தேசிய சின்னம் எதுவெனத் தெரியுமா?

ஆஸ்திரேலியா — கங்காரு
கனடா — வெள்ளை அல்லி
டென்மார்க் — கடற்கரை
ப்ரான்ஸ் — அல்லி
ஈரான் — ரோஜா
அயர்லாந்து — மூவிலை
இத்தாலி — வெள்ளை அல்லி
பாகிஸ்தான் — பிறை நிலா
ஸ்பெயின் — கழுகு
அமெரிக்கா — தங்கக் கம்பி

தொகுப்பு: கிருஷ்ணப்ரியா,
அம்மாபே ' ை



ஒருமுறை எடிசன் தன் நண்பரிடம் வருத்தத்தோடு கூறிக் கொண்டிருந்தார்: "இருபதாயிரம் சோதனைகளை நடத்தியதில் ஒன்றில் கூட எதையும் கண்டுபிடிக்கவில்லை."

"இருபதாயிரம் சோதனைகள் பயன் இல்லாமல் போய் விட்டதே!" என்றார் நண்பர்.

உடனே எடிசன், "ஏன் பயன் இல்லை? இருபதாயிரம் பொருட்களில் ஒன்றும் கண்டுபிடிக்க முடியாது என்ற உண்மையைக் கண்டுபிடித்து இருக்கிறேனே!" என்றாராம்.

— சா. ஏ. சங்கர், வந்தவாசி.



வெகு காலத்திற்கு முன்பு துருக்கி தேசத்தில் நேரத்தைக் காட்டக் கடியாரங்கள் கிடையாதாம். அந்த நாட்டினர் பூனைகளை வீட்டில் வைத்து வளர்த்து அவற்றின் கண்களைப் பார்த்து நேரத்தைத் தெரிந்து கொள்வார்களாம். பூனையின் கண் விழிகள் காலையிலும் மாலையிலும் வட்டமாகவும், நடு உச்சி வேளையில் முட்டை வடிவமாகவும் பொழுது சாய்ந்த காலங்களின் தட்டையாகச் சற்றுக் கீழே சாய்ந்தது போலவும் இருக்குமாம்.

— இரா. மணிகண்டன், சென்னை — 88.

தெருத் தெருவாய்ச் சென்று முட்டை வியாபாரம் செய்யும் ஓர் ஏழைப் பெண்ணின் மேல் ஒரு சைக்கிள்காரன் மோதியதால், கூடையிலிருந்த முட்டையெல்லாம் விழுந்து நொறுங்கின. சரியான கல்வியறிவு இல்லாமையால் மொத்த முட்டைகள் எத்தனை என்பது அவளுக்குத் தெரியாது.

ஆயினும் தெருவில் சென்ற ஒரு பெரியவர் கேட்ட போது, மொத்த எண்ணிக்கை தெரியாது என்று கூறினாலும், "நான் இரண்டு இரண்டாக எடுத்து வைத்த போது ஒரு முட்டை மீதி வந்தது. மூன்று மூன்றாக எடுத்து வைத்த போது இரண்டு முட்டைகள் மீதி வந்தன. நான்கு நான்காக எடுத்து வைத்தபோது மூன்று முட்டைகளும், ஐந்து



ஐந்தாக வைத்த போது நான்கு முட்டைகளும், ஆறு ஆறாக வைத்த போது ஐந்து முட்டைகளும் மீதி வந்தன. ஒரு ஏழாக வைத்த போது மீதி வரவில்லை," என்றாள்.

பெரியவரும் கணக்கைக் கூட்டி, கழித்துப் பார்த்துச் சரியான தொகையைச் சைக்கிள்காரரிடம் வாங்கி அந்த ஏழைப் பெண்ணிடம் கொடுத்தார்.

இந்தக் காலத்தில் இப்படியொரு பெண்.

அவர் எத்தனை முட்டைகளுக்குப் பணம் வாங்கிக் கொடுத்தார்? விடையை கண்டுபிடியுங்கள்.

விடை: 119 முட்டைகள்.

— ரை. சபீர் சலாம், பணைக்குளம்.



மாவீரன் நெப்போலியனின் படைகள் ஒரு சமயம் பின்வாங்கிக் கொண்டிருந்தன. இதனையறிந்த நெப்போலியனின் தளபதி நேரே விஷயத்தைச் சொல்ல நெப்போலியனிடம் ஓடினார். அப்பொழுது நெப்போலியன் உறங்கிக் கொண்டிருந்தார். தூக்கத்தில் தன்னை யாரும் எழுப்பக்

கூடாது என நெப்போலியன் கட்டளை இட்டிருந்தார். தளபதிக்கு அக் கட்டளை நினைவுக்கு வந்து விட்டதால் நெப்போலியனை எழுப்பத் துணிவு வரவில்லை. நெப்போலியனை எழுப்புவதா வேண்டாமா என்று குழப்பத்தில் ஆழ்ந்த தளபதி, நெப்போலியனின் அருகில் சென்றார். அங்கே ஒரு குறிப்பேடு இருந்தது. நமது படைகள் பின்வாங்கினால் என்ன செய்ய வேண்டும் என்பதனைப் பற்றித் தெளிவாக அதில் எழுதி வைத்திருந்தார் நெப்போலியன். அவரை எழுப்பி விளக்கம் கேட்க வேண்டிய அவசியம் நேரவில்லை. குறிப்பேட்டில் இருந்தபடி படைகளை நடத்தினார் தளபதி. விளைவு? பின்வாங்கிய நெப்போலியனின் படைகள் முன்னேறிச் சென்றன.

— வி. இராதாகிருஷ்ணன், தஞ்சாவூர்.



இளைஞர்கள் குழு ஒன்று பத்ரிநாதரைத் தரிசனம் செய்யச் சென்று கொண்டிருந்தது. அவர்களுடன் சூர்தாசரும் வருவதைக் கண்ட இளைஞர்களுக்கு வியப்புத் தோன்றியது. ஏனெனில் சூர்தாசருக்குக் கண் பார்வை கிடையாது. பின் அவர் எப்படி பத்ரிநாதரை தரிசிப்பார் என்று அவர்களுக்குக் குழப்பம். அவர்களில் ஒருவன், "சூர்தாசரே! தாங்கள் கண் பார்வை அற்றவராயிற்றே! பின் எப்படி பத்ரிநாதரைத் தரிசிப்பீர்கள்?'' எனக் கேட்டான்.

சூர்தாசர் மெதுவாகப் புன்னகைத்தவாறே, ''எனக்குக் கண் பார்வை இல்லை என்பது உண்மைதான். அதனாலென்ன? பத்ரிநாதருக்குக் கண் இல்லையா? தன்னைப் பார்க்கும்படியான நிலையில் அவர் என்னை வைக்காவிடினும் என்னைப் பார்ப்பதற்குரிய சிரமத்தை இறைவனே பட வேண்டும்,'' என்று கூறினார்.

— அ. செந்தில் (3-247), திருச்சி — 5.

வெற்றி விளக்குகள்

* சோர்ந்து விடாதீர்கள். சொர்க்கத்திற்கு இன்னும் சில மைல்கள்தாம் உள்ளன.

— ரூதர்போர்டு.

* நேற்றுதான் ஓய்வு நாள் என்ற நினைப்போடும் இன்று உழைக்கும் நாள் என்ற நினைப்போடும் உழைத்தால் ஒவ்வொருவரும் ஏன் வெற்றி பெற முடியாது?

— ஜேம்ஸ் ஆலன்.

* நம்பிக்கை உண்டானால் வெற்றி உண்டு. அந்த நம்பிக்கையின் முக்கிய லட்சணம் என்னவென்றால் விடா முயற்சி.

— பாரதியார்.

* தேவையில்லாத போது வாயை மூடிக் கொள்ளுங்கள். சரியான சந்தர்ப்பம் வந்தால் சொல்லுங்கள். சொல்வதைத் தீப்பொறி எழச் சொல்லுங்கள்.

— பெஞ்சமின் பிராங்ளின்.


* ஒரு பெரிய மனிதன் தன்னுடைய பெருந்தன்மையைச் சிறிய மனிதர்களை நடத்துவதன் மூலம் காண்பிக்கிறான்.

— தாமஸ் கார்லைல்



1. இந்தியாவில் 1721 ஆம் ஆண்டு முதன் முதல் கிரிக்கெட் போட்டி நடந்தது.
2. **மிகச் சிறிய** வயதிலேயே கிரிக்கெட் காப்டனானவர் நவாப் பட்டோடி.
3. மிக நீளமான கிரிக்கெட் போட்டி இங்கிலாந்திற்கும் தென் ஆப்பிரிக்காவிற்கும் இடையே 1939 ஆம் ஆண்டு நடைபெற்றது. (3 ஆம் தேதி முதல் 14 ஆம் தேதி முடிய)
4. மிகக் குறைந்த பந்துகளிலேயே (56 பந்துகளில்) சதம் அடித்தவர் விவியன் ரிச்சர்ட்ஸ்
5. மிக அதிக ஆட்டங்களில் (18 ஆட்டங்கள்) காப்டனாகத் தொடர்ந்து இருந்து இரண்டே ஆட்டங்களில் தோற்றவர் கிளைவ் லாய்ட்.

தொகுப்பு: ஆர். சந்திரசேகர், ஸ்ரீரங்கம்.



டாக்டர் பக்கம்

சீதபேதியைத் தவிர்க்கலாமே!

டாக்டர். கு. கணேசன்

நண்பர் நாராயணராஜா, காந்தி கலைமன்ற நூலகத்தில் பணிபுரிகிறார். அவரது பையன் கிருஷ்ணகுமார் சின்னையராஜா மேல்நிலைப் பள்ளியில் எட்டாம் வகுப்பில் படிக்கிறான். குடும்ப மருத்துவர் என்கிற முறையில் அவர்களுடன் எனக்கு நிறையப் பரிச்சயம் உண்டு. அவர்கள் இருவரும் சென்ற வாரம் என்னைச் சந்திக்க வந்தபோது நடந்த உரையாடலை இங்கே தருகிறேன்.

நாராயண ராஜா : வணக்கம், டாக்டர்!

நான் : வணக்கம், வாருங்கள். நலமாக இருக்கிறீர்களா?

நாராயண ராஜா : நான் நல்ல நலத்துடன் உள்ளேன், டாக்டர். என் மகன் கிருஷ்ணகுமாருக்குத்தான் உடல்நிலை சரியில்லை....

நான் : கிருஷ்ணகுமாருக்கு என்ன தொந்தரவு?

நாராயண ராஜா : இரண்டு நாட்களாக அவனுக்கு வயிற்றுவலி இருந்தது, டாக்டர். வீட்டில் அவன் அம்மா ஏதோ சில மருந்துகளைக் கொடுத்திருக்கிறாள். பயனில்லை. இன்று காலையில் அவனுக்குக் காய்ச்சல் வந்துவிட்டது. அது மட்டுமல்லாமல், இரத்தமும் சீதமுமாக மலம் போகிறான்.

நான் : நீங்கள் சொல்வதைப் பார்த்தால் கிருஷ்ணகுமாருக்குச் 'சீதபேதி' வந்திருக்கிறது என நினைக்கிறேன்.

கிருஷ்ணகுமார் : சீதபேதி என்றால் என்ன டாக்டர்?

நான் : கிருஷ்ணகுமார், சீதபேதி என்பது சுற்றுப்புறச் சுகாதாரக் கேட்டினாலும், ஒருவரின் சுய சுகாதாரக் குறைவினாலும் வரக்கூடிய ஒருவகை நோய். அதாவது 'என்டமீபா ஹிஸ்டலிகா' என்ற ஒட்டுண்ணிகள் நம் குடலைத் தாக்கும்போது சீதபேதி உண்டாகிறது. இதை மருத்துவர்கள் 'அமீபிக் டிசென்ட்ரி' என்று அழைக்கிறார்கள்.

நாராயண ராஜா : இந்த ஒட்டுண்ணிகள் நம் குடலுக்குள் எப்படி நுழைகின்றன, டாக்டர்?

நான் : பொதுவாக அசுத்தம் நிறைந்த இடங்களில்தான் இந்த ஒட்டுண்ணிகள் அதிகமாக இருக்கும். இவை குடிநீரில் கலந்து நம் உடலுக்குள் நுழைகின்றன. நேராகக் குடலுக்

குச் சென்று வசிக்க ஆரம்பிக்கின்றன. இங்குதான் அதன் வளர்ச்சிப் பருவம் ஆரம்பமாகிறது. அவற்றில் 'சிஸ்ட்டுகள்' என்ற பருவம் வரும்போது அவை மலத்தின் மூலம் வெளியேறுகின்றன. பின்பு இவை அசுத்தத் தண்ணீர் மூலமாக மற்றவரின் குடலுக்குள் நுழைந்து மீண்டும் அமீபாவாக மாறும். அவருக்கும் சீதபேதியை உண்டாக்கும். இப்படி ஒரு சுழற்சி போல இக்கிருமிகள் ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு எளிதில் பரவிவிடுகின்றன.

கிருஷ்ணகுமார் : ஏன் டாக்டர், இந்தச் சீதபேதி நோய் என்னைப் போன்ற சிறுவர்களுக்கு மட்டும்தான் வருமா?

நான் : இல்லை கிருஷ்ணகுமார்! இது குழந்தைகளுக்கும் வரும், சிறுவர்களுக்கும் வரும், ஏன், பெரியவர்களுக்கும் வரும். பொதுவாக அசுத்தம் நிறைந்த இடங்களில் வசிப்பவர்களுக்கும் ஜன நெருக்கம் அதிகமாக உள்ள இடங்களில் வசிப்பவர்களுக்கும், அசுத்தமான ஹோட்டல்களில் அடிக்கடி சாப்பிடுபவர்களுக்கும் சீதபேதி அதிகமாக வர வாய்ப்பு இருக்கிறது.

நாராயண ராஜா : மழைக்காலத்திற்கும் சீதபேதி நோய்க்கும் தொடர்பு இருக்கிறதா, டாக்டர்? மழைக்காலம் வந்துவிட்டாலே நம் ஊரில் சீதபேதியும் அதிகமாகப் பரவுகிறதே!

நான் : உண்மைதான். மழைக்காலத்தில் எங்கு பார்த்தாலும் சேறும் சகதியுமாகக் காணப்படுமாதலால் சீதபேதிக் கிருமிகள் குடிநீரில் கலப்பதற்கு அதிக வாய்ப்புக் கிடைக்கிறதல்லவா? அதனால்தான் மழைக்காலங்களில் சீதபேதி நோய் அதிகமாகப் பரவுகிறது.

கிருஷ்ணகுமார் : சீதபேதிக் கிருமிகள் நம் குடலை என்ன செய்யும், டாக்டர்?

நான் : இக்கிருமிகள் நம் குடல் திசுக்களைத் தின்று புண்ணாக்கும். இதனால் குடலின் புண் உண்டாகும்போது இரத்தமும் சீழும் மலத்தில் வெளிப்படும். குறைந்தது இச்சமயத்திலாவது நாம் முறையாக மருத்துவம் பெற்றுக் கொள்ள வேண்டும். தாமதித்தால் இக்கிருமிகள் இரத்தக் குழாய்களின் மூலம் இரத்த ஓட்டத்தில் கலந்து கல்லீரல், நுரையீரல், மூளை போன்ற உடம்பின் முக்கிய உறுப்புக்களையும் பாதிக்கும். அதனால்தான் சீதபேதியை நாம் அலட்சியப்படுத்தக் கூடாது.

நாராயண ராஜா : ஒருவருக்கு வந்துள்ள நோய் சீதபேதிதான் என்பதை எப்படி டாக்டர் உறுதிப்படுத்துகிறீர்கள்?

நான்: நோயாளிக்கு வந்துள்ள அறிகுறிகளை முதலில் கவனிப்போம். அதாவது சீதபேதியாக இருந்தால் ஆரம்பத்தில்வயிற்றுவலிவரும். காய்ச்சல் வரும். முதல் நாளில் வயிற்றுப்போக்கு இருக்கும். அடுத்த நாளில் இரத்தமும் சீதமுமாக மலம் போகும். மலம் போகும்போதெல்லாம் அடிவயிற்றைப் பிசைகிற மாதிரி வலிக்கும். சிலருக்கு வாந்தி வரலாம். இது போன்ற நோய் அறிகுறிகளை வைத்துக்கொண்டு அந்நோயாளியின் மலத்தை மைக்ரோஸ்கோப் மூலம் பரிசோதிப்போம். அதில் இந்த எண்டமீபா ஒட்டுண்ணிகளின் முட்டைகளோ, அல்லது சிஸ்ட்டுகளோ இருந்



தால் அந்நோயாளிக்கு அமீபாவால் சீதபேதி வந்திருக்கிறது என்று தீர்மானித்து மருத்துவம் செய்வோம்.

"கிருஷ்ணகுமார்: சீதபேதியைத் தவிர்க்க முடியுமா, டாக்டர்?

நான்: நிச்சயமாக முடியும்! சற்று விரிவாகவே சொல்கிறேன், கேள்:


* பொது இடங்களில் மலம் கழிப்பதைத் தவிர்க்க வேண்டும்; கழிப்பறைகளில் மலம் கழிக்கும் வழக்கம் அனைவருக்கும் வர வேண்டும். மலம் கழித்ததும் கைவிரல்களை நன்கு கழுவ வேண்டும்.
* நகங்களை ஒட்ட வெட்ட வேண்டும். நகங்களில் அழுக்குச் சேரக் கூடாது.
* சாப்பிடும் முன்பும் கைகளை நன்கு கழுவ வேண்டும்.
* நன்கு கொதிக்க வைத்து ஆற வைத்த தண்ணீரையே பருக வேண்டும்.
* நன்கு வேக வைத்த உணவுகளையே உண்ண வேண்டும்.
* பச்சைக் காய்கறிகளையோ பழங்களையோ அப்படியே உண்பதாக இருந்தால் வெந்நீரில் கழுவிய பின் உண்ண வேண்டும்.
* அசுத்தமான இடங்களில் சிறுவர்கள் விளையாடக் கூடாது.
* தெருவில் நடக்கும்போது செருப்பு அணிந்து கொள்ள வேண்டியது அவசியம்.
* தெருக்களில் அசுத்தங்களும் கழிவு நீரும் தேங்குவதைத் தவிர்க்க வேண்டும்.
* சுத்தமான ஹோட்டல்களில் மட்டுமே உணவு உண்ண வேண்டும்.

— இதுபோன்ற சுகாதார முறைகளை அனைவருமே கடைப்பிடித்தால்தான் சீதபேதி நோய்களை அடியோடு தவிர்க்கலாம்.

கிருஷ்ணகுமார்: நன்றி, டாக்டர். இனிமேல் நீங்கள் சொன்ன சுகாதார முறைகளை நானும் கடைப்பிடிக்க முயல்கிறேன்.

நான்: நல்லது, கிருஷ்ணகுமார்! இந்த மாத்திரைகளைச் சாப்பிடு. உனக்குக் குணம் கிடைக்கும்.

நாராயண ராஜா: நன்றி டாக்டர். நாங்கள் வருகிறோம்.


சிரிசுகள்
விஷயம்
இவனுக்கு வேகவச்ச முட்டை பிடிக்காதாம். வறுத்துக் கொடுத்தாத்தான் வாங்குவேன்னு அடம் பிடிக்கிறான் மச்சான்...!
அண்ணே, உங்களுக்கு எந்தப் பழம் பிடிக்கும்?
எனக்கு 'எலி'மிச்சம் பழம்னாதான் உயிர்!
டாக்டர், உட்கார்ற இடத்துல கொப்புளம்!
கண்ணா, பெஞ்சுக்கெல்லாம் வைத்தியம் பார்க்க மாட்டேன் தெரியுமோ?
இது நான் வரைஞ்ச ஓவியம். சூரிய உதயமா? சூரிய அஸ்தமனமா? சொல்லுங்க பார்க்கலாம்
சூரிய அஸ்தமனம் தான்!
எப்படி சரியாச் சொன்னீங்க?
நீ ஒரு நாளும் சூரிய உதயம் பாத்ததில்லையே!
அம்மா! நான் தாலாட்டுப் பாடினாலும் தம்பி பாப்பா தூங்க மாட்டேங்கறான்
நீ மொதல்ல தாலாட்டுப் பாடறதை நிறுத்து. அப்பதான் தூங்குவான்!
அட, நேத்து நீங்க செத்துட்டதாகச் சொல்லி உங்க பேரன் லீவ் போட்டானே...?
அப்படியா? என்கிட்ட நீங்க செத்துட்டதால நான் ஸ்கூல் போகலைன்னு சொன்னானே?
ஜெ

சுகுணாவா குழந்தை?

மிகவும் பெரியதுமில்லாமல், மிகவும் சிறியதுமில்லாமல் நடுத்தரமாக இருக்கும் அந்த ஊரில் பரசுராமனின் மளிகைக் கடைதான் பெரியது. மற்றக் கடைகள் எல்லாம் சிறுசிறு பெட்டிக் கடைகள்தான்.

கடையின் வாசலில் ஒரு பெரிய போர்டு தொங்கியது: 'சுகுணா ஸ்டோர்ஸ். இங்கு எல்லாவிதமான மளிகைச் சாமான்களும் குறைந்த விலையில், மொத்தமாகவும், சில்லறையாகவும், சுத்தமாகவும் கிடைக்கும்.'

என்றைக்கும் அந்தக் கடையில் கூட்டம் அதிகம். நல்ல வியாபாரம், நல்ல வருமானம்.

அவரது ஒரே மகள் சுகுணா. படிப்பில் கெட்டிக்காரி. நல்ல அழகி. நல்ல குணமுள்ள அடக்கமான பெண். தாய் கஸ்தூரி, தந்தை பரசுராமன், பாட்டி வள்ளியம்மை ஆகியோரின் பாசத்தில் செல்லமாக வளர்ந்து வந்தாள். அவர்கள் இவள் மீது பாசத்தைப் பொழிந்ததுபோல், இவளும் அவர்கள் மீது உயிரையே வைத்திருந்தாள்.

ஆறாம் வகுப்புப் படிக்கும் சுகுணாவின் தினசரி நடவடிக்கைகள்: காலை ஆறு மணிக்கு எழுந்திருப்பது, பல் துலக்கிக் காப்பி பருகிவிட்டு, எட்டு மணி வரை படிப்பு, பின்பு குளியல், பூஜை, காலைச் சிற்றுண்டி, பள்ளி செல்லுதல், மாலையில் பள்ளி முடிந்து வீட்டுக்கு வந்ததும் காப்பி, சிற்றுண்டி முடித்தபின், பக்கத்துவீட்டுக்குழந்தைகளுடன் ஆறு மணி வரை விளையாட்டு. பின்பு படிப்பு. எட்டு மணிக்கு மேல் சாப்பாடு, பின் தூக்கம். — இப்படித் தன் கடமைகளை நேரப்படி மிக ஒழுங்காகச் செய்து வந்தாள்.

இரவு பாட்டியுடன் கதை கேட்டவாறு படுத்து உறங்குவது அவளுக்குப் பிடித்தமான ஒன்று.

அன்றும் அப்படித்தான் கதை கேட்டபடியே தூங்கிப் போனவள், நடு இரவில் விழித்துக் கொண்டாள். பக்கத்தில் பாட்டி குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டிருந்தாள். வழக்கம் போல் இன்னொரு பக்கம் படுக்கும் அம்மாவைக் காணோம்.

மெல்ல எழுந்து சுற்று முற்றும் பார்த்தாள். பின் கட்டில், அரிசி, பருப்பு, மளிகைச் சாமான்கள் வைக்கும் அறையில் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. இரண்டு கட்டுகளைக் கொண்ட அந்தப் பெரிய வீட்டின் வாசலில்தான் அவர்கள் கடை. முன்கட்டு இவர்கள் உபயோகத்திற்கு. பின்கட்டில் இரண்டு பெரிய அறைகள். அவற்றில்தான் சாமான்கள் மூட்டை மூட்டையாக அடுக்கி வைக்கப்பட்டிருக்கும். எப்போதும் பகலில் பெரிய பூட்டுகள் தொங்கிக் கொண்டிருக்கும். பக்கத்து வீடுகளுக்கு அந்த அறைகள் தெரியாதபடி தோட்டத்தில் அடர்த்தியான மரங்கள், செடிகள், உயரமான சுற்றுச் சுவர் இருந்தன.

அந்த அறைகளில் ஒன்றில்தான்

ஜி. மீனாட்சி

இப்போது விளக்கு எரிந்து கொண்டிருந்தது. சுகுணா மெல்ல அந்த அறையை அடைந்தாள். கதவு வெறுமனே சாத்தப்பட்டிருந்தது. சந்து வழியே மெல்ல எட்டிப் பார்த்தாள். அம்மா, தரையில் எதையோ கொட்டி கைகளால் கலந்து கொண்டிருந்தாள். அப்பா அரிசி மூட்டையொன்றைப் பிரித்துக் கொண்டிருந்தார்.

சுகுணா அதற்குமேல் அங்கு நிற்கவில்லை. தூக்கக் கலக்கத்தோடு வந்து படுத்தவள் தூங்கி விட்டாள்.

மறுநாள் காலை அம்மாவைக் கேட்டாள். ஏம்மா! நேத்து ராத்திரி ஸ்டோர் ரூமில் என்ன பண்ணினீங்க? விளக்கு எரிஞ்சுதே?'' என்றாள்.

அம்மா அதற்கு, ''நீ சின்னப்பெண். உனக்கு ஒன்றும் தெரியாது. உன் வேலையைப் பார்த்துக் கொண்டு பேசாமல் போ,'' என்று எரிந்து விழுந்தாள்.

சுகுணாவுக்கு ஒரே ஆச்சரியம். எப்போதும் அன்பாகப் பேசும் அம்மா இன்று சிடுசிடுக்கிறாளே, ஏன்? மேற்கொண்டு ஏதும் பேசாமல், பள்ளிக்குக் கிளம்பி விட்டாள்.

மற்றொரு நாள் மறுபடியும் இரவு பதினொரு மணி சுமாருக்கு விழிப்பு வந்தது. பக்கத்தில் அம்மாவைக் காணோம். மெல்ல எழுந்து பின்கட்டுக்குச் சென்றாள். மூடிய கதவின் இடுக்கு வழியே எட்டிப் பார்த்தவள் திடுக்கிட்டாள்.

என்ன அநியாயம்! ஒரு மூட்டையில் இருந்து பொடிக் கற்களை எடுத்து அரிசியோடு கலந்து கொண்டிருந்தாள் அம்மா. அப்பா இன்னொரு மூட்டையைப் பிரித்துக் கொண்டிருந்தார்.


சுகுணாவுக்கு விஷயம் புரிந்து விட்டது. 'ஓஹோ! இதனால்தான் அம்மா அன்றைக்கு அப்படி எரிந்து விழுந்தாளா?' ஓசைப்படாமல் வந்து படுத்த சுகுணாவுக்குத் தூக்கமே வரவில்லை. 'சே! இவ்வளவு மோசமானவர்களா நம் அம்மாவும் அப்பாவும்! ஊரார் சாப்பிடும் பண்டங்களில் கலப்படம் செய்கிறார்களே! செல்லாத காசு கொடுத்தாலோ, ஒரு பத்துக் காசு குறைவாகக் கொடுத்தாலோ வாங்கிக் கொள்வாரா அப்பா? இன்னும் எதில் எதில் என்னவெல்லாம் கலக்கிறார்களோ? கலப்படம் செய்வது சட்டப்படி குற்றம் என்று ரேடியோ, டீ. வி. இதில் எல்லாம் கூறுகிறார்களே! இதை எப்படியாவது தடுத்து நிறுத்த வேண்டும். நான் சொன்னால் கேட்பார்களா? ஊஹூம். ஒருபோதும் மாட்டார்கள். என் மீது மிகுந்த பிரியம் வைத்திருந்

தம்பி! உனக்குச் சிந்தனா சக்தி வேண்டும். அதோ கூடத்தில் கடிகார முள் 12 மணி அடித்து விட்டது. நிமிட முள் 6 — க்கு வந்ததும் நேரமென்ன?

''பன்னிரண்டரை என்றல்லவா சொல்கிறாய்? ஆங்கிலேயர்களும் அப்படித்தான் சொல்கிறார்கள். அகிலமெல்லாம் அதைத்தான் ஆமோதிக்கிறது. ஆனால் உண்மை அதுதானா?

சிந்தனைச் சுடர் வ. ரா. ''பன்னிரண்டுக்கும் ஒன்றுக்கும் நடுவிலுள்ள நேரத்தைப் பன்னிரண்டரை என்று சொல்லலாமா? சிந்தித்துப் பார். அப்போது அரை மணிதானே?'' என்கிறார்.

— அன்புப் பழம்நீ.



தாலும் இதில் எல்லாம் தலையிட்டால் அவர்கள் மனம்தான் வருத்தமடையும். இதற்கு என்ன வழி?' யோசித்தபடியே புரண்டாள். ஒன்றும் புரியாமல் அப்படியே உறங்கிப் போனாள்.

பத்து நாட்கள் நகர்ந்தன. இன்னும் அவளுக்கு ஒரு வழியும் புலப்படவில்லை. ஆனால் மனம் மட்டும் மிகுந்த சங்கடத்துக்கு உள்ளாகி இருந்தது.

அந்த ஊருக்கு ஏதோ பக்திப் படம் வந்தது. பாட்டிக்கு பக்திப் படம் என்றால் உயிர். அதனால் அவள் அப்பா, பாட்டி உட்பட எல்லோரையும் அழைத்துக் கொண்டு போய் வந்தார். படமும் நன்றாகவே இருந்தது.

சுகுணா படம் முடிந்து வந்து சாப்பிட்டு உறங்கி விட்டாள்.

இரண்டு நாட்கள் ஆயிற்று. அன்று வெள்ளிக்கிழமை. அவள் அப்பா சிறந்த பக்திமான். பூஜைகள் தினமும் நன்றாக நடக்கும். செவ்வாய், வெள்ளிக் கிழமைகள் என்றால் தடபுடல் பூஜைதான். சுகுணாவும் இதில் ஆர்வத்தோடு கலந்து கொள்வாள்.

அன்றும் அப்படித்தான். பூஜை முடிந்து அப்பா கற்பூரத்தை ஏற்றினார். திடீரென்று எழுந்து நின்ற சுகுணா, ''நிறுத்துங்கள் பூஜையை!'' என்று கூச்சல் போட்டவள், அப்படியே மயங்கிச் சரிந்தாள்.

எல்லோரும் பயந்து விட்டனர். அவசரமாக முகத்தில் தண்ணீர் தெளித்தனர். சிறிது நேரம் கழித்து இவள் மெதுவாக எழுந்து உட்கார்ந்தாள்.

''என்ன ஆச்சு எனக்கு?'' என மெல்ல வினவினாள்.

''ஒண்ணுமில்லே குழந்தை எதையோ பார்த்துப் பயந்திருக்கு,'' எனக் கூறிய பாட்டி விபூதியை எடுத்து நெற்றியில் இட்டாள்.

அதன்பின் அவள் எப்போதும் போல் பள்ளிக்குக் கிளம்பி விட்டாள்.

ஆனால் சுகுணா, இரண்டு மூன்று தடவை பூஜை செய்யும் போது இவ்வாறு கத்தவே, பாட்டி அவள் மீது சாமி வருவதாகவும், மறுமுறை அவ்






வாறு வரும்போது தைரியமாக, 'ஏன் பூஜையை நிறுத்த வேண்டும்?' என்று கேட்கும்படியும் தன் மகனிடம் கூறினாள்.

அன்று தை வெள்ளிக்கிழமை. ஸ்பெஷல் பூஜை. அன்றும் அப்படித் தான் சுகுணா, 'நிறுத்து பூஜையை,' எனக் கூவினாள்.

உடனே அவள் தந்தை அவள் காலில் தடால் என்று விழுந்து, ''சுவாமி! ஏன் பூஜையை நிறுத்தச் சொல்கிறீர்கள். ஏதாவது தப்பு நேர்ந்து விட்டதா?'' என்று பவ்ய 'மாகக் கேட்டார்.

''ஆமாம்! நீ செய்யும் வேலை எனக்குத் துளி கூடப் பிடிக்க



வில்லை!''

''ஆ! என்ன வேலை சுவாமி?'' பயந்து போய்க் கேட்டார்.

''உனக்கோ வேண்டிய சொத்து இருக்கிறது. உணவுப் பொருட்களில் ஏன் கலப்படம் செய்கிறாய்? ஏன் இப்படி அநியாயமாகச் சம்பாதிக்கிறாய்? இதை உடனே விட்டுவிடு. இல்லையேல், உன் ஒரே செல்ல மகள் உன் சுகுணாவுக்குத்தான் ஆபத்து.'' என்று கோபமாகக் கூறினாள்.

இதைக் கேட்ட மூவரும் நடுங்கிப் போய் விட்டனர். தடால் தடால் என்று அவள் காலில் விழுந்தனர்.

''சுவாமி! மன்னிச்சிடுங்க. என் ஒரே பெண் நன்றாக இருந்தாலே போதும். இனி ஜென்மத்துக்கும் கலப்படம் செய்ய மாட்டேன்.'' என்று பயந்தபடி வேண்டினார்.


''சரி, உன் சொல்லைக் காப்பாற்று. இனி நான் வரமாட்டேன். உன் பெண்ணுக்கும் ஆபத்து வராது.'' எனக் கூறியவள், மெல்லத் தள்ளாடி மயங்கினாள்.

மூவரும் அவசரமாகச் சுவாமி படத்தின் முன் கற்பூரம் ஏற்றி விழுந்து வணங்கினர். பின் தண்ணீர் எடுத்து அவள் முகத்தில் தெளிக்க, கண் விழித்த சுகுணா, ''எனக்கு என்ன ஆச்சு? ஏன் எல்லோரும் இப்படி இருக்கீங்க?'' எனக் கேட்டபடி எழுந்தாள்.

''ஒண்ணுமில்லேம்மா. எல்லாம் சரியாப்போயிட்டுது. உனக்குச் சொன்னால் புரியாது. நீ குழந்தை.'' என்றனர் பாட்டியும் அம்மாவும். அப்பா அவள் தலையைக் கோதி விட்டார்.

சுகுணா மனத்திற்குள் சிரித்துக் கொண்டாள். நானா குழந்தை? இவர்களைத் திருத்த வழி தெரியாமல் தவித்த எனக்கு, சினிமாதானே கை கொடுத்து உதவியது. சினிமாவில் சாமி ஆடியதைப் பார்த்த பின்தானே எனக்கு இந்த நாடகம் போட ஐடியாவே கிடைத்தது! ஆரம்பத்தில் பயமாகத்தான் இருந்தது. இந்தத் தடவை மயங்கிய மாதிரி நடித்ததும், அதை அவர்கள் நிஜமென்று நினைத்ததும் தானே மேற்கொண்டு நாடகம் போடத் தைரியம் வந்தது? ஆனால் பாவம். அம்மா, அப்பா, பாட்டி மூவரும் என் காலில் விழுந்ததுதான் எனக்கு ரொம்ப ரொம்ப வருத்தமாயிருக்கு. கடவுளே! நீதான் என்னை மன்னிக்கணும். எப்படியோ அப்பா இனிமேல் கலப்படம் செய்ய மாட்டார்!

சுகுணா, பள்ளிக்குக் கிளம்ப ஆயத்தமானாள்.



விசித்திரச் செய்திகள்

தவளைகள் போட்டி!


அமெரிக்காவில் கலிபோர்னியா மாநிலம், ஏஞ்சல்ஸ் கேம்ப் என்ற இடத்தில் தவளைகள் குதிக்கும் போட்டி நடைபெற்றது! 76 தவளைகள் இதில் கலந்து கொண்டன. இதில் 'ஹெவி மெட்டல்' என்ற தவளை 608 செ. மீ.



தாண்டி வெற்றி பெற்றது. ஒவ்வொரு தடவையும் 3 தடவைகள் குதிப்பதைக் கணக்கிட்டு, அதன் மொத்த நீளம் எவ்வளவு என்பதை வைத்துப் பரிசு வழங்கப்பட்டது. இந்தப் போட்டியைச் சுமார் 7000 பேர்கள் கண்டு களித்தனர்!

மின்சாரப் போர்வை

டச்சுக் கம்பெனி ஒன்று மின்சாரப் போர்வையைக் கண்டுபிடித்திருக்கிறது. அது என்ன மின்சாரப் போர்வை? போர்வையில் மின்சாரக் கம்பிகள் இழையோடுகின்றன. போர்வையைப் போர்த்திக் கொண்டு, முனையிலிருக்கும்



விசையை அழுத்தினால், விநாடி நேரத்தில் வெப்பம் கதகதப்பாகப் பரவி, சுகமான தூக்கம் வந்துவிடும். வெப்பம் எந்த அளவுக்குத் தேவையோ அந்த அளவுக்கு வைத்துக் கொள்ளலாம். போர்வையினுள் மின்சாரக் கம்பிகள் இழையோடுவதால், அதன் மூலம் ஆபத்து ஏற்படாமல் தடுக்கத் தகுந்த ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள். இந்தப் போர்வையைப் பூச்சி அரிக்காது. சலவை செய்யலாம். எல்லா நிறங்களிலும் கிடைக்கின்றன. விலை? அதிகம்தான்!

உலகில் மிகப் பெரிய புத்தகம்!

உலகிலேயே மிகப் பெரிய புத்தகம் பிரான்ஸில், டவுலஸ் என்ற இடத்தில் கண்காட்சிக்கு வைக்கப்பட்டது. அதன்



நீளம் 4 மீட்டர். அகலம் 3 மீட்டர். எடை 8 டன். மொத்தம் 30 பக்கங்கள். அந்த ஊரைச் சேர்ந்த தொழில் வர்த்தகப் பிரமுகர்களைப் பற்றிய எல்லா விவரங்களும் அதில் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அங்கே உள்ள புத்தக வெளியீட்டகம் ஒன்று தனது 150 — வது ஆண்டு விழாவைக் குறிக்கும் வகையில் அந்தப் புத்தகத்தைத் தயாரித்திருக்கிறது.

மிளகாய்ப் பொடி சாதனை!

பாம்புகளுடன் வசித்து அனைவரையும் வியப்பில் ஆழ்த்திய என். பார்த்தசாரதி, கோவையில் மற்றொரு சாதனையை நிகழ்த்திக் காட்டினார். அதாவது மூன்றே நிமிடங்களில் 50 கிராம் மிளகாய்ப் பொடியை உட்கொண்டு சாதனை செய்தார். இதற்கு முன் இவரது சாதனைகள்: 31 நிமிடங்களில் 81 வாழைப்பழங்களைச்



சாப்பிட்டது. 5 நிமிடங்களில் 500 கிராம் உப்புக் கரைசலைக் குடித்தது. 4 நிமிடங்களில் 300 கிராம் பாகற்காயைப் பச்சையாகச் சாப்பிட்டது. 9 நிமிடங்களில் 250 கிராம் வேப்பிலையைச் சாப்பிட்டது. 12 நிமிடங்களில் 1 கிலோ சீனியைச் சாப்பிட்டது!

மின்னலுக்குத் தப்பிய பெண்




ஸ்டாக்ஹோமில், குதிரைச் சவாரி செய்து கொண்டிருந்த 15 வயதுச் சிறுமி 'லிஸா மால்ம் ஜெல்' என்பவளை மின்னல் தாக்கியது. ஆனால், பிழைத்துக் கொண்டாள். மின்னலினால் அவள் அணிந்திருந்த தலைக் கவசம், நெக்லஸ் முதலியவை உருகிவிட்டன. குதிரைச் சேணத்தின் உலோகப் பிடிமானங்களும் உருகி விட்டன. குதிரையும் செத்து விட்டது. ஆனால் அவள் மட்டும் எந்த ஆபத்தும் இல்லாமல் தப்பினாள்!

நல்ல நீரில் நல் முத்து!




முத்து என்பது கடல்நீரில் முத்துச் சிப்பிகளிடம் உருவாவதுதானே? ஆனால், கடல்நீர் அல்லாமல் சாதாரணக் கிணறு, குளம், ஏரி முதலிய நல்ல நீர்த் தேக்கங்களிலும் சிப்பியை வளர்த்து முத்துக்கள் எடுக்க முடியும் என்று ஒரிசா மாநிலத்தில் மத்தியுலியில் மீன்வள விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். இது இந்தியரின் சாதனை. இதையடுத்து, முத்து உற்பத்தியைப் பெருமளவில் அதிகரிக்க முடியுமாம்!

தலைமுடியின் விலை 2,20,000 ரூபாய்!



18 — ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஆஸ்திரிய நாட்டு இசை நிபுணர் 'உல்ப்கேஸ் அமடியூஸ் மோகார்ட்' என்பவரின் பழுப்புநிறத் தலைமுடியை லண்டனில் உள்ள 'சவுத்பி' ஏல நிறுவனம் ஏலத்தில் விட்டது. இதை ஒருவர் 2,20,000 ரூபாய்க்கு வாங்கிக் கொண்டார்!

— ஆழி.


காசியில் துர்வாச முனிவர்...
உமது பூஜையை நாம் ஏற்றுக் கொண்டோம்...
என்ன பாக்கியம்! சிவபெருமான் கரத்தால் இந்த மலரைப் பெற்றேனே...
இந்திரனை வென்ற உக்கிர பாண்டியன்
கதை: ஆனந்தி
படம்: விஜு
இதை இந்திரனுக்குப் பரிசளிப்பேன்.
இந்திரன் பவனி...
தேவராஜனே உனக்கு மங்களம்...



இந்திரன் மலரை வாங்கி அலட்சியமாக ஐராவதத்தின் தலை மீது வைக்க....
ஐராவதம் துதிக்கையால் அதை எடுத்துக் காலடியில் போட்டு....
ஆ!
அபசாரம்!
துர்வாசர் சினம் கொண்டு...
இந்திரா! ஈசனின் பிரசாதத்தை அலட்சியம் செய்த நீ, பாண்டிய மன்னனால் தலையில் அடிபட்டு வீழ்வாய்! ஐராவதம் காட்டானையாகப் பிறக்கும்!
சுவாமி! நாங்கள் செய்தது தவறுதான் மன்னியுங்கள்!
சாபத்தை நீக்க முடியாது: குறைக்கிறேன்... உன் தலைக்கு வரும் ஆபத்து பொன்முடியோடு போகும்...
காட்டானை நூறு ஆண்டுகள் சென்று மீண்டும் இந்திரனின் வாகனமாகும்.


ஐராவதம் களை இழந்து நாலு ஆண்டுகள் காட்டில் அலைந்து திரிந்தது...
ஒரு நாள் கடம்ப வனத்தில் தடாகத்தில் இறங்கியது...
...குளித்து விட்டுக் கரையேறிய போது அங்கு ஒரு சிவலிங்கத்தைப் பார்த்தது...
அடடா! நான்யார் என்பதையே மறந்து இந்நாள் வரை வாழ்ந்து விட்டேனே...
யானை மலர்களைப் பறித்து வந்து லிங்க பூஜை செய்தது...
இறைவன் எட்டு யானைகள் சுமக்கும் விமானத்தில் தோன்றினார்.
நீ மீண்டும் ஐராவதமாக மாறி, இந்திரனை அடைந்து, வாகனமாகிக் கடமையைச் செய்வாய்....


வரவேணும், வரவேணும்... அமருங்கள்...
ஐராவதம் வசித்த கடம்பவனத்துக்கு அருகிலேயே மணவூரில் தனஞ்செயன் என்று ஒரு வியாபாரி...
...சிவனடியார்களுக்கு அன்னமிட்டு உபசரித்து வந்தான்.
தனஞ்செயா! வியாபாரத்தில் ஈட்டுகிற செல்வத்தைத் தான தருமங்களில் செலவழிக்கிறாய்...
எல்லாம் சிவன் சொத்து... ...சிவனடியார்கள் நலனுக்கே அளிப்பேன்...
ஒரு நாள் வெளியூரில் வியாபாரம் முடிந்து, கடம்பவனம் வழியே திரும்பிக் கொண்டிருந்தான் தனஞ்செயன்.
சம்போ மகாதேவ தேவா; சம்போ மகாதேவ தேவேச சம்போ!
இருள் கவிந்த சந்தி நேரத்தில் ஓர் அற்புதக் காட்சி...
ஆஹா!


தேவர்கள் நாளா புறத்திலிருந்தும் வந்து சிவபெருமானைப் பூஜித்தனர்.
தனஞ்செயன் இரவு முழுவதும் தேவர்கள் செய்த பூஜையைக் கண்டான்.
என்ன பாக்கியம் செய்தேனோ!
பொழுது விடிந்ததும் தேவர்களும் இறைவனும் மறைந்தார்கள்...
ஆகா! இங்கு நடந்ததை அரசரிடம் சொல்ல வேண்டும்...
மணவூரில் குலசேகர பாண்டியன் ஆட்சி நடத்தி வந்தான்...
அரசே! கடம்ப வனத்தில் ஓர் அற்புதம் நிகழ்ந்தது...
தனஞ்செயன் கூறியதைக் கேட்டு அவனுடன் காடு சென்றான் மன்னன்...
ஆகா!



மறுநாள் காலை...
என்ன அற்புதக் காட்சி...! இங்கு ஒரு கோயில் எழுப்பி அதைச் சுற்றி நகரம் அமைப்பேன்!
முதலில் கோயில் உருவாயிற்று...
நகரமும் அமைந்தது...
குலசேகர பாண்டியன் பிரார்த்தனை செய்தான்...
இறைவா! நகருக்கு ஆசி வழங்குங்கள்.
சிவபெருமான் தமது முடியில் சூடிய சந்திரனிலிருந்து அமுத கலைகளை அந்நகரின் மீது விழச் செய்தார்.
(இனிய) மதுரமான இந்நகர் மதுரை என அழைக்கப்படும்.


குலசேகர பாண்டியனின் மகன் மலையத் துவஜ பாண்டியன் ஆட்சியில் அவன் மகளாக அவதரித்தாள் பார்வதி...
கண்மணி! குலக்கொழுந்தே! வா!
...தடாதகைப்பிராட்டி என்று பெயர் பெற்று, பல வீரச்செயல்களைப் புரிந்தாள்...
இமயம் வரை படையெடுத்துச் சென்றாள்.
அங்கு சிவபெருமானைக் கண்டு நாணினாள்...
(சோமசுந்தரர்) சிவபெருமான் மதுரைக்கு எழுந்தருளி அவளை மணந்தார்.



இவர்களுக்கு ஓர் அழகிய மகன் பிறந்தான்...
முருகனின் அவதாரமாகிய இக்குழந்தைக்கு உக்ரவர்மன் என்று பெயரிடுவோம்...
உக்ரவர்மன் வளர்ந்து கல்வியிலும் போர்க்கலைகளிலும் சிறந்தான்...
சோமசுந்தரர் தமது தேவியிடம்...
இனி, உக்ரவர்மனுக்குத் திருமணம் செய்து பட்டாபிஷேகமும் நடத்தலாம்.
அத்துடன் நாம் அவதரித்த காரியமும் முடிவுறும்...
உக்ரவர்மனுக்கு ஏற்ற மணமகளாக அமைந்தாள் இளவரசி காந்திமதி....
நீடு வாழ்க!
பட்டாபிஷேகம் முடிந்ததும் சோமசுந்தரர்...
மகனே! உனக்கு இரண்டு எதிரிகள்! அவர்களை வெல்வதற்கு உரிய ஆயுதங்களை அளிக்கிறேன்....


இந்திரனுடைய தலையில் உள்ள கிரீடம் சிதறும்படியாக இந்த வளையை எறிவாய்...
வருணனை வெல்வதற்கு இந்த வேலைக் கடல் மீது வீசுவாயாக...
மேலும், மேரு மலை கர்வம் அடைந்திருக்கிறது. வடக்கே சென்று மேருவைச் செண்டால் அடித்துச் செல்வம் கொண்டுவருக!
தங்கள் பணி முடிந்து, சிவனும் பார்வதியும் மீனாட்சி-சொக்கலிங்கராகச் (சோமசுந்தரர்) கோயிலில் எழுந்தருளினார்கள்.
உக்ரகுமாரன் அரசாளத் தொடங்கியதும் அசுவமேத யாகங்கள் செய்தான்... தொண்ணூறு யாகங்கள் முடிந்த போது...


இந்திரன் கலக்கமடைந்து...
வருணனே! உக்ரபாண்டியன் இந்திர பதவி அடைய அசுவமேத யாகங்கள் செய்கிறான். கடல் பொங்கி உட் புகுந்து மதுரை அழியும்படி செய்!
ஒரு சித்தர் உக்ர பாண்டியனிடம் வந்து...
கடல் பொங்கி வருகிறது... அது மதுரையை நெருங்குமுன் செயல்படு!
உக்ரகுமாரன் கடற்கரையை அடைந்து...
தந்தையே வணங்குகிறேன். தாங்கள் தந்த வேலை வீசுகிறேன்.
வேலை எறிந்ததும் பொங்கிய கடல் அடங்கி...
பின் வாங்கிச் சென்றது...
கடல் சுவற வேலெறிந்த வீரர் வாழ்க!
வாழ்க! வாழ்க!


பல ஆண்டுகள் சென்றன.. தென்னாட்டில் மழை பொய்த்துப் பஞ்சம் ஏற்பட்டது...
சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் பொதிகை மலை சென்று அகத்தியரைச் சந்திக்க...
மதுரையில் சோமசுந்தரக் கடவுளை வணங்கி நீங்கள் மூவரும் சோமவார விரதம் இருங்கள்...
அவ்வாறே மூவேந்தரும் சோமசுந்தரரை வணங்கி விரத மிருக்க...
வானில் செல்லும் வரம் பெற்றார்கள்...
இந்திரனைச் சென்று பார்ப்போம். மழை பொழியக் கேட்போம்..
இந்திரன் தன் அருகே மூன்று சிம்மாசனங்களை இட்டு மூவேந்தரையும் வரவேற்றான்.
வாருங்கள், அமருங்கள்...


சேர, சோழர்கள் தத்தமது ஆசனத்தில் அமர, பாண்டியன் இந்திரனுக்குச் சம ஆசனத்தில் உட்கார்ந்தான் . . .
இவன் கர்வத்தை அடக்குவேன்.
மன்னர்களுக்கு மாலை அணிவித்தான் இந்திரன்...
உங்கள் நாட்டில் மழை பொழியும்... கவலை வேண்டாம் . . . .
உக்ர பாண்டியனுக்குப் பெரிய முத்து மாலை சூட்டினான் . . . .
இந்த மாலையின் கனம் தாங்காமல் உக்ர பாண்டியன் சரிவான்; அவன் கர்வம் அடங்கும் . . .
ஆனால் உக்ர பாண்டியன் மாலையை எளிதாகத் தாங்கினான் . . .
என்ன ஆச்சர்யம்!



தேவர்கள் வாழ்த்தினர்...
ஆரந்தாங்கு பாண்டியன் வாழ்க!
வாழ்க! வாழ்க!
மூவேந்தரும் நாடு திரும்பினர். பாண்டியன் மீது இந்திரனுக்குக் கோபம் அதிகரிக்கவே, சேர, சோழ நாடுகளில் மட்டும் மழை!
பாண்டிய நாட்டில் தரை வெடித்து மரங்கள் கருகின...
நான்கு முக்கியமான மேகங்களைப் பொதிகை மலையில் கண்டான் உக்ர பாண்டியன்...
பாண்டிய நாட்டுக்கு இந்திரன் அநீதி இழைக்கிறான்...
... புட்கலாவருத்தம், சங்காரித்தம், துரோணம், காளமுகி ஆகிய அந்நான்கையும் கைப்பற்றினான்...
...அதனால் உங்களைக் கைது செய்கிறேன்....
... அவற்றைச் சிறையில் அடைத்து விட்டான்...
... இனி இந்திரன் என்ன செய்கிறான் பார்ப்போம்!


செய்தி அறிந்து இந்திரன் தேரேறி வந்தான்...
உக்ரபாண்டியா! என் மேகங்களை விடுதலை செய்! அல்லது யுத்தத்துக்குச் சித்தமாகு!
இந்திரனுடன் வீரயுத்தம் செய்தான் உக்ர பாண்டியன்...
உன் நட்பைப் பெறுவதைவிட எனக்கு மக்களின் நலனே முக்கியம்...
இறுதியில், தந்தை தந்த வளையை எறிந்தான் உக்ர பாண்டியன்.
உன் கிரீடம் எட்டுத் திக்குகளிலும் சிதறி விழட்டும்!
முடி இழந்த இந்திரன் அவமானமடைந்து...
குமரக் கடவுளின் அவதாரம் நீர் என்று அறியாமல் போனேன்... என்னை மன்னியுங்கள்.
உக்ர பாண்டியன் நான்கு மேகங்களையும் விடுவித்தான்...
கடமைகளை ஒழுங்காகச் செய்கிறோம்.
பாண்டிய நாட்டில் இனி வறட்சியே தோன்றாது!...


அப்போது ஐராவதம் அங்கு வர...
உக்ரபாண்டியனே! எங்கள் இருவர் சாபமும் தீர்ந்தது... சென்று வருகிறோம்...
உக்ர பாண்டியன் திக்விஜயம் புறப்பட்டான்.
மேரு மலை வரை சென்றான்...
மகாமேருவே! பாண்டியன் வந்திருக்கிறேன்...
மேரு மலை கர்வம் காரணமாக அலட்சியமாக இருந்தது.
தந்தை கொடுத்த செண்டால் மேருவை அடித்தான் உக்ரபாண்டியன்...
ஆ!
ஓ!


மேரு மலை அதிர்ந்தது... மிருகங்களும் பறவைகளும் அலறி ஓடின, பறந்தன....
மேரு, உக்ரபாண்டியனை வணங்கி...
தினமும் இந்த உருவத்தோடு சோமசுந்தரரை வணங்குவேன்; இன்று தாமதித்து விட்டேன்; அடிபட்டேன்....
...கட்டளையிடுங்கள்...!
தமிழ் மக்களின் வறுமையைப் போக்கப் பொன் விரும்பி வந்தேன்...
எவ்வளவு தேவையோ எடுத்துக் கொள்ளுங்கள்...
மேரு கொடுத்த பொன்னுடன் திரும்பினான் உக்ர பாண்டியன். அவன் வம்சம் தழைத்தது. நாடு செழித்தது....

பாலாற்றங்கரையில் அமைந்த வேலை மலை நாட்டில் பல ஆண்டுகளுக்குமுன்னர் அன்னமங்கலம்சடையப்ப அருணாசலம் என்னும் வள்ளல் வாழ்ந்து வந்தார்.


அங்குல உயரத்துக்குச் சரியாய் வெட்டப்பட்ட வெள்ளிக் கம்பிகளுக்கிடையே எங்கோ ஒரு கறுப்புக் கம்பி நீட்டும் தலை. பட்டையாய்த் திருநீறு பூசப்பட்ட அகன்ற மேடிட்ட நெற்றியில் சந்தனப் பொட்டு. கருணை சிந்தும் கண்கள். கூர்மையான நாசி. தசைத் திரட்சி மிக்க நீள முகம். நடுத்தர உயரம். மாநிறம்.

சோராமல் ஏராளம் கொடுத்துச் சிவந்த தாராளக் கைகள் மறைய வெண்ணிறக் கதர் ஜிப்பா. இடது தோளில் வெண்ணிறக் கதர்த் துண்டு. தழையத் தழைய வெண்ணிறக் கதர் வேட்டி. கால்களில் சாதாரணத் தோல் செருப்புகள்.

இவரா வள்ளலான அவர் என்று எவரும் கேட்கும் எளிமையின் இலக்கணம்.

தந்தை சடையப்பர் அவரை விவசாயத்தில் ஈடுபடுத்த எண்ணினார். தாய் முத்தம்மாளோ, தன் மகன் ஏர் பிடித்தலை விட்டு எழுதுகோல் பிடித்தல் வேண்டுமென்று ஒற்றைக் காலில் நின்றாள்.

வேலைமலை நாட்டிலிருந்த உறவினர் இல்லத்தில் தங்கியிருந்து தன் ஆரம்பக் கல்வியைத் தொடங்கினார் அருணாசலம்.



எங்கேயோ ஒரு பிசகு.

பாதியில்படிப்புத்தொடரவில்லை. நின்றது. வாணிபத்தின்பால் அவருடைய கவனம் சென்றது.

பிரபலமான வணிகர் ஒருவரிடம் வேலைக்குச் சேர்ந்த அவருக்கு ஒரு கசப்பான அனுபவம் ஏற்பட்டது.

அந்த அனுபவம் அவரது வாழ்நாள் முழுவதும் அவரைச் செதுக்கிச் செதுக்கிச் சுடர்விட வழிவகுத்தது.

ஒருநாள் —

தனக்கு வந்திருந்த உணவுப் பாத்திரத்தைத் தொட்டதற்காக அவரைக் கடிந்தார் வணிக முதலாளி.

"ஏய் அருணாசலம்... நீ பணத்தால் தாழ்ந்தவன், நான் பணத்தால் உயர்ந்தவன் என்று நீங்கள் என்னைத் துதிக்க வேண்டும்..." சிலிர்த்து விறிவெடித்தார்.

"என்ன திமிர்... ஏய்... என்னிடமா சரி வாதம் செய்கிறாய்? ஏர் பிடித்த பரம்பரை நீ... திண்ணையில் படித்த நீ சென்னையில் படித்த என்னையா எதிர்க்கிறாய்?" அடிக்கத் துணிந்தார் முதலாளி.

வாய் பொத்தி நிற்கவில்லை அருணாசலம். நறுக்கென்று நான்கு வார்த்தைகள் சொன்னார்:

"செல்வந்தரே! இறைவனின் படைப்பில் எளியவன், வலியவன் என்று எவனுமில்லை. இன்று உங்களிடம் பாடம் கேட்ட பாட்டாளி இதோ ஒரு சபதம் செய்கிறேன்; உழைப்பால் நானும் உயர்வேன். உயரத் துடிக்கும் பிறரையும் உயர்த்துவேன். கல்விக் கண்களைத் திறப்பேன். எல்லோரும் ஒரே குலம் என்பதற்காக ஈதல் இசைபட வாழ்தல் என்ற வாக்குக்கு உயிர் கொடுப்பேன். இது உறுதி... வருகிறேன்..."

தலையைக் கூடத் திருப்பாமல் தடதடவென்று கடையிலிருந்து இறங்கி நடந்தார், அருணாசலம்.



"என் பையன் சொன்னதையே எதிர்த்துக் கேள்வி கேட்கிறான்."

"என்னன்னு?"

"'ஏண்டா ஃபெயிலாயிட்டே'ன்னு கேட்டதுக்கு 'நீங்க மட்டும் என்னவாம்? முதியோர் கல்வியிலே ஃபெயிலாயிட்டுதானே வந்து நிக்க றீங்க'ன்னு சொல்றான்."

— வந்தை சா. இரா. மணி.

தாய் முத்தம்மாளின் தாள் பணிந்தார். தனி வணிகம் தொடங்கத் துணிந்தார்.

ரொட்டி தயாரித்துக் கடைகளுக்கு வினியோகிக்கத் தொடங்கினார். இராப்பகல் கருதாது உழைத்தார்.

நெடுங்கடை வீதியில் ஒரு சிறு கடை திறந்தார்.

வேலைமலை நாட்டின் பல பகுதிகளுக்கும் வேலையாட்களை அனுப்பி வணிகத்தைப் பெருக்கினார். வெள்ளை மனத்துடன் அவரால் ஆதரிக்கப்பட்ட வேலையாட்களில் பலர் கொள்ளையர்களாகி, முன்னேறிக் கொண்டிருந்த அவரைச் சரசரவென்று பின்னுக்குத் தள்ளினர்.

பின்னடையாமல் —

தன்னம்பிக்கையுடன், தாய் முத்தம்மாளின் ஆசியுடன் ஒரு முகம் மதிய நண்பரின் பேருதவியால் மீண்டும் அதே வணிகத்தில் தலைதூக்க ஆரம்பித்தார் அருணாசலம்.

அப்போது —

இரண்டாம் உலகப் போர் நடந்து கொண்டிருந்தது.


கருமமே கண்ணாகக் கடுமையாக உழைத்தார். பல இடங்களுக்கும் சரக்குகளை சப்ளை செய்து பெருஞ் செல்வம் கொழித்தார்.

'உயர வேண்டும்... உயர வேண்டும்' என்ற மந்திரம் அவருள் சதா ஒலித்துக் கொண்டேயிருந்தது.

அங்கங்கே வணிகக் கிளைகள் ஆரம்பித்தார்.

அவரது ஆரம்பம் அறிந்தவர்கள், மூக்கின் மேல் விரல் வைத்தனர். உயரப் பறந்த அவரைத் தலைதூக்கிப் பார்த்தனர்.

கல்லூரிக் காளையான தன் மகன் பரமசிவத்திற்கு அலர்மேலுவை மணம் முடித்து வணிகப் பொறுப்பில் ஈடுபடுத்தினார். மகள் மயிலாம்பிகையைக் குமரகுரு என்னும் கீர்த்தி வாய்ந்த டாக்டருக்கு மணம் முடித்தார்.



தன் செழிப்பைக் காண, தாய் முத்தம்மாளும் இல்லத்தரசி உண்ணாமுலையும் இல்லாமற் போய்ச் சேர்ந்து விட்டார்களே என்று அவரது மனச்சிலந்தி அவ்வப்போது வலை பின்னியது.

செல்வச் சிகரமேறியும் செருக்கின்றி, 'ஈஸ்வரன் கொடுத்ததை இரும்புப் பெட்டியில் வைத்துப் பூட்டுதல் இழிவானது' என்ற விருது வாக்கியத்தைத் தன் மூச்சாக்கினார்.

'இல்லை என்று வந்தார்க்கு இல்லை' என்று சொன்னாரில்லை.

கணக்கின்றிக் கல்விக்குக் கொடுத்தார். ஏழை மாணவர்களுக்குப் பாடப் புத்தகங்களும் உடைகளும், நோட்டுப் புத்தகங்களும் நிறைய வாரி வழங்கினார்.

தன் நெருங்கிய நண்பரான பூங்குளம் யோக சுந்தரப் புலவர் மூலம் ஏராளமான மாணவர்களின் கல்விக் கண்களைத் திறந்தார்.

இலவச மாணவர் இல்லங்கள் ஏற்படுத்தினார்.

எப்போதோ அவர் தம் வணிக முதலாளியிடம் செய்த சபதம் எப்போதும் அவரது நினைவுக் கடலில் வாழும் அலையாய் ஜீவித்தது. அதுதான் மேன்மேலும் கல்விக்கான காரியங்களில் அவரை ஈடுபடுத்தியது.

தாயின் அன்பு எல்லை கடந்தது. அதற்கு ஈடாக வேறு எதையும் சொல்ல முடியாது. கடவுள் மக்களிடம் காட்டும் கருணைக்குக் கூட தாயின் அன்பைத்தான் மாணிக்க வாசகர் உவமையாகச் சொல்லுகிறார். பால் நினைந்தூட்டும் தாய் என்று திருவாசகத்தில் சொல்லியிருப்பதைப் பாருங்கள்.

ஆசிரியை நிலையிலே இருந்த ஒரு தாய் தெய்வத்தாய்—

தன் உயிரைத் தியாகம் செய்து மக்களை எப்படிக் காப்பாற்றினார் என்னும் அரிய உண்மையை நாம் தெரிந்து கொள்ளலாம்.

மார்டின் புரூம்பா என்னும் ஆங்கில அறிஞர் பண்பு என்பது பற்றி எழுதிய நூலில் இந்த ஆசிரியை பற்றிக் கூறுகிறார்.

அந்த ஆசிரியை பைன் மரக்காட்டில் வெகு தூரத்திலிருந்த ஒரு கிராமத்தில் பாடசாலை ஒன்று நடத்திக் கொண்டிருந்தார். அந்தப் பாசாலைக்குக் கதவும் கிடையாது. ஜன்னலும் கிடையாது. குழந்தைகள் மரக்கட்டையின் மீதே உட்கார்ந்திருந்தார்கள்.

நெடுங்கடை வீதிப் பெருங்கடையை ஓரிரவு அருணாசலம் மூடிக் கொண்டிருந்த போது கோட்டைக்கெதிரில் ஓட்டல் நடத்தும் சமூக நற்பணியாளர் பாலசுப்பிரமணியாளர் ஒடிசலான ஒரு பையனை அழைத்து வந்து —

ஐயா... இந்தப் பையன் பெயர் நீலமணி. இவனுக்குப் புதுச்சேரி மெடிகல் காலேஜில் படிக்க இடம் கிடைத்திருக்கிறது,'' என்றார்.

''அப்படியா... நல்லது...!'' கைலாகு கொடுத்து நீலமணியின் முதுகில் தட்டினார் அருணாசலம்.

''இவனுக்குப் படிக்க வசதியில்லை ஐயா. அதனால்...'' என்று இழுத்தார்.

''பீடிகையே வேண்டாம், பாலசுப்பிரமணியனாரே. முடிக்கும் வரை நீலமணியின் எல்லா வகைச் செலவுகளையும் நானே ஏற்றுக் கொள்கிறேன். கவலையை விடுங்கள்,'' என்று மகிழ்ச்சியுடன் தெரிவித்தார், வள்ளல் அருணாசலம்.

தடாரென்று அவருடைய கால்களில் விழுந்து தன் முகத்தைப் பதித்து வணங்கித் தன் கண்ணீரால் கழுவினான் நீலமணி.

ஆதுரத்துடன் அவன் தோள்களைப் பற்றி அவனைத் தூக்கி நிறுத்தி, ''தம்பி! ஞான ஒளி உன் முகத்தில்வீசுகிறது. உன்னைப்பார்த்த கணமே என்னுள் ஏதோ ஒரு பொறி தட்டியது. அதை இன்னதென்று என்னால் விளக்க இயலவில்லை...'' நா தழுதழுக்கக் கூறினார் அவர்.

''நான் விளக்குகிறேன் ஐயா. தன்னுடைய வியாபாரத்தில் எதிர்பாராமல் ஏற்பட்ட பெருத்த நஷ்டத்தால் பெருங்கடனாளியான — ஒரு காலத்தில் தங்கள் முதலாளியாயிருந்தவரு



ஆசிரியைக்கு நாற்காலி கிடையாது. குளிர்காலத்தில் வெப்பம் உண்டாக்கக் கணகணப்பு அடுப்பும் கிடையாது. பிப்ரவரி மாதம் ஒரு நாள் பெரும்புயல் காற்று அடித்தது. தாங்க முடியாத குளிராயிருந்தது.

ஆனால் அந்த அம்மையார் ஒரு நிமிடமும் தயங்கி நிற்காமல், குழந்தைகளின் மீது குளிர்ந்த காற்றுப் படாமலிருப்பதற்காக வாசலில் போய், குழந்தைகளைப் பார்த்துத் திரும்பிக் கொண்டு நின்றார்.

ஆனால் அவருடைய அன்பே அவருடைய உயிருக்கு உலை வைத்து விட்டது. கபசுரம் ஏற்பட்டு ஒரு வாரத்துக்குள் இறந்து போனார். குழந்தைகள் எல்லாம் அவருடைய கல்லறையின் மீது ரோஜா மலர்களைப் பரப்பி வைத்தார்கள்.

— அன்புப்பழம் நீ.

டைய கடைசி மகன் இந்தப் பையன்... நீலமணி...'' என்றார் பாலசுப்பிரமணியனார்.

கண்கள் பனிக்க நீலமணியின் கைகளைப் பற்றிய அருணாசலம் —

''தம்பி... நான் இந்த நிலை அடைய சாஸ்வத அனுபவத்தை எனக்கு வழங்கிய முதலாளி உன் தந்தையார்,'' என்றார்.

''அதிர்ச்சி தாங்காத என் தந்தை எங்கள் குக்கிராமத்தில் போன மாதம் மாரடைப்பால் காலமாகி விட்டார். என் அண்ணன்கள் ஆறு பேரும் உழைப்பை மதிக்காமல் ஆடம்பரச் சிறையில் அடைந்து, இன்று நடுத் தெருவில் நிற்கிறார்கள். என்னை உங்களிடம் அழைத்து வந்திருக்கும் இப்பெருமகனார், எந் தந்தை உங்களை ஒரு காலத்தில் அசிங்கமாய் நடத்தியதைச் சொன்னார். உங்களை இழித்தும் பழித்தும் பேசியவரின் மகனுக்கு இவ்வளவு உதவி செய்து உயர்வாய் நடத்துவீர்கள் என்று நான் கிஞ்சித்தும் எதிர்பார்க்கவில்லை... இன்னா செய்தாரை ஒறுத்தல்... என்றாரே வள்ளுவர்... அதை நீங்கள்... நீங்கள்...'' என்று மீண்டும் அவருடைய கால்களைப் பிடித்துக் கொண்டு கதறினான் அவன்.

குன்று செய்த பிழைக்குக் கூழாங்கல் என்ன செய்யும்? பல்லோர்க்கும் பயன்படும் - படிப்பைப் படிக்கப் போகும் உன்னைப் பரம்பரைக் குணம் தொற்றாமலிருந்தால் போதும். கவலைப்படாதே. உன் கல்விக்கு நான் கண்ணாக இருப்பேன்... எழுந்திரு!'' தன் கன்னங்களில் தத்தளித்த கண்ணீர்த் துளிகளை வலது கை ஆள்காட்டி விரலால் தட்டியவாறு நீலமணியைத் தொட்டார் வள்ளல் அன்னமங்கலம் சடையப்ப அருணாசலம்.

மேதைகள் சிரிக்க வைக்கிறார்கள்!

நான் ஒரு முட்டாள்!

பல நாட்கள் உணவை மறந்து, தன் ஆராய்ச்சியில் மூழ்கிக் கிடப்பார் விஞ்ஞானி நியூட்டன்! ஒரு நாள் நியூட்டனின் நண்பர் வந்து, நியூட்டனுக்காக வைக்கப்பட்டிருந்த உணவைச் சாப்பிட்டுச் சென்று விட்டார். அரை மணி கழித்து சாப்பிட வந்த நியூட்டன், உணவுத் தட்டுகள் காலியாகக் கிடப்பதைப் பார்த்து விட்டு, 'நான் ஒரு முட்டாள்...! சாப்பிட்டதைக் கூட மறந்து விட்டு, மறுபடியும் இங்கேயே சாப்பிட வந்திருக்கிறேனே!?' என்று தன்னைத் தானே நொந்து கொண்டார். நண்பர் விவரம் கூறிய பின்னரே, நியூட்டனுக்கு விஷயம் தெரிய வந்ததாம்!





மெத்த கடினம்

குத்துச்சண்டைவீரர்ஜோ—லூயியிடம், ஒரு நிருபர், "நீங்கள் இதுவரை நடத்திய குத்துச் சண்டைகளிலேயே அதிகமாக உங்களைச் சிரமப்படுத்தியவர் யார்?" என்று கேட்க, அதற்கு ஜோலூயி, "எல்லாம் வருமானவரி அதிகாரிதான்!" என்றாராம்!

யாரந்த டாக்டர்?

இத்தாலியின் பிரபல நூலாசிரியர் பிராண்டல்லோ ஒரு சமயம் நோயுற்றிருந்தார். உள்ளூர் டாக்டர் ஒருவர், ஆசிரியருக்கு மருந்து கொடுத்து ஆறுதல் கூறினார். "பயப்படாதீர்கள்! சில ஆண்டுகளுக்கு முன்னால் எனக்குக் கூட இதே மாதிரிதான் ஆபத்தான நோய் உண்டாயிற்று. ஆனாலும் நான் குணமடைந்து விட்டேன்!" என்று முடித்தார் டாக்டர்.

"அது சரிதான் டாக்டர்...! ஆனால் உங்களுக்கு வாய்த்த அதே டாக்டர் எனக்கும் இல்லையே!?" என்றார் நூலாசிரியர்!

யூதரும் கழுதையும்

'இங்கிலாந்தின் பெரிய யூதர்' — எனப் பெயர் பெற்ற டிஸ்ராலி, ஒரு காலத்தில், பிரிட்டிஷ் பிரதம மந்திரியாயிருந்தார். அப்போது, சூயஸ் கால்வாய் வெட்டுவதற்குத் தம் அரசு நிதி அளிக்கப் போவதாக, காமன்ஸ் சபையில் அறிவித்தார். இதைக் கேட்டதும், எதிர்க் கட்சித் தலைவர், "சூயஸ் நாடு, யூதரும் — குரங்குமே வாழத் தகுதியுடையது!" எனக் கிண்டலாகக் கூற, டிஸ்ராலி சிறிதும் தயங்காமல், "அப்படியானால், நானும், நீங்களும் சேர்ந்தாற்போல அங்கே போய் விடுவோமே!?" என்றார்.

ஐரோப்பாவில் நாஸினி என்ற நாடக நடிகரிடம், நண்பர், தன் வீட்டு விருந்துக்கு அழைத்திருந்தார்! நடிகருக்கு விருந்தில் பண்டங்கள் கால் வயிற்றுக்குக் கூடப் போதவில்லை!

விருந்து முடிந்தவுடன் நண்பர், நடிகரிடம் உபசாரமாக, 'தாங்கள் மறுபடியும் என் வீட்டிற்கு விருந்துண்ண வர வேண்டும்' என்று கூற, நடிகரோ, 'ஆகா! அதற்கென்ன! தாராளமாய் வருகிறேன்! ஏன்? அதை இப்போதே தொடங்கி விடுகிறேனே!' என்றாரே பார்க்கலாம்!





சுய விலாசம்

புகழ்பெற்ற ஆங்கில ஆசிரியர் செஸ்டர்டன் ஞாபகமறதி உள்ளவர். சொந்தமாகப் பத்திரிகை ஒன்றும் நடத்தி வந்த அவர், தினமும் காலையில் தமது அலுவலகத்திற்குப் போவது வழக்கம். ஒருநாள் தம் அலுவலகம் எங்கிருக்கிறது என்பது அவருக்கு மறந்து போய் விடவே, பத்திரிகை விற்கும் கடை ஒன்றுக்குச் சென்று, தன் பத்திரிகையின் பிரதி ஒன்றை விலைக்கு வாங்கி, அதில் தன் அலுவலகம் இருக்குமிடத்தைப் பார்த்துத் தெரிந்து கொண்ட பின்னரே அலுவலகம் சென்றார்.

நல்லவேளை, தன் பத்திரிகையின் பெயரையாவது மறக்காமலிருந்தாரே!

குழப்படி மணியடி

பிரபல விஞ்ஞானி தாமஸ் எடிசன் புதிதாகத் தொடங்கிய தன் தொழிற்சாலையில் சுவர்க் கடிகாரம் ஒன்று பொருத்தினார்.

தொழிலாளர்கள் எல்லோரும் அதையே பார்த்துக் கொண்டிருந்தனரே தவிர, வேலை ஓடவில்லை!

இதைக் கண்ட எடிசன், பல கடிகாரங்களை வாங்கி வந்து, தொழிற்சாலையின் பல இடங்களில் பொருத்தினார்! அவை ஒவ்வொன்றும் ஒவ்வொருவிதமான மணியைக் காட்ட, இக் குழப்பத்தைக் கண்ட தொழிலாளர்களுக்கு மணி பார்ப்பதிலிருந்த ஆர்வமே போய் விட்டதாம்!





பாரசீகக் கவிஞர் ஜாமியை மகாகவி என மக்கள் புகழ்வார்கள். அவர் ஆண்டவனை நோக்கிக் கூறும் பாவனையில், "என் நினைவெல்லாம் நீயே நிரம்பியிருக்கிறாய்! எனவே, என் பார்வைக்கு எதிர்ப்படுவதெல்லாம் நீயாகவே எனக்குத் தெரியும்!" என்றார். கூட்டத்திலிருந்த குறும்பனொருவன், 'உங்கள் கண் முன்னர் ஒரு கழுதை வந்தால்?' எனக் கிண்டலுடன் கேட்டான்! கவிஞர் அவனை நோக்கி, 'நீயாகவே எனக்குத் தெரியும்' என்றார். குறும்பன் வெட்கித் தலை குனிந்தான்.

காத்திரு!

அமெரிக்காவின் 'இண்டியானா' மாநிலத்தில் பஸ் கார்களுக்காக நடப்பட்டிருந்த சாலை எச்சரிக்கைப் பலகையில்,

'பள்ளிக்கூடம் — குழந்தைகளைக் கொல்லாதே!' என்றும், அடுத்த வரியில்,

'ஆசிரியருக்காகக் காத்திரு!' என்றும் எழுதப்பட்டிருந்தது!

விதி விலக்கு

ராணுவத்துக்கு ஆள் சேர்ப்பதென்றால், உடல் நலம், உயரம், கனம், முதலான சோதனைகளைச் செய்கிறார்கள். உலகத்தின் சிறந்த இராணுவ மாமேதைகளுக்கு மட்டும் இம்மாதிரியான தேர்வுகளில் அவர்கள் நிச்சயம் தேறியிருக்கவே மாட்டார்கள். காரணம்—

பிஸ்மார்க் — அளவுக்கு அதிகமான உடல் எடை உடையவர்!

ஜார்ஜ் வாஷிங்டன் — பொய்ப் பற்கள் கட்டிக் கொண்டவர்!

ஜூலியஸ் சீசர் — காக்கை வலிப்பு நோய் உடையவர்!

நெப்போலியன் — வயிற்றில் புண் உடையவர்,

நெல்ஸன் — ஒற்றைக் கை, கண் உடையவர்,

வில்லியம் கெய்ஸர் — சூம்பிய கைகளையுடையவர்,

வெலிங்டன் — உடல் எடை குறைவாயிருந்தவர்!

ஆதாரம்: 'முல்லை முத்தையாவின் நகைச்சுவை விருந்து'
தொகுப்பு: வி. சுந்தரராமன்

போட்டி தேவைதான்...

"அப்பா அப்பா, எனக்கு ராமு போட்டிருக்காப்பல ஒரு பாலியஸ்டர் ஷர்ட் வேணும்பா. ரொம்ப நல்லாயிருக்குப்பா," என்றான் கோபு.

"என்ன விலையாம்?" என்றார் கோபுவின் தகப்பனார்.

"நூறு ரூபாதான்."

"சரி, பார்ப்போம் போ," என்றார் கோபுவின் அப்பா.

துள்ளிக் குதித்துக் கொண்டு விளையாட ஓடினான் கோபு.

கோபுவின் அம்மா, கோபுவின் அப்பாவைப் பார்த்துச் சொன்னாள். "என்னங்க இது, நீங்க அளவுக்கதிகமாக் கோபுவுக்குச் செல்லம் கொடுக்கறீங்க. கேட்டதெல்லாம் சரி சரின்னு வாங்கிக் கொடுக்கறீங்க."

"நம்ம பையன் யார்கிட்டே போய்த் தன் ஆசையைச் சொல்வான்?" என்றார் அப்பா.

"அதுக்கில்லைங்க, நம்ம பையனுக்கு நாமதான் செய்யணும். ஆனா நாமோ மாதச் சம்பளம் வாங்கிக் காலம் தள்ளறவங்க. நினைச்ச போது நினைச்சதை வாங்க முடியுமா? ராமு பணக்கார வீட்டுப் பையன். அதனால நினைச்சதை நினைச்ச போது வாங்க முடியுது."

"நம்ம கஷ்டம் கோபுவுக்குத் தெரிய வேணாம். அவன் நல்லா படிச்சு முன்னுக்கு வந்தா போதும்," என்றார் அப்பா.

"அப்பாவும் பிள்ளையும் எப்படியோ போங்க," என்றாள் கோபுவின் தாயார்.

"அப்பா அப்பா, ராமு நாளைக்கு



கௌசல்யா ரங்கநாதன்

சினிமா போறான். எனக்கும் பணம் கொடுங்கப்பா.''

''சரி, போய் வா,'' என்றார் அப்பா.

இன்னொரு நாள், ''அப்பா அப்பா, ராமு புதுசா வந்திருக்கிற லேட்டஸ்ட் மாடல் ஷூ வாங்கிருக்காம்பா. எனக்கும்...'' என்று இழுத்தான்.

''எப்படியும் நூறு ரூபாய்க்குக் கம்மியாய் இருக்காது. பணமில்லை கையில். சரி, எப்படியும் ஒரு வாரத்தில் உன்னையே கடைக்கு அழைச்சிக்கிட்டுப் போய் வாங்கித் தரேண்டா கோபு.''

வாங்கிக் கொடுத்தார், கோபுவின் அப்பா.

மறுபடி ஒரு நாள், ''அப்பா அப்பா...'' என்றான் கோபு.

''என்னத்துக்கு அடி போடறே?'' என்றாள் கோபுவின் தாயார்.

''அப்பா கிட்டத்தானே கேட்கிறேன், உனக்கென்ன?'' என்றான் கோபு.

''அப்படியெல்லாம் பெரியவங்களைப் பார்த்து மரியாதைக் குறைவா பேசக் கூடாதுடா கோபு,'' என்றார் அப்பா.

''சாரி அப்பா. அப்பா, எனக்கு ராமுவைப் போல...'' என்று இழுத்தான் கோபு.

''தெரியும்டா. சைக்கிள்தானே? வாங்கித் தரேன். ஆனா இப்ப இல்லை. போனஸ் வரட்டும்.''

''இல்லையப்பா. எனக்கு இப்பவே வேணும்.''

''இதுவரை நீ கேட்டதெல்லாம் ஐம்பது, நூறு ரூபாய்க்குள்ளதான். அதுவே எனக்குக் கஷ்டம். ஆனா எப்படியோ புரட்டி நீ கண்கலங்கக் கூடாதுன்னு வாங்கிக் கொடுத்தேன். ஆனா இப்ப நீ கேட்கிறது சைக்கிள். எப்படியும் ஐந்நூறு ரூபாயாவது வேணும். அதான் போனஸ் வரட்டும்னு சொல்றேன்.''

அழ ஆரம்பித்தான் கோபு. அவனைச் சமாதானப்படுத்த முடியவில்லை.

அன்றிரவு சாப்பிடாமல் படுத்துக் கொண்டான்.

மறுநாள் கோபுவின் அப்பா சைக்கிள் வாங்கித் தந்தார்.

ஒரு மாதம் போயிருக்கும். வாசலில் ஒருவன் வந்து நின்று கோபுவின் அப்பாவைத் திட்டினான்.

''கொஞ்சம் மன்னிச்சுக்குங்க. சீக்கிரமே கொடுத்திடறேன்..''



என்று கோபுவின் அப்பா கெஞ்சினார்.

''ஏய்யா, பணம் கடன் வாங்கத் தெரியுது. சொன்னா சொன்ன நேரத்தில் கொடுக்க வேணாம்? உப்புப் போட்டுச் சோறு தின்னலை?'' என்றான்.

இதற்குள் வாசலில் கூட்டம் கூடியது. அப்பா மௌனமாய்த் தலை குனிந்து கண்ணீருடன் நின்றார்.

''சீக்கிரமே கொடுத்திடறேன். தயவு பண்ணி மன்னிச்சுக்குங்க,'' என்றார் அப்பா மறுபடியும்.

''சரி, பத்து நாள் டயம் தரேன். அதுக்குள்ள அசல் ஐந்நூறும், வட்டியும் கொடுத்திடணும். இல்லையோ,



நடக்கிறதே வேற,'' என்றான் வந்தவன்.

கோபு எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டு நின்றான்.


''என்னப்பா இதெல்லாம்?'' என்றான்.

''உனக்குச் சைக்கிள் வாங்கக் கடன் வாங்கினேனே அதுதான்... சரி சரி, நீ போய் உன் படிப்பைக் கவனி. நான் பார்த்துக்கிறேன்,'' என்றார் அப்பா.

''என்னை மன்னிச்சிருங்கப்பா. ராமு ஒவ்வொண்ணா வாங்கற போது போட்டி போட்டுக்கிட்டு நானும் வாங்கி அவன்கிட்டே காட்டணும்னுதான் உங்களைக் கஷ்டப் படுத்திட்டேன் அப்பா. நம் குடும்பக் கஷ்டம் தெரியாமல்...'' என்றான் கோபு.

''குழந்தைங்க ஆசைப்பட்டதை வாங்கிக் கொடுக்க வேண்டியது பெற்றோர் கடமைதான். ஆனா அவரவர் சக்திக்கு முடிஞ்சதைத்தான் வாங்கிக் கொடுக்க முடியும். ராமுவின் அப்பா பெரிய பணக்காரர். நினைச்ச போது, நினைச்சதை வாங்கித் தர முடியும். ஆனா நான்? மாசச் சம்பளக்காரன். இருந்தாலும் குழந்தை நீ ஆசைப்பட்டதை வாங்கிக் கொடுக்கத்தான் கடன் வாங்கி இப்படி அவமானப்பட்டேன். போட்டி மனப்பான்மை இருக்க வேண்டியதுதான். எதில் தெரியுமோ? படிப்பில். ராமு வாங்கற மார்க்குகளுக்கு மேலே நீ வாங்கணும்னு போட்டி போடணும். வகுப்பில் முதல் மாணவனா வரணும்னு போட்டி போடணும். ஆனா இது மாதிரி விஷயங்களில் அல்ல,'' என்றார் அப்பா.


கடிதம் எழுது!...



கடிதத் தாளின் இடப்பக்கம்
கவனம் கொண்டு நாளென்னும்
குடிகொண் டுள்ள ஊர்ப்பெயரும்
குறித்தே அதனைத் தொடங்கிடுக!

முடிவில் இனிய சொல்லின்கீழ்
முதிர்ந்தத் தமிழில் உன்பெயரும்,
கடிதத் தாளின் முன்பக்கம்
கருத்தாய்ப் பெறுநர் முகவரியும்,

தெளிவாய் எழுதி ஒட்டிடுக!
தெரிந்து அஞ்சல் செய்திடுக!
அழகாய்ச் செல்லும் பெறுநரிடம்...!
அவரும் பெற்று மகிழ்வாரே!



— கோவி. மகுடேசுவரன்
திருப்பூர்.

பூந்தாவனக்

நீதிப்பாதை




நீதிப் பாதை மீது செல்லு
நல்ல தம்பியே!
சதிகள் உன்னை எதிர்க்கும் போது
தளர்ந்து விடாதே!

நீதி நேர்மை கல்வி நமது
வாழ்க்கைக் கடமைகள்,
காந்தி போன்று நீயும் தியாகி
ஆக வேண்டுமே!


பாச நேசம் உனக்கு வேண்டும்
சின்னத் தம்பியே!
தேசம் மீது பற்று கொள்ளு
நேரு காந்தி போல்.

தெய்வம் உண்டு என்பதை நீ
உணர்ந்திட வேண்டும்,
ஐயமற்ற கல்வி என்றும்
கற்றிட வேண்டும்.



— த. அருள் சிவபாலன்
செங்கல்பட்டு.





மலைமகள்

உலகத்தைக் காக்கும் உமையவளே
உள்ளம் கவர்ந்த மலைமகளே
ஈசனை மணந்த ஈஸ்வரியே
இன்பம் நல்கிடும் இனியவளே


அகிலம் முழுவதும் நிறைந்தவளே
அழகொளி வீசிடும் சங்கரியே
கார்முகில் வண்ணனின் சோதரியே
கருணை மிகுந்த அம்பிகையே

அனுதினம் உன்னை வழிபடுவோர்
அல்ல லுடன்வினை தீர்ப்பவளே
மகிழ்ச்சி தந்திடும் நாயகியே
மகேஸ்வரி யேதுணை புரிந்திடுவாய்!

— தே. நீலாம்பரி
கடலூர்.


கவியரங்கம்

கடமையைச் சொல்லுது



தவழ்ந்து வரும் மேகம் — அது
எதனைச் சொல்லுது?
தவழ்ந்து செல்லும் மகிழ்வை — அது
கவரச் சொல்லுது.

வளர்ந்து செல்லும் நிலவு — அது
எதனைச் சொல்லுது?
ஊக்கத்துடன் புகழையே — நாம்
அணைக்கச் சொல்லுது




பறந்து செல்லும் பறவை — அது
எதனைச் சொல்லுது?
மாண்பு தரும் உழைப்பைப் பின்
பற்றச் சொல்லுது



பாடிச் செல்லும் குயில்தான் — அது
எதனைச் சொல்லுது?
பண்புடனே பெரியோரை நாம்
போற்றச் சொல்லுது!

— செ. வே. பாலாஜி விஸ்வநாத
வில்லிவாக்கம்.



ஆடிப் பாடும் பூங்கா — இது
ஆசை மிக்க பூங்கா.
மலர்கள் நிரம்பி யிருக்கும்,
மணமும் பரந்து இருக்கும்.

இனிய கதை பேசிட,
இன்பத் தென்றல் வீசிட,
செடி கொடிகள் ஆடிட,
குயில் களெல்லாம் பாடிட!

ஆடிப் பாடும் பூங்கா — இது
ஆசை மிக்க பூங்கா.
பச்சைப் பசேல் புல்லும்,
பார்ப்போர் மனத்தை அள்ளும்.


மானும் அங்கு துள்ளும்,
மனத்தை வந்து கிள்ளும்;
ஆடிப் பாடும் பூங்கா — இது
ஆசை மிக்க பூங்கா!



— மா. விஜயகுமார், பாப்பிரெட்டிப்பட்டி.



நல்ல கொக்கு



வெள்ளை வெள்ளைக் கொக்கு பார்;
விளங்கும் அழகுக் கொக்கு பார்;
கொள்ளை கொள்ளை ஆசையைக்,
கொடுக்கும் நல்ல கொக்கு பார்!

ஊசி போல அலகினால்,
உணவு தேடும் பறவையாம்;
பாசி படர்ந்த குளங்களில்,
பார்த்து மீனைப் பிடிக்குமாம்!

ஒற்றைக் காலில் நிற்பதேன்?
உயர்ந்த தவம் செய்யவோ?
வெற்றிக் காலம் சொல்லவே,
விளக்கும் பாடம் அல்லவோ?

பாலின் வெள்ளை பார்த்தும்ஏன்
பாத கமாய்ச் சுடுகிறார்?
நாளும் உறவுப் பறவையாய்,
நாமும் போற்றிப் பாடுவோம்!



— தியாகசாந்தன், புதுக்கோட்டை.

பாரதி வழியில் நடந்திடுவோம்!



பாரதி புகழைப் பாடிடுவோம்!
பாரதி வழியில் நடந்திடுவோம்!

சுதந்திர தாகம் கொண்டு பல
சுவைதரும் பாடல் பாடிவைத்த,
மாதர் உயர்ந்திடப் பாடுபட்ட,
மழலை விரும்பும் கவிபடைத்த,

பாரதி புகழைப் பாடிடுவோம்!
பாரதி வழியில் நடந்திடுவோம்!

கண்ணன் பாட்டுத் தந்தவராம்!
கண்ணம்மாவை நினைந்தவராம்!
பாப்பாப் பாட்டு, குயில்பாட்டு,
பாஞ்சாலி சபதம் நமக்களித்த,

பாரதி புகழைப் பாடிடுவோம்!
பாரதி வழியில் நடந்திடுவோம்!

— கிருஷ்ணப்ரியா, அம்மாபேட்டை.



பூனைக்குட்டி வருகுது!

பூனைக்குட்டி வருகுது,
புஸு புஸென்று இருக்குது;
பஞ்சு போல வெண்மையாம்;
பாதம் மட்டும் செம்மையாம்!

கண் இரண்டைப் பார்க்கையில்,
கவனம் செல்லும் திராட்சையில்;
காதுடனே வாலும் கொஞ்சம்,
கறுப்புப் பூசி இருக்குது!

பதுங்கிப் பதுங்கி வருகுது;
பக்கத்திலே நிற்குது;
பாலை நானும் ஊற்றவே,
பாய்ந்து வந்து குடிக்குது!

ஒட்டியிருந்த வயிறு கொஞ்சம்,
உப்ப லாகத் தெரியுது!
உற்சாகமாய் மீண்டும் எங்கோ,,
ஓடிச் சென்று மறைந்தது!



— ஜி. மீனாட்சி, காஞ்சிபுரம்.

வண்ணத் தோட்டத்தின் வானம்பாடிகள் (14)

— பூதலூர் முத்து —

பக்கத்தும் அரவிந்தனும் காவல் அதிகாரியின் அருகே நிற்பதைப் பார்த்து அதிர்ச்சியடைந்த வேலப்பன், அவர்களுக்குத் தெரியாமல் உடனே வேறு வழியாக வெளியே வந்து ஓட நினைத்தான்.

'சைக்கிளை விட்டுச் சென்றாலும் தொல்லைதான். முன்பே புகார் இருப்பதால் வீணான பிரச்னை உருவாகும்', என்று எண்ணிய அவன் சைக்கிள்கள் நெருக்கமா நிறுத்தப் பட்டிருந்த அந்த இடத்திற்குச் சென்று சைக்கிளைப் படாத பாடுபட்டு எடுத்துக் கொண்டு சாலைக்கு வந்தான்.

பீட்டரும் அலியும் வேலப்பன் பதற்றத்தோடு வேகமாகச் செல்வதைப் பார்த்து விட்டார்கள். அவர்கள் தாமோதரனிடம் ஓடி வந்தார்கள்.

அவர் ஒரு காவலரை அழைத்தார். வேலப்பன் ஓடும் திசையைச் சுட்டிக் காட்டி அவனைப் பிடிக்குமாறு கட்டளையிட்டார்.

காவலர் தன்னை நோக்கி வேகமாக வருவதைக் கண்ட அவன், அவசரமாகச் சைக்கிளில் ஏறி மிதித்துக் கொண்டு சென்றான். நெஞ்சு 'திக் திக்' என்று அடித்துக் கொண்டிருந்தது. அந்தப் பதற்றத்தில் ஓர் ஆட்டோவில் மோதினான். சைக்கிள் ஆட்டோவின் பக்கம் விழுந்தது; அவன் எதிர்த் திசையில் விழுந்தான்.

முட்டியில் கை வைத்தவாறு எழுந்தான். அங்கங்கே சிராய்ப்பு ஏற்பட்டிருந்தது. மணிக்கட்டுப் பகுதியில் நல்ல வலி!

ஆட்டோ, சைக்கிளைச் சற்றுத் தூரத்திற்கு இழுத்துச் சென்றது. பச்சை வண்ணம் சில இடங்களில் தேய்ந்து போய்ச் சிவப்பு வண்ணம் தெரிந்தது.

ஆட்டோ நின்றதும் காவலர் ஓடிச் சென்று சைக்கிளை நிமிர்த்தி எடுத்துக் கொண்டு வந்தார். வேறுவழியின்றி வேலப்பனும் அவரோடு வந்தான்.

காவல் நிலையத்திற்கு வந்ததும் அவனுடைய சிராய்ப்புக்கு மருந்திடப்பட்டது.

"தம்பி, மணிக்கட்டுப் பகுதியைப் பிடித்துப் பார்த்தாயே... இரத்தம் கட்டியிருந்தாலும் இருக்கும். வலி எப்படி இருக்கிறது என்று பார்க்கலாம். மேசை மீது உள்ளங்கையை இப்படி அழுத்திக் காட்டு," என்றார் காவலர்.

அவர் காட்டிய இடத்தில் ஒரு தாள் இருந்தது. அதன் மீது உள்ளங்கையை வைத்து அழுத்தினான்.

"அழுத்தும்போது வலி எப்படி இருக்கிறது?"

"வலி அவ்வளவாக இல்லை."

வலித்தாலும் சொல்ல முடியாத சூழ்நிலை அது. தவித்துக் கொண் டிருந்தான்.

பக்கத்தில் இருந்த வேறு ஓர் அறைக்கு அவனைப் போகச் செய்தார்கள்.

அவன் போன பின், மேசை மீது வைத்த தாளை எடுத்துப் பத்திரப் படுத்திக் கொண்டார்கள். அதில் அவனுடைய கைரேகை பதிவாகி யிருந்தது.

சைக்கிளை எடுத்து 'மெட்ரோ' என்ற எழுத்துக்களை நீக்கி விட்டுப் பார்த்தபோது 'அட்லஸ்' என்ற எழுத்துக்கள் தெரிந்தன.

பல்பீர் சிங் கண்காட்சிக்கு வந்தார்.

'எதையும் நன்றாகச் செய்ய வேண்டும்; இன்னும் செம்மையாகச் செய்ய வேண்டும். இது தாழ்ந்த சமுதாயம், இது முன்னேற வேண் டும் என்ற அக்கறையோடு நேரம் காலம் பார்க்காமல் உழைக்க வேண் டும்; பணியாற்ற வேண்டும்; பாடுபட வேண்டும்,' என்று நினைப்பவர் அவர். அதற்கு அவரே முன்மாதிரியா கத் திகழ்ந்தார்.

கண்காட்சியின் அமைப்பு அவருக் குப் பிடித்திருந்தது. அதன் நிர்வாகப் பணிகளில் ஈடுபட்டிருந்தவர்களை அங்கேயே மனம் திறந்து பாராட்டி னார்.


பகத் சிங்கின் சைக்கிள் பற்றிய செய்தி அவருடைய காதுக்கு வந்தது. காவல் நிலையத்திற்கு விரைந்தார்.

தாமோதரன் அவரை வரவேற்று அமர வைத்தார்; நிகழ்ந்தவற்றை எடுத்துரைத்தார்.

"நாளை உங்கள் வீட்டுக்குச் சைக் கிள் வந்து விடும். இப்போது இந்தப் பையனின் தந்தைக்குச் செய்தி அனுப்புகிறேன். அவர் வரட்டும்."

அதைக் கேட்ட பல்பீருக்கு வருத்த மாக இருந்தது.

"வேண்டாம் தாமோதரன். இந்தப் பையன் ஏதோ ஒரு சூழ்நிலையின் காரணமாகச் செய்த பிழையைப் பெரிதுபடுத்த வேண்டாம். இவன் ஏதாவது ஒரு வேலைக்குப் போய்



முன்னேற நினைக்கலாம் அல்லவா? இது ஒரு கறையாக இருந்து முன்னேற்றத்தைக் கொடுத்து விடக் கூடாது பாருங்கள்.''

தாமோதரனின் இதயம் சிலிர்த்தது. பலர் 'தன்பெண்டு தன் பிள்ளை சோறு வீடு' என்று வாழ்கின்ற இந்த உலகில் இப்படியும் ஒரு மனிதரா? தம் பிள்ளையின் விலை உயர்ந்த சைக்கிளைப் பற்றியோ, தம் பிள்ளைக்கு ஏற்பட்ட மனத்துயரைப் பற்றியோ எண்ணாமல், துன்பத்தை விளைவித்தவனுடைய எதிர்கால வாழ்க்கையைப் பற்றிக் கவலைப் படுகிறாரே!

''காவல் நிலையத்துக்கென்று சில நடைமுறைகள் உள்ளன. அவை உங்களுக்குத் தெரியும்.''

''நான் அவற்றை மீறச் சொல்ல வில்லை. இந்த விஷயத்தை மென்மையாகக் கையாளும்படி சொல்கிறேன். இந்தப் பையனை நீங்கள் கண்டித்து அறிவுரை கூறுங்கள். இவனுக்கு ஏதேனும் உதவி தேவைப்பட்டால் நானும் தியாகராஜனும் செய்யத் தயாராக இருக்கிறோம். மன்னிப்போம்; மறப்போம்; நன்மை செய்வோம். இதுதான் எங்கள் கொள்கை!''

அதைக் கேட்ட தாமோதரனின் வியப்பு மேலும் கூடியது.

இந்த உலகில் குண்டூசி காணாமற் போனால் கூடச் சிலர் இரத்தக் கொதிப்புக்கு உள்ளாகி விடுகிறார்கள். சின்னச் சின்ன விஷயங்களெல்லாம் அவற்றைக் கையாளும்போது உருவாகும் தவறான அணுகுமுறையால் பெரிதாகி விடுகின்றன; சிலரை நிரந்தரமான குற்றவாளிகளாக்கி விடுகிறார்கள்.

பல்பீர் போன்றவர்களுடைய அணுகுமுறை வேறுபட்டது. அதன் மூலம் குற்றவாளுகளும் நல்லவர்களாகி விடுவார்கள். ஆனால் இது போன்ற வாய்ப்புக்களை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ளும் பண்பு வேலப்பன் போன்றவர்களுக்கு உண்டா?

சிந்தித்தார் அவர்.

பல்பீர் சென்ற பின்னர் அவனை அருகில் அழைத்தார். ''உன்னைப் பற்றிய உண்மை பல்பீருக்குத் தெரியாமல் இருக்கலாம். ஆனால் எனக்குத் தெரியும்.''



அவன் திகைத்தான்.

''ஒரு சைக்கிள் வாங்க முடியாத அளவுக்கு உங்கள் வீடு வறுமையில் வாடுகிறதா? வறுமையின் காரணமாக — இல்லாமையின் காரணமாக நீ இந்தச் செயலைச் செய்தாயா? எனக்குத் தெரியும், இது சிந்தனையின் வறுமை. உயர்ந்த எண்ணங்களை எண்ணுவதற்கே கஞ்சத்தனம் காட்டுகிற சமுதாயம் இது. பின்னர் உயர்ந்த செயல்கள் எப்படி உருவாகும்?''

அவன் மௌனமாக நின்றான்.

''நீ பள்ளியில் படிக்கிற மாணவன். அதனால் உன் பொறுப்புணர்ச்சியும் பண்பும் இன்னும் மேம்பட வேண்டும். இன்னாருடைய பையன் என்பதோடு இன்ன பள்ளியில் படிக்கிற பையன் என்றும் குறிப்பிடுவார்களே? பெற்றோருக்குப் பழி வருவதோடு பள்ளியின் பெருமையும் அதனால் பாழாகுமே!'' மனம் வருந்திக் கூறினார் அவர்.



''என்னால் பள்ளியின் பெயருக்குக் களங்கம் ஏற்பட்டால் நான் பள்ளியை விட்டே நின்று விடுகிறேன் சார்!'' அவன் போலியாக ஓர் உணர்ச்சியை உருவாக்கிக் கொண்டான்.

''தம்பி, நீ பள்ளியை விட்டு நின்று விடுவதால் யாருக்கு என்ன பயன்? விளக்கினால்தான் பித்தளைப் பாத்திரம் ஒளி விடும். படித்தால் தான் மனிதர்கள் பண்புடையவர்களாக மாற முடியும். பள்ளிக் கூடம் தான் மிக உயர்ந்த தேவாலயம். அங்கே பயில்வதும் நடமாடுவதும் ஓர் இனிய அனுபவமல்லவா? நின்று விடுகிறேன் என்கிறாயே!''

''பள்ளியில் எது நடந்தாலும் எல்லோரும் என் மீதுதான் பழியைப் போடுகிறார்கள். நன்றாகப் படிக்க வேண்டுமென்பதுதான் என்னுடைய ஆசை. ஆனால் மாணவர் சிலருக்கு என்னைக் கண்டாலே வெறுப்பு..'' வேதனையில் வாடுபவனைப் போல நடித்தான்.

''அது எப்படித் தம்பி 'சும்மா' பழியைப் போடுவார்கள்? பொழுதை வீணாகக் கழிப்பவர்கள், பொழுது போகவில்லையே என்று கவலைப் படுகிறவர்கள் ஆகிய இவர்கள்தாம் அடுத்தவர் மீது பழியைப் போட்டுக் கொண்டிருப்பார்கள். பள்ளிக் கூடத்தில் அப்படி யாரும் இருக்க மாட்டார்களே! கல்வராயன் மலையில் தேன் கூட்டில் கல்லெறிந்தது யார்? அதுவும் வீண்பழிதானா?''

அதைக் கேட்ட அவன் குளவி கொட்டியதைப் போல அதிர்ச்சியடைந்தான். 'தேன் கூட்டுச் செய்தி

இவருக்கு எப்படி வந்திருக்கும்?' யோசித்துக் கொண்டிருந்தான்.

தாமோதரனின் பையன் எட்டாம் வகுப்பில் படிப்பதும் சுற்றுலாவில் அவன் கலந்து கொண்டதும் வேலப்பனுக்குத் தெரியாத விஷயங்கள்!

''இனிமேல் அப்படியெல்லாம் செய்ய மாட்டேன் சார்.''

அந்தச் சொற்கள் இதயத்திலிருந்து வரவில்லை. பதில் சொல்ல வேண்டும் என்பதற்காகச் சொன்னான்.

''மாணவர் சிலர் உன்னை வெறுப்பதாகக் கூறுகிறாய். அதற்கு என்ன காரணம்? அதை எப்போதாவது நினைத்துப் பார்த்தாயா? காவல் துறையைப் பொறுத்தவரை நாங்கள் எதையும் ஒரு முறைக்குப் பலமுறை ஆய்வு செய்துதான் முடிவெடுப்போம். குற்றவாளிகளை உருவாக்குவது எங்கள் நோக்கமல்ல. குற்றமிழைப்பவனும் திருந்தி வாழ வேண்டும் என்பதுதான் எங்கள் நோக்கம். நீ இனிமேல் திருந்தி நடந்தால் அது எல்லோருக்கும் மகிழ்ச்சியளிக்கும்.''

முகத்தைத் துடைத்துக் கொண்டு காவல் நிலையத்தை விட்டு வெளியே வந்தான் அவன்.

ராமு பணியாற்றும் சிறுவர் நூலகத்திலிருந்து செல்வராசு வந்து கொண்டிருந்தான். அதைப் பார்த்த வேலப்பனுக்குச் சினம் கொழுந்து விட்டெரிந்தது. 'நம் உப்பைத் தின்கிற இவன் ராமுவோடும் அரவிந்தனோடும் தொடர்பு வைத்துக் கொண்டு தீராத தொல்லை கொடுக்கிறானே!'' என்று நினைத்தான்.

அவனை அழைத்தான். ''செல்வராசு, எங்கே போய் விட்டு வருகிறாய்?''

''ராமுவையும் அரவிந்தனையும் பார்த்து விட்டு வருகிறேன்,'' அவன் அஞ்சாமல் பதில் சொன்னான்.

''செய்தித்தாள், வார இதழ் வேலையெல்லாம் முடிந்து விட்டதா? இரயில் நிலையத்துக்குப் போய் வந்தாயா?''

ஒரு முதலாளியின் கண்டிப்போடு கேட்டான்.


''எல்லா வேலைகளையும் முடித்து விட்டேன். உன் தந்தை உன்னைத் தேடிக் கொண்டிருந்தார். அது தொடர்பாகத்தான் இங்கே வந்தேன்.''

'கண்காட்சிக்குப் போவதாகத் தமிழ்ச்செல்வியிடம் சொல்லிவிட்டுத்தானே வந்தேன்? என்னை ஏன் தேடுகிறார்?' யோசித்தான் வேலப்பன்.

''நீ காவல் நிலையத்தில் நிற்பதை யாரோ பார்த்து விட்டு வந்து உன் தந்தையிடம் சொன்னார்களாம். அவர் உடனே விவரம் அறிந்து வருமாறு என்னை அனுப்பினார். நான் காவல் நிலையத்திற்குப் போனேன். அங்கு நீ இல்லையென்று தெரிந்தது; திரும்பினேன்.''

வேலப்பன் காவல் நிலையத்திலிருந்து நேராக மாதாகோவில் அருகே இருக்கும் தென்னந்தோப்புக்குச் சென்றான். ஆசைத்தம்பியும் அவனும் அங்கே சந்திப்பது வழக்கம். அவனை அங்கே காணவில்லை. நேரத்தோடு வீட்டுக்குப் போயிருக்கிறான்.

அந்த இடைவெளியில்தான்



செல்வராசு காவல் நிலையத்திற்குப் போய் விட்டு ராமுவின் நூலகத்திற்குப் போயிருக்கிறான்.

'காவல் நிலையத்தில் ஏன் நின்றாய்?' என்று தந்தை கேட்கப் போகும் கேள்விக்கு என்ன பதில் சொல்வது?

கல்வராயன் மலைத் தேன்கூடு, பகத்தின் சைக்கிள், காவல் நிலைய அதிகாரியின் விசாரணை — ஒவ்வொன்றாய் அவன் நினைவில் சுற்றி வந்தன.

'நான் அந்த வழியாகப் போனேன். இந்த வாரத்து அமுதம் பத்திரிகை அவர்களுக்கு வரவில்லையாம். அதற்காகக் கூப்பிட்டுக் கேட்டார்கள்,' விடை தயாராகி விட்டது.

''வேலப்பா, என்ன யோசனை? தேன்கூடு, சைக்கிள் செய்திகளைப் பற்றிக் கவலைப்படுகிறாயா?''

இவன் செய்தித்தாள் போடுகிறவனா... இல்லை செய்திகளை உடனுக்குடன் சேகரிப்பவனா?

''ஆமாம். உனக்கு எப்படித் தெரியும்?''

''அரவிந்தனும் ராமுவும் சொன்னார்கள்.''

''போய் வேலப்பனுடைய தந்தையிடம் சொல்லி விடு என்றும் சொல்லியிருப்பார்களே. அயோக்கியர்கள்!''

''வேலப்பா, நீ மிகவும் அவசரப் படுகிறாய். நிதானம் இழந்து விடுகிறாய். அவர்கள் அப்படிச் சொல்லவில்லை. 'இந்தச் செய்தி அவனுடைய வீட்டாருக்குத் தெரிய வேண்டாம். சுற்றுலாவில் நிகழ்ந்த நிகழ்ச்சியை அறிந்து அவர்கள் மனம் வருந்தியிருப்பார்கள். இப்போது இதுவும் சேர்ந்தால் அவன் மீது அவர்களுக்கு மிகுந்த வெறுப்பு ஏற்படக்கூடும். அதனால் அமைதியாக இரு,' என்று எனக்கு அறிவுரை கூறினார்கள்.''

'அவர்கள் ஏன் அப்படிச் சொல்ல வேண்டும்? புலி அமைதியாகப் பதுங்குவது பாய்வதற்காகத்தானே? இதில் ஏதோ சூது இருக்கிறது.' வேலப்பன், அவனுடைய கோணல் பாதையில் குறுகிய எண்ணம் என்ற கண்ணாடித் துண்டுகளை உடைத்துப் போட்டுக் கொண்டிருந்தான்.

''செல்வராசு, தேன் கூட்டு நிகழ்ச்சியை வீட்டில் சொல்லக் கூடாது என்று தமிழ்ச் செல்வியை எச்சரித்திருக்கிறேன். ஆசைத்தம்பியும் அருள்மதியிடம் கடுமையாகக் கூறியிருக்கிறான். வேறு யாராவது சொன்னால்தான் உண்டு.''

'பூனை கண்ணை மூடிக் கொண்டால் உலகமே இருண்டு போய் விடுமா?' அவனுடைய அறியாமையை எண்ணி செல்வராசு இரக்கப்பட்டான்.

'தேன் கூட்டு நிகழ்ச்சியை மணிவாசகம் பெரிதுபடுத்தினால்தான் உண்டு. சைக்கிள் விஷயத்தில் ஒரு வழியாகத் தப்பித்துக் கொண்டாயிற்று. ஆய்வுக்கூடத் திருட்டுக் குற்றத்திலிருந்தும் தப்பித்துக் கொண்டால்?'

வேலப்பனின் மனம் தீவிரமாகச் சிந்தித்தது.

தலைமையாசிரியர் வளவனை அழைத்தார்.

மிகப் பெரிய...

ஜெய்ப்பூரில் உள்ள மஹாராஜா சவாய் மான்சிங்—II — இன் மியூஸியத்தில் (சிடி பேலஸ்) உள்ள இந்தப் பாத்திரம்தான் உலகிலேயே மிகப் பெரிய வெள்ளிப் பாத்திரம். கின்னஸ் புத்தகத்திலும் இது இடம் பெற்றிருக்கிறது. இதன் மொத்த எடை 345 கிலோ. உயரம் 5 அடி 3 அங்குலம். சுற்றளவு 14 அடி 10 அங்குலம். கொள்ளளவு 9000 லிட்டர். 1896 — ஆம் ஆண்டு ஜெய்பூர் சிடி பேலஸில் கோவிந்த் நாராயண், மஹாதேவா என்பவர்களால் இரண்டு ஆண்டுகளாகச் செய்யப்பட்டது இந்தப் பாத்திரம். மஹாராஜா சவாய் மாதோசிங்—II, 1902 — ஆம் ஆண்டு இங்கிலாந்து சென்றார். இவர் பூஜை புனஸ்காரங்களில் மிக்க ஈடுபாடு உள்ளவர்.

தம்முடன் கங்கை நீரை இந்தப் பாத்திரத்தில் எடுத்துச் சென்றாராம், அவர் பயணம் செய்த கப்பலில்.

படம்: ஈ. ஆர். ராஜ்குமார்.

தகவல்: ஈ. ஆர். தீபலட்சுமி.

சுற்றுலா தொடர்பான செய்திகள், பகத்தின் சைக்கிள் கிடைத்த விவரம், வேலப்பனின் உள்ளத்தைச் செம்மைப்படுத்துதல் போன்றவை அவர்களுடைய உரையாடலில் இடம் பெற்றன.

''சைக்கிள் விஷயத்தில் பல்பீர் நடந்து கொண்ட விதம் மிகுந்த பாராட்டுதலுக்கு உரியது; பண்பாட்டில் உயர்ந்தது. நாம் சில சூழ்நிலைகளில் சீற்றம் கொண்டு பாய வேண்டும் என்று கூடச் சிலர் எதிர்பார்க்கலாம். நாம் காட்டுகிற நிதானம் தவறு என்று கூட நினைக்கலாம். ஆனால் நாம் பல்பீர் போன்றவர்களை வழிகாட்டிகளாகக் கொண்டு செயல்படும் போது இதற்கெல்லாம் கவலைப்பட வேண்டியதில்லை. அமைதியாக இருப்பதாலேயே நாம் ஆற்றலை இழந்து விட்டோம் என்று பொருளல்ல.''

தமிழன்பன் கூறிய கருத்து வளவனை மிகவும் சிந்திக்க வைத்தது.

'இதற்கெல்லாம் ஒரு முடிவு தெரிகிறவரை பள்ளிக்கூடத்தை இழுத்து மூட வேண்டும்; இவ்வளவு பொறுமை ஆகாது,' என்று பள்ளிக்கு வெளியே சிலர் பேசியதையெல்லாம் அவர் அறிவார். தலைமையை ஏளனம் செய்தவர்களும் உண்டு.

எலும்பில்லாத நாக்குகள் எப்படியெல்லாமோ துள்ளுகின்றன, வளைகின்றன, நெளிகின்றன. நல்ல உள்ளங்களைக் காயப்படுத்துகின்றன.

ஒரு மரத்தை ஒரு நொடியில் எளிதாக வெட்டி வீழ்த்தி விடலாம். ஆனால் ஒரு செடியை மரமாக்க எத்துணைக் காலம் எத்துணை முயற்சிகள், எத்துணைச் சூழ்நிலைகள் தேவைப்படுகின்றன!

தமிழன்பன் அதை நன்றாக உணர்ந்தவர். சோதனைகளை வென்று அவர் பள்ளியின் பெருமையை நிச்சயம் காப்பாற்றுவார். அவருக்குத் தோள் கொடுக்க வேண்டும்; துணையாக நிற்க வேண்டும்.

வளவன் உறுதியெடுத்துக் கொண்டார்.

ஆய்வுக் கூடத்தில் நடந்த களவு பற்றி அவர்கள் ஆலோசனை நடத்தினார்கள்.

''அது தொடர்பாக வந்த கடிதம் விசாரணையில் இருக்கிறதாம். அதோடு மேலும் ஒரு தடயம் கிடைத்திருக்கிறதாம். தாமோதரன் தெரிவித்தார்.''

''விரைவில் அந்தப் பொருள்கள் கிடைத்து விடும். நான் சொல்கிற ஒரு யோசனையை நீங்கள் ஏற்றுக் கொண்டால் நிச்சயம் நமக்கு வெற்றி கிடைக்கும்.''

''மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொள்வேன். சொல்லுங்கள்.'' தமிழன்பனின் சொற்களில் ஆவல் நிரம்பியிருந்தது.

காலை இடைவேளை நேரம். மாணவர்கள் ஒரு விஷயத்தை



ஆர்வத்தோடு பேசிக் கொண்டிருந்தார்கள்.

''ஆய்வுக் கூடத்தில் திருட்டுப் போன பொருள்களெல்லாம் கிடைத்து விட்டனவாம். ஆசிரியர் வளவன் சொன்னார்.''

அந்தச் செய்தி அரவிந்தன், ராமு, பீட்டர், அலி ஆகியோருடைய செவிகளில் விழுந்தது.

வேலப்பனும் ஆசைத்தம்பியும் அதைக் கேட்கத் தவறவில்லை. அவர்கள் உடனே விளையாட்டுத் திடலின் ஒரு மூலைக்குச் சென்றார்கள்.

''ஆசைத்தம்பி, என்னடா இது வேடிக்கையாக இருக்கிறது! பள்ளியில் எடுத்த பொருள்களெல்லாம் நம்மிடம் இருக்கும்போது இவர்கள் இப்படிச் சொல்கிறார்களே!''

''அதுதான் எனக்கும் புதிராக இருக்கிறது.''

''நான் பத்திரமாக வைத்திருக்கிறேன். உன்னிடம் உள்ள பொருளெல்லாம்....?''

''எடுக்கவே முடியாத அளவுக்குப் பத்திரமாக வைத்திருக்கிறேன்.''

''வளவனே சொல்லியிருக்கிறார்.''

''பள்ளிக் கூடத்தின் பெயரைக் காப்பாற்ற வேறு விதத்தில் எப்படியோ பொருள்களே வாங்கியிருப்பார்கள் போலிருக்கிறது! இனிமேல் நமக்குத் தொல்லையில்லை.''

''இதை நம்பலாம் அல்லவா?''

''நிச்சயமாக நம்பலாம். பொறுப்பில் இருப்பவர்கள் நினைத்து நினைத்துப் பேச மாட்டார்கள்.''

''நம் மீது விழுந்த பழி நீங்கி

''நீங்க டூர் போன இடத்தில் சிக்கல் வந்ததா?''

'''சிக்கல்' வந்ததும் சிங்கார வேலனைத் தரிசனம் செய்தேன்.''

— க. இராமலிங்கம்.

விட்டது. வா, நாம் மகிழ்ச்சியோடு வேடந்தாங்கல் போய் வருவோம்.''

இருவரும் தோள் மீது கை போட்டு மிகுந்த தோழமையோடு வகுப்புக்குச் சென்றார்கள்.

தேன் கூட்டு நிகழ்ச்சிக்குப் பிறகு சிந்திக்கத் தொடங்கிய ஆசைத்தம்பி, வேலப்பனை விட்டுப் பிரிந்திருக்க வேண்டும். பழகிய பழக்கம் தடுத்தது!

வேடந்தாங்கல் ஏரிக்கரை. வேலப்பனும், ஆசைத்தம்பியும் மகிழ்ச்சியோடு நடந்தார்கள்.

ஆய்வுக்கூடத்தில் எடுத்த காமிராவை வேலப்பன் தோளில் மாட்டியிருந்தான். பைனாகுலரை ஆசைத்தம்பி வைத்திருந்தான். இரண்டுமே அழகிய அமைப்புடையவை; விலை உயர்ந்தவை; தரம் மிகுந்தவை!

பைனாகுலரில் காட்சிகளைக் கண்டு மகிழ்ந்தார்கள்.

அவர்களுடைய பார்வை முழுதும் ஏரியின் உள்ளே இருந்த மரங்கள், அவற்றில் இருந்த கூடுகள், அழகிய வெளிநாட்டுப் பறவைகள், குஞ்சுகள் என இவற்றை நோக்கியே இருந்தன.

வேலப்பன் மனம் போனபடி பல படங்களை எடுத்தான்.

''அரவிந்தனுக்குத் தான்தான் பெரிய புத்திசாலி என்று நினைப்பு!''

கேலியாகச் சிரித்தான்.

''அவர் ஒரு துப்பறியும் புலி. அவருக்குத் துணையாக ராமு, பீட்டர், அலி என்று ஒரு கூட்டம். அவர்களுக்கு வேறு வேலையே இல்லை. சதா பள்ளிக்கூடம், படிப்பு, தலைமையாசிரியருக்கு எடுபிடி வேலைகள் செய்தல்!''

ஆசைத்தம்பி வழிமொழிந்தான்.

''அரவிந்தனை அறிவியல் கழகத்துக்குத் தலைவனாகப் போட்ட பின்னால் அவனுக்கு மிகுந்த திமிர். பள்ளியில் ஒரு அறிவியல் கண்காட்சி நடத்த வேண்டும் என்று, தேவையில்லாமல் அவனுக்கு ஒரு ஆசை. காணாமற்போன பொருளைத் தேடவே இன்னும் முடியவில்லை, கண்காட்சி எப்படி நடத்த முடியும்?''


வேலப்பனுடைய வினாவில் கிண்டல் தொனித்தது.

அவர்கள் இருவரும் மகிழ்ச்சியாகச் சுற்றித் திரிந்த அதே நேரத்தில், அவர்கள் சற்றும் எதிர்பாராத ஒரு நிகழ்ச்சியும் அங்கே நிகழ்ந்திருந்தது. அரவிந்தன், ராமு, பீட்டர், அலி ஆகியோர் ஏரிக்கரையின் அடர்ந்த மரங்களில் ஏறி அவற்றின் கிளைகள், இலைகளின் மறைவில் வானரங்களைப் போல அமர்ந்திருந்தார்கள்.

அவர்கள் வாயை ஊமையாக்கிக் கொண்டார்கள்; கண்களையும் செவிகளையும் கூர்மையாக வைத்துக் கொண்டார்கள்!

(அடுத்த இதழில் முடியும்)

கவிதை சொல்லும் கதைகள்



உழைப்பும் உல்லாசமும்

ஒரு சில்வண்டு. 'ரீய்ய்ய்...ங்' என்று எப்போதும் உல்லாசமாய்ப் பாடிப் பறந்தபடி பொழுது போக்குகிற சுபாவம் அதற்கு. நேரம், காலம், பருவம் — எதுவும் கிடையாது. எப்போதும் பாட்டு, பாட்டு, பாட்டுத்தான்! இளவேனில், முதுவேனில், வசந்தம் ஆகிய இந்த நாட்களில் கொஞ்சம் பாடுபட்டு உணவைச் சேமித்து வைத்துக் கொண்டால் குளிர், மழை காலங்களில் கவலையற்று இருக்கலாமேஎன்றமுன்னெச்சரிக்கை ஏதும் கிடையாது. ரொம்பக் குஷியாக ரீங்காரமிட்டபடியே சுற்றிச் சுற்றி வருமே தவிர, தன் உணவுக்காகவாவது உழைக்க வேண்டுமே என்ற பொறுப்பில்லை அதற்கு.

காலம் அப்படியே ஓடாமல், வசந்தத்திலேயே நிற்குமா என்ன? குளிர் காலமும் விரைவில் வந்தது. இப்போது சில் வண்டிற்கு, குஷியாய்ப் பாடிக் கொண்டிருக்க முடியவில்லை. காலியாய்க் கிடக்கும் தன் தானியக் கிடங்கை அப்போதுதான் அது கவனித்தது. 'சே!' என்று அலுத்துக் கொண்டு புகார் செய்தபடி முனகிற்று.

''தரை முழுக்கப் பனி மூடிக் கிடக்கு. எங்கேயும் ஒரு ரொட்டித் துணுக்கைக் கூடக் காண முடியலே! மரத்திலேயும் ஒரு துளிர் கூடத் தென்படலே! ஒரு செடியிலாவது பூ இருக்கணுமே! பூ இருந்தாத்தானே தேன் கிடைக்கும்? சுத்த மோசம். இந்தக் குளிர் காலம் ஏன்தான் வருகிறதோ? இனி இது முடியுமட்டும் என் காலம் எப்படித்தான் கழியுமோ?'' என்று அங்கலாய்த்தது. வெறுப்புடன் சுற்றிச் சுற்றி வந்தது. எங்கும் ஒரு

குழந்தைகளுக்கான ஆங்கிலக் கதைப் பாடல் களிலிருந்து தொகுக்கப்பட்ட சின்னஞ்சிறு கதைகள்
தமிழாக்கம், தொகுப்பு: வே. சபாநாயகம்

துளி ஆகாரமும் கிட்டவில்லை!

ஆண்டுதோறும் குளிர் காலம் வரத் தானே செய்கிறது? அப்போதே இந்தக் கவலை ஏற்பட்டு, தினமும் கொஞ்சம் சேமித்து வைத்திருந்தால் இந்தத் தொல்லை இராதே! ஆனால் இந்தச் சில் வண்டு சுத்த சோம்பேறி. அத்துடன் ஊதாரியும்கூட. பசித்த போது உழைக்காமல் அகப்பட்டதைச் சாப்பிட்டுவிட்டு, பாடிக் கொண்டு சுற்றி வந்தால் இப்படித்தான்! இப்போது புலம்பி என்ன செய்வது?

கடைசியில் பஞ்சமும் பட்டினியும் வருத்த, பனியும் குளிரும் உடலை வெடவெடக்கச் செய்ய, துணிந்து அதற்குத் தெரிந்த ஒரு கருமி எறும்பிடம் யாசித்துப் போயிற்று சில் வண்டு.

அந்த எறும்பு ரொம்பவும் கெட்டி. எப்போதும் சுறுசுறுப்பாய் இருப்பது. அதன் இயல்பென்றாலும் பொறுப்புடன் குளிர்காலம் வரும் முன்பே ஒவ்வொரு மணியாய்த் தேடிப் பொறுக்கி வந்து, தன் இருப்பிடத்தில் நிறைய உணவைச் சேமித்து வைத்திருந்தது அது. இது சில் வண்டுக்குத் தெரியும். போய்ப் பார்த்து, பல்லைக் காட்டி, ஒரு வாய் உணவாவது பெற்று வரலாம். இல்லாவிடில் பசியால் உயிர் போய்விடும். அது மனது வைத்தால் முடியும். அப்படியே குளிர் காலம் வரை அதன் வளைக்குள் தங்கவும் இடம் கேட்டுப் பார்க்கலாம். சும்மா ஒன்றும் தர வேண்டாமே! கடனுக்குத்தான் தரட்டுமே! நாளைக்கே திருப்பி விட்டால் போகிறது! — இப்படி எல்லாம் சிந்தித்தபடியே எறும்புப் புற்றை அணுகியது வண்டு.

நல்ல வேளையாய் எறும்பு இருந்தது. சில் வண்டு தன் நிலைமையைச் சொல்லிக் கடனாக ஒரு வாய் உணவும், தங்க இடமும் தருமாறு கெஞ்சியது. ஆனால் எறும்பு ஒன்றும் அவ்வளவு ஏமாளியல்லவே! அது தீர்மானமாகச் சொல்லிற்று.


"இதோ பார் நண்பா! நீ எனக்குச் சிநேகிதன்தான். ஆனால் நான் உன்னைவிடச் சிறியவன். நான் எப்போதும் யாரிடமும் கடன் வாங்குவதே இல்லை! கடனும் கொடுப்பதில்லை. ஆமாம்! இப்போது குளிர் காலம் உடலை வாட்டுகிறது என்று முனகுகிறாயே — இதமான கோடைக் காலத்தில் ஏதும் முன் யோசனை தோன்றவில்லையா? அப்போதெல்லாம் என்ன செய்து கொண்டிருந்தாயாம்! ஏதும் சேமித்து வைக்கவில்லையா?"

"இல்லையே! அப்போது எவ்வளவு குஷியாக இருந்தது தெரியுமா? மனம் ரொம்ப லேசாக இருந்தது. சுற்றிலும் இயற்கை எவ்வளவு பரவசமாக இருந்தது தெரியுமா? கவலையே இல்லாமல் இரவும் பகலும் பாடிக் கொண்டே சுற்றி வந்தேனே!" என்று அந்தப் பசிக் கிறக்கத்திலும் பெருமையடித்துக் கொண்டது வண்டு.

"இராப்பகலாகப் பாடிக் கொண்டிருந்தாயா? பேஷ்! அப்போது ஒன்று செய். இப்போது இராப் பகலாக ஆடிக் கொண்டே காலத்தை விரட்டியடி!" என்று முகத்தில் அடித்த மாதிரி சொல்லிவிட்டு, தன் புற்றுக்குள் அவசரமாய்த் திரும்பி விட்டது எறும்பு. பாவம் சில் வண்டு பசியாலும் அவமானத்தாலும் வாடிப் போயிற்று. வேறு என்ன செய்ய முடியும்? உழைக்காமல் வாழ்பவர்கள், உணவு இல்லாமல் வாட வேண்டியது தான். உல்லாசம் ஒரு போதும் உதவிக்கு வராது.

ஆண்டவன் கட்டளை

ஒரு வானம்பாடி. சதா பாடிக் கொண்டே இருக்கும். அதன் இனிய இசையில் ஊரே மயங்கிக் குதூகலம் பெற்று நிற்கும். பாட்டு — இராப்



பகல் ஓயவே ஓயாது.

ஒருநாள் இருட்டு தொடங்கும் மாலை. திடீரென்று அதன் பாட்டு நின்றது. பசி அதன் வயிற்றைப் பிசைய ஆரம்பித்ததுதான் காரணம். ஒரு முள்புதரின் உச்சியில் அமர்ந்து அது சுற்றுமுற்றும் பார்த்தது; எங்கேயாவது புழு — பூச்சி தென்படுகிறதா என்று தேடியது. அதோ! கொஞ்ச தொலைவில் ஏதோ 'பளிச்' 'பளிச்'சென்று மின்னிக் கொண்டிருக்கிறதே!

அது ஒரு மின்மினிப் பூச்சி! வானம்பாடிக்கு உயிர் வந்தது. அப்பாடா! இரை கிடைத்து விட்டது. சாப்பிட்டு விட்டுப் பழையபடி தொடர்ந்து பாடலாம்! மறுகணம் 'வீச்'சென்று புதர் உச்சியிலிருந்து சாய்வாக விமானம் மாதிரிப் பறந்து சரிந்து இரையை அடைந்தது; குனிந்து அதைக் கொத்த முயன்றது.

மின்மினிக்குத் தன் நிலைமை புரிந்துவிட்டது. 'சரி! அவ்வளவுதான் நம் வாழ்க்கை இத்துடன் முடிந்து போயிற்று!' என்று தீர்மானித்து விட்டது. ஆனாலும் அதன் வாய் ஜாலம் கொஞ்சம் அதனைப் பேசத் தூண்டியது.

''ஐயா, ஐயா! கொஞ்சம் பொறுங்கள்!'' என்று பவ்யமாக வானம்பாடியைக் கேட்டுக் கொண்டது.

''என்ன?'' என்று அவசரப்பட்டது வானம்பாடி.

''கொஞ்சம் தயை கூர்ந்து நான் சொல்வதைப் பொறுமையாய்க் கேட்டருள வேண்டும்,'' என்று கெஞ்சியது மின்மினி.

''சொல்லு சீக்கிரம்! எனக்குப் பசிக்கிறது!'' என்று அவசரப்படுத்தியது வானம்பாடி.

''ஐயா! என் வெளிச்சம் அழகாய் இருக்கிறது அல்லவா? நீங்கள் அதை ரசிக்கிறீர்கள்தானே?'' என்றது மின்மினி.

''ஆமாம்! அழகாய்த்தான் இருக்கிறது!'' என்றது வானம்பாடி.

''நானும் கூட உங்களது தேனினும் இனிய இசையை ரசிக்கிறவன்தான்!'' என்று புகழ்ச்சியாகப் பேசியது மின்மினி.

''அதற்கென்ன வந்தது இப்போது?'' என்று பொறுமை இழந்து கேட்டது வானம்பாடி.

''இரண்டு பேருமே இறைவனது படைப்புக்கள்தான். உங்களுக்கு அற்புதமாய் இசை கற்பித்தவனும் எனக்கு அழகான பச்சை வெளிச்சத்தை அளித்தவனும் ஒரே இறைவன் அல்லவா?'' என்று நயமாய்க் கேட்டது மின்மினி!

''ஆமாம்! அதனால்...'' என்று இழுத்தது வானம்பாடி.

''உங்களது இனிய கானத்தால் நீங்களும், எனது கவர்ச்சியான ஒளியால் நானும் இந்த இரவை இனிமையாகவும் மகிழ்ச்சியாகவும் ஆக்க வேண்டும் என்பது ஆண்டவன் கட்டளை அல்லவா?'' என்று கனிவாகக் கேட்டது மின்மினி.

வானம்பாடிக்குப் பொறி தட்டியது மாதிரி இருந்தது. அடடா! என்ன அற்புதமாய்ப் பேசுகிறது இந்த மின்

பிலி! உண்மைதானே? ஆண்டவன் கட்டளை உலகை மகிழ்விக்க வேண்டும் என்பதுதானே? அதை விட்டு விட்டு அழிப்பதாவது?

மறுபேச்சு எதுவும் அது பேசவில்லை. ஒருகணம் அசையாமல் நின்று, பிறகு, 'விர்'ரென்று எழுந்து பறந்தது. வேறு ஆகாரம் கிடைக்காமலா போய்விடும்?



தன்முதுகு

ஒரு வான் கோழிக்குத் தினமும் கிடைக்கிற உணவு அலுத்துப் போய் விட்டது. வழக்கமான ஆகாரம் கிடைக்கிற களஞ்சியமான தெருக்களை விட்டு விட்டு ஒரு காட்டுக்குள் நுழைந்தது. அதன் பின்னாலேயே 'குடுகுடு' வென்று அதன் குஞ்சுகள் அணி வகுத்து ஓடின.

''நெருங்கி என் பக்கத்திலேயே வாருங்கள்'' என்றது தாய்க் கோழி. ''இந்தக் காட்டுக்குள்ளே இருக்கிற சின்னக் குன்றில் சுவையான உணவுகள் உள்ளன. அதோ பாருங்கள். நீக்ரோக்கள் போலக் கன்னங்கரிய கட்டெறும்புகள்! லட்சக்கணக்கிலே இந்த எறும்புகள் இங்கே இருக்கின்றன. பயப்படாமல் என்னைப் போலவே வாரி விழுங்குங்கள்.'' என்று குஞ்சுகளைத் தூண்டியது.


குஞ்சுகள் 'பரபர'வென்று ஓடி வந்தன. ''நம் வாழ்க்கை எவ்வளவு அதிர்ஷ்டமானது தெரியுமா? எல்லோரும் பார்த்துப் பொறாமைப் படுகிற வாழ்க்கை நம்முடையதுதான். ஆனால் இந்தப் பாழாய்ப் போன மனிதர்களின் கத்திக்குத் தப்ப வேண்டுமே! கிறிஸ்துமஸ் பண்டிகை அவர்களுக்கெல்லாம் மகிழ்ச்சியான நாள். ஆனால் நமக்கோ அந்த நாள் நம் ஆயுளைக் குறைக்கிற எமன். நத்தைகளையும் மசாலாக்களையும் நம்மோடு சேர்த்து விருந்து தயாரித்து விடுவார்கள் இந்தப் பாவி மனிதர்கள். இந்தப் பாவத்தைச் செய்வதில் ஏழை, பணக்காரன் என்ற பேதம் கிடையாது.'' என்றது தாய்க்கோழி.

தூரத்தில் வான் கோழியின் அலகுக்கு எட்டாத உயரத்தில் ஒரு மரத்தில் ஊர்ந்து கொண்டிருந்த ஒரு கட்டெறும்பு சொல்லிற்று: ''அதெல்லாம் சரிதான் அண்ணாச்சி! இந்த நியாயமெல்லாம் உங்களுக்கு மட்டும்தானா? எங்களுக்கு இல்லையா? உங்கள் மனச்சாட்சிக்கு ஊரார் பாவம்தான் தெரியுமோ? உங்கள் பாவம் கண்ணில் படாதோ? முதலில் — பிறரது பாவத்தைச் சுட்டிக்காட்டு முன் — உங்களையும் கொஞ்சம் பார்த்துக் கொண்டு பேசுங்களேன்! பயங்கரமாய்ப் பாய்ந்து கொத்துகிற உங்களது அலகுகளைக் கட்டுப்படுத்தி விட்டுப் பிறகு இந்தப் பாவி மனிதர்களின் கத்தியைக் குறை கூறுங்கள். தன் முதுகில் உள்ள அழுக்கைத் துடைத்து விட்டுப் பிறகு பிறர் முதுகில் உள்ள அழுக்கைச் சொல்லுங்கள்'' என்று வான் கோழியைப் பார்த்துச் சொல்லிவிட்டு, 'சரசர' வென்று உயரே ஊர்ந்து போய் விட்டது அந்த எறும்பு.



* ஜி. சுஜாதா கௌரி, தியாகராஜபுரம்.

கே: உலகில் உள்ள ஓவியங்களில் மோனாலிசா ஓவியம்தான் அதிக விலை மதிப்புடையது என்று கூறுகிறார்களே?



ப: நோ நோ. அதையெல்லாம் தூக்கிச் சாப்பிடுகிற ஓவியங்கள் எல்லாம் வந்துவிட்டன. அண்மையில் லண்டனில் ஸோத்பி என்று ஒரு பிரபல ஏலக் கடை. அங்கே ஓர் ஓவியத்தை ஏலம் விட்டார்கள். ஏலம் என்றால் இங்கு மாதிரி எதிரில் பொருளை வைத்துக் காட்டி, பல பேரைக் கூட்டி வைத்துக் கொண்டு மேலே மேலே கேட்கச் செய்து, 'ஒரு தரம், இரண்டு தரம், மூன்று தரம்....' சொல்லித் தருவார்களே அப்படி அல்ல. இந்த மாதிரிக் கலைப் பொருட்களை ஸோத்பியில் ஏலம் விடும் போது உலகத்தில் உள்ள கலையார்வம் மிக்க பெரும் புள்ளிகளுக்கு அறிக்கை அனுப்பப்படும். அவர்கள் இருந்த இடத்திலிருந்தே தங்கள் ஏலத் தொகையைக் குறிப்பிடுவார்கள். அப்படி யார் அதிகத் தொகைக்குக் கேட்கிறார்களோ அவர்களுக்குக் கலைப்பொருள் கைமாறும். இந்த முறையில் அந்த ஓவியத்துக்கு ஏகப் போட்டியாம். கிட்டத்தட்ட 4,50,000 பவுனுக்கு விலைபோயிற்று. இத்தனைக்கும் அந்த ஓவியத்தில் அப்படி என்ன விசேஷம் என்கிறீர்களா? ஹாலந்து நாட்டின் தேசிய மலரான ட்யூலிப்பில் மூன்று பூ மட்டும்தான் இருந்தது படத்தில். இத்தனை விலை கொடுத்து வாங்கும் அளவுக்கு அது எப்படி இருந்ததோ — உங்கள் ஊகத்துக்கே விட்டு விடுகிறேன். வரைந்த ஓவியரின் பெயர்: வின்சென்ட் வான்காக். உலகிலேயே அதிக விலையுள்ள ஓவியத்தை வரைந்தவர் இவர்தான் என்ற பெருமையைத் தட்டிக் கொண்டு போய்விட்டார் வின்சென்ட் வான்காக்!

* ஜி. முருகன், சீர்காழி.

கே: சிதம்பர ரகசியம் என்றால் என்ன?

ப: நானும் உன் வயதில், அதைப் பற்றி எப்படியும் தெரிந்து கொண்டு விட வேண்டும் என்ற ஆசையில் சிதம்பரம் சென்றிருந்தேன். தில்லை நடராசரைத் தரிசனம் செய்தேன். சில பெரிய மனிதர்கள் கோவிலுக்கு வந்திருந்தார்கள். அவர்களுடன் ஒட்டிக் கொண்டேன். அவர்கள் எப்படியும் சிதம்பர ரகசியத்தைத் தேடிப் போவார்கள். கூட இருந்து நாமும் தெரிந்து கொண்டு விடலாம் என்று எனக்கு ஒரு நம்பிக்கை. என் நம்பிக்கை வீண் போகவில்லை. 'சிதம்பர ரகசியம் தரிசிக்க வேண்டும்,' என்று முன் குடுமிக்கார அந்தணர் ஒருவரிடம் ஒருவர் கேட்டார். மூல விக்கிரகத்துக்கு இடது புறம்



என்று ஞாபகம் — ஒரு பட்டுத் திரையை விலக்கிக் காட்டினார் அவர். உன்னிப்பாய்ப் பார்த்தேன். வெறும் தளம் மாதிரித்தான் தெரிந்தது. 'சிதம்பர ரகசியம் என்றால் என்ன?' விளக்கும்படி பெரியவர் கேட்க, தீட்சிதர் ரகசியமாய்ச் சொன்னார்: 'ஒன்றுமில்லை. அங்கே பஞ்சாட்சரம் பொறித்து வைத்திருக்கிறது. அதுதான் ரகசியம்,' என்றார். பஞ்சாட்சரம் என்றால் தெரியுமோ? 'நமசிவாய.' தேடித் தேடொணாத்

தேவனை என்னுள்ளே தேடிக் கண்டு கொண்டேன் என்று பாடி வைத்திருப்பது இந்த 'நமசிவாய' மந்திரத்தைத்தானே? இது தான் சிதம்பர ரகசியம் என்று நம்பிக் கொண்டிருக்கிறேன். விஷயம் தெரிந்தவர்கள் வேறுவிதமாய்ச் சொல்லி, அது ஏற்றுக் கொள்ளும்படி இருந்தால், பிறகு உனக்குத் திருத்தம் சொல்கிறேன். அதுவரை சிதம்பர ரகசியம் — 'நமசிவாய' தான்!

* **வெ. சங்கரநாராயணன், திருவண்ணாமலை.**

கே: கின்னஸ் புத்தகத்தைப் பற்றித் தெரிந்து கொள்ள ஆசை — கூறுவீர்களா?



ப: ரோஸ், நாரிஸ் மைக் வைக்ட்டர் இருவரும் இரட்டைச் சகோதரர்கள் மட்டுமல்ல; ஒரே மாதிரி வாழ்ந்தவர்கள். 1925—ஆம் ஆண்டு லண்டனில் பிறந்த இவர்கள் சேர்ந்தே ட்ரினிட்டி கல்லூரியிலும் பிறகு ஆக்ஸ்போர்டு சர்வகலா சாலையிலும் பயின்று பொருளாதாரம், சட்டத் துறையில் முதுகலைப் பட்டம் பெற்றார்கள். பி.பி.சி. தொலைக்காட்சி, வானொலி நிலையங்களில் விமரிசகர்களாய் வேலை பார்த்தார்கள். அப்போதே அப்சர்வர் என்ற பிரபல வாரப் பத்திரிகையில் எழுதி வந்தனர்.

என்ஸைக்ளோபீடியா பிரிட்டானிகாவுக்கும் விஷயதானம் செய்து வந்த இவர்கள் டன்லப் என்ஸைக்ளோபீடியா ஆஃப் ஃபேக்ட்ஸ் என்ற தொகுப்புக்கு விஷயங்களைச் சேகரித்து, ஆசிரியர்களாகவும் பணியாற்றினார்கள். அந்த அனுபவத்தில் முகிழ்த்ததுதான் இந்தக் கின்னஸ் ரெகார்டு.


தனிப்பட்ட நபரின் எந்தச் சாதனையையும் இதற்கு அனுப்பலாம். அதற்கு ஆதாரங்கள் காட்ட வேண்டும். எப்படி? அந்த நபரின் சாதனை பற்றி வெளிவந்த செய்திகளைத் தாங்கிய உள்ளூர்ப் பத்திரிகை நறுக்குகள், தொலைக்காட்சி வானொலி நிலையம் வாசித்த செய்தித் தொகுப்புக்கள், பார்வையாளர்களாய் இருந்த பொறுப்பானவர்களின் கையொப்பத் தொகுப்பு. இத்தனையும் உண்மைதான் என்று ஒரு பொறுப்பான நிறுவனத்தின் தலைவர் வழங்கும் உறுதி மொழி — இவ்வளவும் அனுப்ப வேண்டும். அவை ஆசிரியர்களுக்கும் திருப்தியளிப்பதுடன் முந்தின ரெகார்டை முறியடிப்பதாகவும் இருந்தால் அந்தச் செய்தியும் சாதனையாளர் பற்றிய தகவலும் கின்னஸ் புத்தகத்தில் இடம் பெறும். இதே முறைதான் விளையாட்டு, தொழில் சாதனை இலக்கியம் அறிவியல் போன்ற எல்லாத் துறைக்கும் பின்பற்றப்படுகிறது. ரெகார்டுகளை வெளியிடும் உரிமை மட்டும்தான் கின்னஸுக்கு உண்டே தவிர, எந்தச் சாதனைக்காகவும் எவரையும் தூண்டி விடவோ, வழிகாட்டவோ, நேரில் பார்வையிடவோ, வேறு எந்த வகை உதவி செய்யவோ துரும்பையும் கிள்ளிப் போட மாட்டார்கள். எல்லாம் சரி. கின்னஸில் இடம் பெற எந்த முகவரிக்குத் தொடர்பு கொள்வது என்றுதானே கேட்கிறாய்? குறித்துக் கொள்.

Guiness Superlative Ltd., 2, Cecil Court, London Road, Enfield, England.

முதலில் உன் சாதனையைக் கோகுலத்துக்கு எழுது; அப்புறம் கின்னஸுக்குத் தெரிவிக்கலாம்.

* **அ. மாதவன், சிவகாசி.**

கே: எங்கள் வீட்டிற்கு அருகே ஏதாவது ஸ்கூட்டர் போன்ற வாகனம் சென்றால் எங்கள் ரேடியோவில் 'குர்ர்' என்ற சத்தம் வருகிறதே. அது ஏன்?



ப: ரேடியோ இயங்குவது ஒலி அலைகளின் உதவியால். ஒரு குறிப்பிட்ட ஒலி அலையில் ஒலி பரப்பு நிகழும் போது அதே ஒலி வரிசைக்கு ரேடியோவை 'செட்டப்' செய்தால் ஒலிபரப்பாகும் இசையோ செய்தியோ நமக்குக் கேட்கிறது. இது அடிப்படை. இந்த ஒலி அலையிலேயே அக்கம் பக்கத்தில் வாகன ஒலியும் ஒன்றிக் கலந்து விட்டால், இப்படிப்பட்ட கோளாறுகள் ஏற்படும். இதைத் தவிர்க்க நம் ரேடியோவில் சில திருத்தங்கள் செய்ய வேண்டும். அதை இதற்காகவே படித்த ரேடியோ மெக்கானிக் செய்வார். நானும்தான் படித்திருக்கிறேன். ஆனால் வேறு தொழிலுக்கு வந்து விட்டேனே!

சின்ன அண்ணன்


எட்டுக்கு எட்டு
கதை: தேசபந்து
படம்: ஜெ...
5
ஊத்துக்கோட்டை... ஐ திங்க், இது ஜெகோக்கல் ஏரியாதான். வெய்ட் எ மினிட்...
பை த வை, கிட்னாப்பு கேஸ்களின் அட்ராஸ் எல்லாம் தெரியுமா?
மறுநாள் ரஞ்சித்தும் எட்டு கன்னையாவும் ஊத்துக்கோட்டையில்... ..மஃப்டியில்...
ஏயாய் இந்த ஊர்ல என்ன விசேஷம்?
பாவம், அந்த மாடி வீட்டுக்காரரு புள்ளை பட்டணத்திலே படிச்சிட்டிருந்தது. லீவிலே வந்துதாம். ஆனா ஊரு வந்து சேரலையாம். அவங்க ரெண்டு நாளாத் தேடிட்டிருக்காங்க...
வீட்டுக்கு வந்த புள்ளையைக் காணோம்னா என்னாங்க அர்த்தம்?
அதைக் கண்டுபிடிக்கத் தானே நாம வந்திருக்கோம்?...


அந்த மாடி வீட்டினுள் சுவரில் ஒரு ஜமீந்தார் படம்
சார், என் பேரு கனகராச பூபதி. பரம்பரை சொத்து. என் ஒரே பிள்ளை..
துப்பறியும் இன்ஸ்பெக்டர் ரஞ்சித் வந்தாச்சு. கவலையை விடுங்க...
..இனிமே இப்படி சின்னப்பிள்ளை மாதிரி அழக்கூடாது.
நீங்கதான் சார், எங்க சுந்தரை எப்படியாவது கண்டுபிடிச்சுக்கொடுக்கணும்.
..ம்.. கவலைப் படாதீங்க!
சரி, புள்ளை பேரு சுந்தர். மற்ற விவரம் ஏதாவது...?
பீட்டர் கான்வென்ட்லே எய்ட்த் படிக்கிறான். வீனஸ் மெட்ராசிலிருந்து வழக்கம்போல் வருறவன்தான் இந்தத்தடவை வந்து சேரலை.
ரஞ்சித் அந்த ஜமீந்தார் படத்தை உற்றுப் பார்த்தான்...


வேறெ உங்களுக்கு வேண்டாதவங்க, விரோதிங்க, இப்படி யாராவது..?
மனசாலெ கூட ஒருத்தருக்குத் தீங்கு நினைக்கிறதில்லீங்களே, நானு!
அடுத்து, சசிவர்ணத்தின் வீட்டுக்கு வந்தார்கள் ரஞ்சித்தும் சின்னையாவும்.
உங்களைப் பார்த்ததுமே, என் பிள்ளையையும் பெண்ணையும் கண்டுபிடிச்சுக் கொடுத்திடுவீங்கன்னு ஒரு நம்பிக்கை பிறந்திருக்கு.
தாங்க்ஸ், மிஸ்டர் சசிவர்ணம். அதுக்கு உங்க ஒத்துழைப்பு ரொம்பத் தேவை.
என் பிள்ளைகளுக்காக என் உயிரையே கொடுக்கத் தயார், இன்ஸ்பெக்டர்!


உங்க ஸ்பிரிட் எல்லாருக்கும் இருந்தா எங்க வேலையே சுலப மாகிவிடும். தைரியமாயிருங்க உங்களைப் பிறகு பார்க்கிறேன்.
மூன்றாவதாக சுதிவர்ணத்தின் தம்பி பீதாம்பரத்தின் வீட்டுக்குச் சென்றார்கள்–
வணக்கம் இன்ஸ்பெக்டர். அண்ணா போன் செய்தார். நானே அங்கு வர இருந்தேன்.
உங்க பிள்ளை பற்றி அவர் எல்லாவிவரமும் சொன்னார். இருந்தாலும் உங்களை வீட்டில் பார்க்கணும்னு வந்தேன்.
ஸோ கைண்ட் ஆஃப் யூ, இன்ஸ்பெக்டர். உட்காருங்க
தொடரும்.

கோடை காலத்துப் பயிர்



சங்கரின் தாய் மீனாட்சி மிகுந்த பாசத்தை வைத்திருந்தாலும் குழந்தையின் மொழியில் அதனை வெளிப்படுத்த முடியாதவள். தன் தாயின் வசதியின்மை காரணமாகப் பெரியம்மா வீட்டில் நாள் முழுவதும் உழவு மாடாக உழைத்து வளர்ந்தவள். ஏதோ ஏழைத் தங்கைக்கு இரங்கிச் செய்யும் உதவியாய், வயிறு நிறைய வைக்கோலைப் போட்டு, 'சொடேர், சொடேர்' எனச் சவுக்கடித்து, உழன்று விளைச்சலைத் தரும் உழவு மாடாய்த்தான் அவள் வளர்க்கப்பட்டாள். அப்படி வளர்ந்து ஆளாகி, இன்று சங்கருக்குத் தாயாகி, தான் வளர்ந்ததைப் போலவே தன் குழந்தையையும் வளர்க்கிறாள்.

பேச்சுப் போட்டியில் அவன் முதல் பரிசு பெற்று முகம் மலர வந்தபோதும் சரி, கணக்கில் நூற்றுக்கு நூறு எடுத்த போதிலும் சரி, திருக்குறள் ஒப்புவித்தல் போட்டியிலும் முதலாக வந்த போதும் சரி, இப்படி சங்கர் கலந்து கொள்ளும் ஒவ்வொரு போட்டியிலும் முதன்மை பெற்று வந்திருக்கிறான். ஆனால் ஒருமுறை கூட அவனால், அவன் பெற்றோரிடமிருந்து பாராட்டுப் பெற முடிவதில்லை. முதல் முறையாகப் பரிசு பெற்றுப் பாராட்டை எதிர்பார்த்து ஏமாந்து ஏங்கியிருந்த சங்கர், தொடர்ந்து ஏமாற்றங்கள் வந்து கொண்டேயிருக்கவே, ஏக்கங்கள் மேலே மேலே படித்து நன்கு திடமாகி, அசையாத அழுத்தமாகி விட்டான்.

நண்பர்களுடன் இருக்கும்பொழுது இருக்கும் உற்சாகம், சங்கர் தன்



அ. அகிலா

வீட்டை அடையும் பொழுது கலைந்து விடுவதைப் போல் உணர்ந்தான்.

அன்று அவன் வழக்கமாய்ப் பள்ளியிலிருந்து வரும் நேரத்தை விட அதிகமானது. இருள் கொஞ்சம் கொஞ்சமாய்க் கவிழத் தொடங்கியிருந்தது.

விளக்கை ஏற்றி வைத்த மீனாட்சி, உள்ளுக்கும் வாசலுக்கும் நடந்தே காலத்தைக் கழித்தாள்.

'பள்ளிக்கூடம் முடிஞ்சு இத்தனை நேரமாறது. இன்னும் இந்தச் சங்கர் மடையனைக் காணோமே!' நெஞ்சுக்குள் அரற்றிக் கொண்டே பொறுமையிழந்தாள். வீட்டைப் பூட்டிக் கொண்டு, பள்ளியை அடைந்தால், பள்ளிக்கூடமும் பூட்டியிருந்தது; அவளுக்கு மனத்தில் பயம் 'சில்' லென்று பரவத் தொடங்கியது. வீட்டுக்குத் திரும்பி வந்தால், அன்று பார்த்து அவன் அப்பாவும் வரவில்லை.

மனத்திற்குள் கந்தர் சஷ்டி கவசம் சொல்லத் துவங்கினாள். அவள் கண்கள் வாசலிலேயே நிலைகுத்தியிருந்தன. இருள் கவிழ்த்துக் கொட்டியதைப் போல் முழுவதுமாகப் பரவிக் கிடந்தது.

சங்கர் வாசற் கதவைத் திறந்து, இன்னும் உள்வாசற்படி கூட ஏறவில்லை. இதுவரை அவளை அடக்கி வைத்திருந்த பாசமும், கவலையும் சேர்ந்து கோபமாக மாறியது. பக்கத்து வீட்டு ரமேஷ், தந்தையிடம் கணக்குக் கற்றுக் கொண்டிருந்தான். சங்கர் வீட்டிற்குள் நுழைவதற்குள் அவன் அம்மா குரலெடுத்தாள்:

''ஏண்டா பொறுக்கி, எங்கெல்லாம் சுத்திட்டு வர்றே?''

சங்கர் மௌனம் சாதித்தான்.

''வீட்டுக்கு வர்ற நேரம் என்னன்னு தெரியுமா?''

சங்கர் அவமானமாய் உணர்ந்து, பக்கத்து வீட்டு ரமேஷைப் பார்த்தான்.

''ஏண்டா, அவனுந்தான் பிள்ளை, அவனில்லை ஒழுங்கா?''

சங்கருக்கு அவன் பெற்றோரிடம் ஓர் அழுத்தமான கோபம் ஏற்பட்டி



ருந்தது. அவன் மௌனமாய்த் தன் எண்ணங்களையெல்லாம் உள்ளத்திற்குள் சொல்லிக் கொண்டுதானிருந்தான். ஆனால் அது அவன் தாய்க்குத்தான் புரியவில்லை.

''கேள்விமேல் கேள்வி கேக்கறேன். வாயை மூடிக் கொண்டா நிக்கறே ராஸ்கல்? உள்ள வா. இன்னிக்கு முதுகுத் தோலை உரிச்சுடறேன்.''

வீட்டிற்குள் சங்கர் நுழையும் பொழுது, விசிறிக்காம்பைத் தயாராக வைத்திருந்தாள். உள்ளே நுழைந்தானோ இல்லையோ, விசிறிக் காம்பின் வீச்சுக்கள் சங்கரின் மீது வீரிட்டன. அவன் கண்களில் ஒரு சொட்டுத் தண்ணீர் வர வேண்டுமே! அப்பப்பா 'என்ன ரோஷம், என்ன தன்மானம்! என்ன அழுத்தம்!

சங்கர் வழியில் வரும்போதென்னவோ, கணக்கு டீச்சரிடம் இன்று கொஞ்சம் கணக்குக் கற்றுக் கொண்டு வந்தேனம்மா. அதுதான் லேட் ஆகிவிட்டது,'' என்று சொல்ல வேண்டும் என்றுதான் நினைத்து வந்தான். ஆனால் அவன் தாய், நாலு பேர் நடமாடும் தெருவில் அவனைத் திட்டி அவமானப்படுத்திய போதே, அந்த எண்ணத்தை மாற்றிக் கொண்டு விட்டான்.

'சரி, அம்மாவுக்குத்தான் ஆத்திரம் அதிகம். அப்பாவாவது தன்னைச் சமாதானப்படுத்துவார்,' என்று எண்ணிய சங்கருக்கு அதிலும் பெருத்த ஏமாற்றம்தான்.

தாயின் போதனையில் தந்தையும், ''கேட்ட கேள்விக்குப் பதில் கூடச் சொல்லமுடியவில்லையோ துரைக்கு? எங்கே பொறுக்கிட்டு லேட்டா வந்தே?'' என்று சங்கரை அடித்து நொறுக்கினார்.

சிறிது நேர ஆழ்ந்த மௌனத்திற்குப் பின், சங்கரின் தாய் அவனிடம், ''வந்து கொட்டிக் கொண்டு போ,'' என்றாள்.

அவள் அப்படித்தான் எப்பொழுதுமே அவனைச் சாப்பிடக் கூப்பிடுவது வழக்கம். இப்பொழுது மட்டும் பதில் சொன்னான் சங்கர். ''எனக்குச் சாப்பாடு வேண்டாம்.''

''கொழுப்பு உடம்பில் ஏறிக் கிடக்கிறதாலதான் துள்ளறான். பட்டினி கிடந்தால், தானாகப் புத்தி

வரும். நீ வா, எனக்குப் போடு. ரொம்பப் பசிக்குது,'' என்று அப்பா குரல் கொடுக்கவே, அம்மா நகர்ந்து போனாள்.

இரவில்கண்விழிக்கவும்பயந்து, தூக்கமும் வராமல் சங்கர் கண்ணீர்ப் பெருக்கினான். சத்தமின்றி அழு தான். அழுத அயர்ச்சியிலேயே உறங் கிப் போனான். கசமுசவென்று தூக் கத்தில் ஏதேதோ காட்சிகள்:

விசிறிக் காம்புடன் அம்மா. சாட்டைக் குச்சியுடன் அப்பா. இரு வரும் முதுகில் வரிவரியாய்க் கோடு கள் பதிக்க, இரத்தம் கசிகிறது. பள்ளிக்கூடத்திற்குப் பக்கத்திலுள்ள இரும்புப் பட்டறையில் வேலை செய் யும் அந்தச் சிங்காரம். கண்களுக்குக் கண்ணாடி கட்டிக் கொண்டு, மத்தாப் புப் போல் சிதறும் ஒளிக் கதிர்களை இரும்பில் வைத்துப் பழுக்கக் காய்ச் சுகிறான். திடீரென்று ஏதோ கூட்டம். கூட்டத்திற்கு நடுவே யாரோ, 'நெருப்பு, நெருப்பு!' என்று கூச்ச லிட, அன்றாடம் பழுக்கக் காய்ச்சும் அந்த நெருப்பு அவனுக்கு உறவாகி விட்ட அலட்சியத்தில், 'ப்ச்... நெருப் புத்தானே!' என்று பொருட்படுத்தா மல் நின்றிருந்தான் சிங்காரம். கூட் டம் அங்கும் இங்குமாய்ச் சிதறி ஓடு கிறது. இவை எதற்குமே தொடர்பில் லாமல் அன்று காலை தமிழ் வகுப்பில் ஆசிரியரிடம் ஒப்புவித்த அதே நீதி நெறி விளக்கச் செய்யுளைக் கடகட வென்று மீண்டும் தூக்கத்தில் ஒப்பு வித்தான்:

இனியவர் என்சொலினும்
இன்சொல்லே; இன்னார்
கனியும் மொழியும்
கடுவே; — அனல்கொளுந்தும்
வெங்காரம் வெய்தெனினும்
நோய்தீர்க்கும்மெய்பொடிப்பச்
சிங்கி குளிர்ந்தும் கொலும்.


பள்ளி மணியடித்ததை அறிந்த மாணவர்கள் கூட்டம் கூட்டமாய்க் கலைந்து செல்ல, அன்று மாலை சேர்ந்து கணக்குக் கற்றுக் கொண்ட பாலாஜி, இன்று மாலையும், ''வாடா, டீச்சர் வீட்டுக்குப் போய் கணக்குக் கத்துட்டு வரலாம்,'' என்று அழைக்க, ''எங்கடா பொறுக்கிட்டு வர்றே?'' என்ற கேள்வி நினைவிற்கு வர, சங்கர் சில வினாடிகள் யோசித்து நிற்க, திடீரென்று அவனை யாரோ உலுக்கு உலுக்கு என்று உலுக்க, கண் விழித் துப் பார்த்த சங்கருக்கு, தான் தூங்கி யதைப் போலவே தோன்றவில்லை. 'எங்கடா பொறுக்கிட்டு வர்றே?' என்ற கேள்வி மட்டும் நெஞ்சில் தங்கி, மற்றவையெல்லாம் மறந்து போனது.

வழக்கம்போல் காலையில் வழி யனுப்பி வைத்த சங்கரின் தாய், இன் னும் இருள் பரவிவிட்ட இந்த வேளை யிலும் சங்கர் வராத கோபத்தில் இருந் தாள். சங்கர் அந்த இரவு முழுவதும் வரவில்லை. மறுநாள் பொழுது விடிந்து பத்து மணிக்காகக் காத்தி ருந்து, பள்ளியில் போய்க் கேட்ட போது, ''நேற்று மாலை போனவன், இன்று பள்ளி வரவில்லை,'' என்ற பதில் அதிர்ச்சியைத் தந்தது.

சங்கரின் தாய், தந்தை இருவரும் செயலிழந்தனர். நாட்கள் ஒன்று, இரண்டு, என்று அதிகமாகிக் கொண்டே வந்தன. டீ.வி., ரேடியோ, செய்தித்தாள்களிலெல்லாம் விளம் பரம் வந்து விட்டது. சங்கரைப் பற்றிய ஒரு தகவலும் வரவில்லை.

பக்கத்து வீட்டு ரமேஷின் சித்தப்பா ரகு, டீ.வி. விளம்பரத்தைப் பார்த்து விட்டு, சங்கரை நாலைந்து சிறுவர் களுடன் பீச் மணற் பரப்பில் பார்த்த தாகவும், அவனுடைய சேர்மானம் சரியில்லை என்றும், துண்டு பீடி

''ஏன் உங்க வீட்டு ஃபேன் 'குடு குடு'ன்னு சத்தம் போட்டுக்கிட்டே ஓடுது?''



''தவணை முறையில் வாங்கினோம். பாக்கியை 'குடு குடு'ங்கிறது.''

— மு. திருநாவுக்கரசு.

களைப் பொறுக்கிக் கொண்டிருந்தான் என்பதைச் சொல்வதற்கே வேதனைப்படுவதாகவும் கூறினார். சங்கரின் தாயும், தந்தையும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர். பின் பார்வதி சொன்னாள்:

''சரி இன்னிக்குச் சாயந்திரமே நாமும் பீச்சுக்குப் போய், அவனைக் கையும் களவுமாகப் பிடித்து, நாலு வாங்கு வாங்கி, இழுத்துக் கொண்டு வரலாம்.''

பிள்ளையைப் பறிகொடுத்த அந்த நிலையிலும் அப்பப்பா அவளுக்குத்தான் எத்தனை ஆத்திரம்!

''ஆனால் அது வந்து...'' ரகு இழுத்தான்.

''என்ன?'' பார்வதி கேட்டாள்.

''ஆனால் அவன் தன்னைச் சங்கர் என்று ஒப்புக் கொள்ள மறுக்கிறான். நான் ஏற்கெனவே பேசிப் பார்த்து விட்டேன். அவன் என்ன இருந்தாலும் சின்னக் குழந்தைதானே? இன்றுதான் சிறியதாய்த் துளிர் விட்டிருக்கும் இளந்தளிர். இப்படி வார்த்தையாலேயே பொசுக்கினால், அவன் எப்படிச் செழிப்பாய் வளருவான்?''

ரகு கேட்டு விட்டு அவர்களைச் சற்றுச் சிந்திக்க வைத்தான்.

'இப்பொழுது என்ன செய்யலாம்?' என்பதைப் போல் இருவரும் பார்த்துக் கொண்டனர்.

அதற்கு ரகுவே பதில் சொன்னான்: ''நாம் மூன்று பேருமே இன்னிக்குச் சாயந்திரம் பீச்சுக்குப் போய், அவ்னைப் பார்க்கலாம், அவனை அருகே அழைத்துக் கொஞ்சம் ஆதரவாய்ப் பேசுகிறேன் நான். 'இனிமேல் நீங்கள் இருவரும், அவனிடம் இனிமையாகப் பேசி, நடந்து கொள்வீர்கள்' என்று உறுதி தருகிறேன். அதை ஏற்றுக் கொண்டு நீங்களும் பேசினால், ஒருவேளை அவன் தன்னைச் சங்கர் என்று ஒப்புக் கொள்ளலாம்.''

'சரி' என்பதைப் போல இருவரும் தலையசைத்தனர்.

அன்று மாலையே ரகு சொன்னதைப் போலவே சங்கர் பீச் மணற்பரப்பில் எதையோ குனிந்து எடுத்துக் கொண்டிருந்தான். பார்வதி உடைந்து போனாள். நாலு பேர் தன்னை வேடிக்கை பார்ப்பதையும் மறந்து, ''சங்கர்...'' என்று ஓடிச் சென்று ஆரத் தழுவினாள்.

''இனிமேல் அம்மா உன்னை அடிக்கவும் மாட்டேன், திட்டவும் மாட்டேன். வாப்பா வீட்டுக்குப் போகலாம்,'' என்று கதறி அழுதபொழுது சிறு தூரலுக்காக காத்திருந்த பயிருக்கு, அமோகமாய்ப் பெய்த அன்பெனும் பெரு மழையில் முழுதுமாக நனைந்து விட்டதைப் போலிருந்தது சங்கருக்கு.

அப்பாவும், அம்மாவும் ஒவ்வொரு கையைப் பிடித்துக் கொண்டு அழைத்துச் செல்ல, ''வாங்கோ, ஆட்டோ பிடித்துப் போய் விடலாம். மழை வலுக்கும் போலிருக்கு,'' என்றான் ரகு.

ஆட்டோ வீட்டை நோக்கிச் சென்று கொண்டிருந்தது. சங்கரின்

அட்டைப்பட குட்டி

கோகுலம் அட்டைப்படத்திற்காகப் புகைப்படம் எடுக்கச் சென்றபோது ஆறே வயது நிரம்பிய சிறுவன் விஜய் தன்னைத் தன் பிரியமான இசைக்கருவி வயலினுடன்தான் படம் எடுக்க வேண்டும் என்று சொல்லிச் சில நிமிடங்களில் எல்லாம் பெரிய வயலின் வித்வான் போல் உடை அணிந்து வயலினுடன் படு அமர்க்களமாக வாசிக்க ஆரம்பித்து விட்டான்!

தாத்தாவிடமே (திரு. சுப்பராமன் தலைமை அதிகாரி, இந்தியன் வங்கி) அதிக நாட்கள் தங்கி இருக்கும் இவனுக்குத் தாத்தா என்றால் கொள்ளைப் பிரியம். அவருக்கும் இவன் என்றால் உயிர். ரொம்பச் செல்லமும் கூட.

அவனிடம் நான், ''ஏன் விஜய், வயலின் உசரம் கூட இல்லை நீ. உனக்கு எப்படி வயலின் கத்துக்கணும்கிற ஆசை வந்தது?''

விஜய் சொன்னான்: ''எங்க அம்மா ரொம்ப நன்னா வீணை வாசிப்பா. என்னையும் மொதல்ல வீணைதான் கத்துக்கச் சொன்னா. ஆனா எனக்கு என் அண்ணன் ஸ்ரீராம் மாதிரி வாசிக்கணும்னு ஆசை. அவனுக்குக் குரு திரு. டி. வி. கிருஷ்ணன் சார். என் அண்ணா ஸ்ரீராம் வாசிக்கிறதைக் கேட்டப்புறம், கத்துக்கிட்டா வயலின்தான் கத்துக்கணும் என்று தாத்தாவிடம் அடம் பண்ணினேன். அவரும் எனக்கு இத்தினி

அழுத்தம் சற்று நெகிழ்ந்திருந்தது.

''அம்மா, அன்னிக்கு ஏன் லேட்டாச்சு தெரியுமா? நானும், பாலாஜியும் இல்லை...'' தாய் தான் சொல்வதை புரிந்து கொள்கிறாளா என்று அவள் முகத்தைக் கவனித்தான்.

''நீயும் பாலாஜியும்?'' தாய் தன்னைப் புரிந்து கொள்ள முயற்சி செய்கிறாள் என்ற எண்ணத்தில் தொடர்ந்தான்:

''கணக்கு டீச்சர் வீட்டுக்குப் போய்க் கணக்குக் கத்துட்டு வந்தோம். அதனாலதான் லேட்டாயிட்டது.''

பார்வதி அன்புடன் கேட்டாள்: ''இதை ஏண்டா கண்ணா எங்கிட்ட அன்னிக்கே சொல்லலை?''

''நான் சொல்லணும்னுதான் நினைச்சேம்மா. ஆனால் பக்கத்தாத்தில ரமேஷ், அவன் அப்பா, அம்மா எல்லோர் எதிர்க்கவும் 'எங்கடா பொறுக்கிட்டு வரே?'ன்னு கேட்டியா. அதான் பதிலே சொல்லக் கூடாது'ன்னு இருந்திட்டேன். அப்பாவும் சமாதானம் பண்ணாமல் உங்க கூடச் சேர்ந்து கொண்டு என்னை அடிச்சார். அதனால நான் நிஜமாவே பொறுக்கியாயிடணும்னு முடிவு பண்ணிட்டேன்,'' என்று அவன் சொல்லி முடித்த போது, மனம் ஆறப் பொறுக்காதவளாய்ச் சங்கரை நெஞ்சோடு சேர்த்து இறுக்கிக் கொண்டாள் பார்வதி.

''அதற்குத்தான் குழந்தைகளானாலும் சரி. பெரியவங்களானாலும் சரி. யாருடைய தன்மானத்தையும் குறைத்துப் பேசவே கூடாது.''

முன் சீட்டில் உட்கார்ந்திருந்த ரகு எல்லோருக்கும் பொதுவாகச் சொன்னான்.

மேகங்கள் சூழாத நிர்மலமான வானத்தில் பரவியிருக்கும் நிலவின் ஒளி போலச் சங்கரின் முகத்தில் ஒரு வெண்மையான ஒளி பளிச்சிட்டது.

வயலின் வித்துவானிடம்

யூண்டு வயலின் வாங்கிக் கொடுத்து நல்ல மாஸ்டர் ஒருவரையும் ஏற்பாடு பண்ணினார். இப்ப நான் வாசிக்கிறது இத்தினியூண்டு வயலின்தான். ஆனால் பெரியவன் ஆனப்புறம் பெரிய வயலின் வாங்குவேன். ஸ்ரீராம் வச்சருக்காப்பல.''

''ஆமாம்! குமார் எத்தனை மாசமாக் கத்துக்கிறே?'' — இது நான்.

அதற்கு அவன், ''ஆறு மாசமாத்தான். ஆனால் ஜண்ட வரிசை வரை நன்னா நோட்ஸ் பாக்காமலே வாசிப்பேன்,'' என்று சொன்னதோடு நில்லாமல், பிரமாதமாய் வாசித்தும் காட்டினான்.

''தினமும் எவ்வளவு நேரம் வாசித்துப் பழகுவே? மாஸ்டர் தினமும் வருவாரா?'' என்று கேட்டதற்கு,

''மாஸ்டர் தினமும் ஒண்ணும் வர மாட்டார். வாரம் இரண்டு நாள்தான் வருவாரு. அதுவும் ஒரு மணி நேரம்தான் சொல்லித் தருவாரு. ஆனால் தினமும் சாயங்காலம் 6 மணிக்கு மேல் ஆரம்பித்து ஒரு மணி நேரமாவது வாசிப்பேன்.''

''அதுசரி, நீ பெரியவன் ஆனதும் என்னவாகப் போறே?'' — நான்.

''அதுவா, நான் பெரிய டாக்டர் ஆகி எல்லோருக்கும் இன்ஜெக்ஷன் போடுவேன்.'' — விஜய்.

''டாக்டர் ஆகப் போறேன்னா வயலின் எல்லாம் உனக்குச் சும்மா பொழுதுபோக்குத்தானா?'' என்றதும் அவன், ''டாக்டர் ஆனாக் கூட நான் வயலின் வாசிப்பேன். ஆமாம்... நான் வயலின் முழுசும் கத்துண்டு கச்சேரி கூடப் பண்ணுவேன்!'' என்றான் சீரியஸாக.

''ம்... அப்பமன்னா இப்பவே டீ. வி. கச்சேரி எல்லாம் பொறுமையோட பார்ப்பேன்னு சொல்லு...''

''ம்கூம். மத்தவா வாசிக்கிறதெல்லாம் நான் பார்க்கமாட்டேன். நான் வாசிக்கிறதை டீ. வி. யிலே போட்டா பார்த்துண்டே இருப்பேன். ஆனா இந்த மாண்டலின் சீனிவாசனை எனக்கு டீ. வி. யில் பார்க்க ரொம்பப் பிடிக்கும்,'' என்றான்.

''சரி... நீ தினமும் வயலின் பிராக்டிஸ் பண்றது பிடிக்காம வீட்டில் யாராவது திட்டினால் என்ன பண்ணுவே?''

''அதான் நான் வயலினை எடுத்துண்டு மொட்டை மாடிக்குப் போய்ச் சில நேரம் வாசிப்பேன். ஆனால் பாட்டி நான் சரியா வாசிக்கிறேனான்னு பார்க்க என் பக்கத்தில் வந்து உட்கார்ந்துடுவா. ஆமாம்... நான்தான் நன்னா வாசிக்கிறேனே ஏன் என்னை யாரும் திட்டப் போறா?'' என்று என்னிடமே திருப்பிக் கேட்டுவிட்டு, வயலினில் விளையாட ஆரம்பித்தன அந்தப் பிஞ்சுக்கரங்கள்.

அட்டை வண்ணப்படம், பேட்டி:

ராஜா பொன்சிங்.

ஒரு மினி பேட்டி



சார் தபால்!

◦ கோகுலம் சிறுவர் சங்கத்தினால் பிருந்தாவனத்திற்குத் தேர்வு செய்வதில் சிக்கல் ஏற்படுகிறது என்று அண்ணன் தேசபந்து அவர்கள் சொல்வதும் ஒரு வகையில் சரி தான். நானும் ஒரு கோ. சி. சங்க உறுப்பினர். தமது படைப்பு அனுப்பினால் கோகுலத்தில் இடம் பெறுமா எனத் தயங்கிய வாசகர்கள் இனித் தயக்கமின்றி அனுப்பலாம்.

ஊத்தங்கரை, பி. கோவிந்தசாமி.

◦ மக்களுக்காகத்தான் சட்டங்களேயொழிய, சட்டங்களுக்காக மக்கள் அல்ல! இந்த ஜனநாயக உண்மையை நன்கு உணர்ந்து, கோகுலம் சிறுவர் சங்க அமைப்பையே உடைக்கத் துணிந்த தங்களுக்கு எங்கள் மனமார்ந்த பாராட்டுக்கள்! நன்றிகள்!!

செட்டிக்குறிச்சி, அ. சுப்பையன்.

◦ இம்மாத கோகுலத்தின் விவாத மேடையில் இடம் பெற்ற 'அதிக மதிப்பெண்கள் வாங்குவது எப்படி?' விவாதத்திற்கு நிச்சயம் நல்ல பலன் உண்டு. இந்த வருட எச்சரிக்கை, மற்றும் இந்த வருடம் எங்களுக்குக் கிடைத்த ஊக்க டானிக்.

புதுக்கோட்டை, கே. சின்னையா.

◦ காளான் போன்ற ஊட்டச்சத்து மிக்க பயிரைச் சிறு தொழிலாகவும், பொழுது போக்காகவும் எப்படிப் பயிரிடுவது என்ற செய்முறையையும், முத்துக்குமார் அவர்கள் விளக்கிய விதம் சிறு தொழில் செய்பவர்களுக்கு வரப்பிரசாதமாகவே அமைந்தது.

இடையகோட்டை, எம். எஸ். அன்வர் அலி.

◦ விடுமுறைநாட்களில்வீணாகநேரத்தைக் கடத்திக் கொண்டிருந்த எங்களை 'மாஜிக் கத்துக்கலாம் வாரீகளா?' என்று நேரத்தை விரயமாக்காமல் புது உற்சாகத்தோடு, உல்லாச மனநிலையில் இருக்கச் செய்தகோகுலத்திற்கு எத்தனை 'சபாஷ்கள்' போடுவது?

மொரப்பூர், எம். வீரன். அ. நவ்சாத்.

◦ நேருவின் 'அருமைக் குழந்தைகளே' மிகவும் அருமை. தமது அறுபதாவது வயதிலும் தமக்கு மழலைக் குழந்தைகளிடம் இருந்த பற்றினை வெளிப்படுத்தி விட்டது அவருடைய குறிப்பு.

இடையகோட்டை, எம். முபாரக்.

◦ பதினாறுபக்கவண்ணப்படக்கதையைப் பார்த்தேன்; படித்தேன்; சுவைத்தேன். அதனால் பரவசம் அடைந்தேன்; பக்த நந்தனாரின் பக்தி கண்டு மெய்சிலிர்த்தேன்; உள்ளம் உருகினேன்; இவ்வாறான தரம் மிக்க பக்த சரித்திரத்தை எங்களுக்கு அளித்த கோகுலத்திற்கு எனது அன்பார்ந்த பாராட்டுக்கள்.

புன்செய்புளியம்பட்டி, பி. எல். கிரிஜா.

◦ தமிழ்நாட்டின் ஆரண்யக் கதைகளை — அந்த மணம் மாறாமலேயே எழுதுபவர்கள் மிகச் சிலர். அவர்களுள் குறிப்பிடத் தக்கவர் கொ. மா. கோதண்டம்.

கொ. மா. கோவின் 'மலைக்காட்டில் ஒரு மருத்துவன்' கதை — பிள்ளைகளுக்கு மட்டு மல்லாது எல்லாருக்கும் பிடித்த மாதிரி அமைந்துள்ளது.

முத்துராமலிங்கபுரம், ரா. பொன்ராசன்.

◦ செப்டம்பர் மாத 'பிருந்தாவனக் கவியரங்கம்' அனைத்தும், தேனில் ஊறிய பலாச் சுளையைப் போலச் சுவை மிக்கதாய் அமைந்து இருந்தது. பாராட்டுக்கள்.

கடலூர் — 1, எம். ரவிச்சந்திரன்.

◦ 'பாரதி போற்றும் பாரத நாடு' கட்டுரை மிக மிகச் சிறப்பாக இருந்தது. பாரதியாரின் கவித் திறமைகளை நினைவு கூரத் தக்க வகையில் மிக அழகாகத் தொகுத்தளித்திருந்தார் ஜானகி மணாளன். மொத்தத்தில் செப்டம்பர் கோகுலம் தெவிட்டாத தேன் சுவையாய் இருந்தது.

வந்தவாசி — 8, சா. இரா. மணி.

◦ அந்தக் குட்டி போட்டோ கிராபருக்கு உண்மையிலேயே பின்னால் எதிர்காலம் இருக்கிறது என்பதை அவனின் செய்கைகள் மூலம் தெரிந்து கொள்ள முடிந்தது. அவனுக்கு எங்கள் அட்வான்ஸ் வாழ்த்துக்கள்!

ஊத்தங்கரை, பி. கோவிந்தசாமி.

பரதன் அச்சகத்தில் பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக அச்சிட்டு வெளியிட்டவர்: வி. முரளி. ஆசிரியர்: கி. ராஜேந்திரன்.
நிர்வாகக் காரியாலயம்: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன்: 431543, 434157, 434190.
ஆறுமாதச் சந்தா: உள்நாடு: ரூ. 18/—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 60/—; விமானத் தபால் ரூ. 135/—.
ஆண்டுச் சந்தா: உள்நாடு: ரூ. 36/—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 120/—; விமானத் தபால் ரூ. 270/—



REGISTERED NO. TN MS (S) 281

Registered as a Newspaper in Srilanka

